மாலை 48 மணி 3 மார்ச் 2006 விலை ரூ10

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை வெளியீடு

## முழு முதல் தமிழ்த் தெய்வம் முருகன்



சொந்தவீடு குடிபுக வரம்
அருளும் சிறுவாபுரி முருகன்

சேலம் குமரகிரி
தண்டாயுதபாணி ஆலய
அருள் வரலாறு

சீலமார் பூசைசெய்த சிலந்தியார்

தலைஓரிடம் வால் வேறிடம்:
தும்பூர் அருள்மிகு நாகம்மன் ஆலய அற்புதம்



# அருள்மிகு நெல்லையப்பர்
# அருள்தரும் காந்திமதி அம்பாள் திருக்கோயில்

**திருநெல்வேலி நகர் - 627 006. போன் : (0462) 2339910**

சுவாமி : அருள்மிகு நெல்லையப்பர் (சுயம்புலிங்கம் வெட்டுண்ட தோற்றத்துடன்)

அம்பாள் : அருள்தரும் காந்திமதி அம்பாள் (நின்ற திருக்கோலம்)

தலவிருட்சம் : மூங்கில் (வேணுவனம்)

திருத்தல மகிமை : 1. இறைவன் மூங்கில் வடிவாய் இருந்து பால்குடத்துடன் சுமந்து சென்ற பக்தரை இடறிவிட்டுப் பாலைத் தன்மேல் கவிழச் செய்து வெட்டுண்டு காட்சியருளிய பெருமையுடையது.

அதனால்

2. நெல்லுக்கு வேலியிட்டுக் காத்த சிறப்புடையது.

3. இறைவன் திருநடனம் ஆடிய தாமிரசபை அமைந்துள்ள பெருமைமிக்கது.

4. பாடல் பெற்ற (திருஞான சம்பந்தர்) பாண்டிய நாட்டுத் திருத்தலங்கள் 14ல் பழம்பெருமை வாய்ந்தது.

காலம் : கி.பி. 7ம் நூற்றாண்டு, நின்றசீர் நெடுமாறன் பாண்டிய மன்னர் காலம்.

தினசரிப் பூஜைகள் : காமிகா ஆகமப்படி ஆறு காலங்கள்.

| | | |
|---|---|---|
| திருவிழாக்கள் : | ஆனி | - ஆனித்தேரோட்டம் |
| | ஐப்பசி | - திருக்கல்யாணம் |
| | மார்கழி | - திருவாதிரை |
| | பங்குனி | - செங்கோல் விழா |
| | தை | - பத்ரதீபம் |

| | | |
|---|---|---|
| கட்டண : | தேங்காய் உடைப்பு | : ரூ. 1.00 |
| விபரங்கள் | அஷ்டோத்திரம் | : ரூ. 2.00 |
| | சகஸ்ரநாமம் | : ரூ. 5.00 |
| | தங்கப்பாவாடை | : ரூ. 250.00 |

அன்னதானம் : 23.03.2002 முதல் முதலமைச்சர் அன்னதான திட்டம் சிறப்பான முறையில் நடைபெற்று வருகிறது. நாள் ஒன்றுக்கு நூறு நபர்களுக்கு அன்னதானம் போடுவதற்கு ரூ.1000/-. வருடத்தில் ஒரு நாள் அன்னதானம் போடக் கட்டளை முதலீடு ரூ. 15,000/-

இணையதளம் : www.kanthimathinellaiappar.org

மின்அஞ்சல் : kanthimathinellaippa@sancharnet.in

**திரு. சி. ஜெகதீசப் பெருமாள்,** எம்,ஏ,பி,எல்.,
செயல் அலுவலர்

**சுவாமி சங்கரானந்தா**
அறங்காவலர் குழுத்தலைவர்

அறங்காவலர்கள்

**திரு. எம்.ஜி.எஸ். ராமகிருஷ்ணா,**
**திரு. வி. வெங்கடாசலம்,**
**திருமதி. வி. சங்கரவடிவு**
**திரு. ஆ. உலகநாதன்**

# திருக்கோயில்

திருவள்ளுவர் ஆண்டு 2036 பார்த்திப பங்குனி
மாலை 48 மணி 3 மார்ச் 2006




## அன்பார்ந்த வாசகப் பெருமக்களே!

**வணக்கம்.**

**''நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்பு பாராட்டும் உலகு''** என்பது திருக்குறள்.

திருக்கோயில்களைத் தம் கண்ணெனப் போற்றிப் பராமரித்துப் பாதுகாத்து வரும் **நம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்களின் அறநிலையத்துறையின் சீரிய பணிகளைத் தமிழ்கூறு நல்லுலகம் நாளும் பாராட்டி வாழ்த்துக்களைக் குவித்து வருகின்றது.

கடந்த நாலரை ஆண்டுகளில் 4430 திருக்கோயில்களில் திருப்பணிகள் மிகச் சிறப்பாக நிறைவேற்றப்பட்டு திருக்குட நீராட்டு விழாக்கள் நிகழ்த்தப்பட்டு இருப்பது **நம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்களின் மகத்தான சாதனையாகும்.

திருக்கோவில்களுக்கு வரும் ஏழை, எளிய பக்தர்களுக்கு இலவசமாக மதிய உணவு வழங்கும் நோக்கத்துடன் அன்னதானத் திட்டம் 23.3.2002 அன்று **நம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்களின் திருக்கரங்களால் தொடங்கி வைக்கப் பெற்று மகத்தான அன்னதானத் திட்டம் தற்போது 360 திருக்கோயில்களில் மிகச்சிறப்பாக நடத்தப்பட்டு வருவது மற்றுமொரு மகத்தான சாதனை ஆகும்.

திருக்கோயில்களுக்குப் பொலிவு சேர்க்கும் திருத்தேர்கள் பழுதுநீக்கப்பட்டுப் புதுப்பிக்கப்பட்டுத் தேரோட்டம் நிகழ்த்தப்படவேண்டும் என்ற சீரிய நோக்கத்தில் 241 திருத்தேர்கள் பழுதுபார்த்துப் புதுப்பிக்கப்பட **நம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்கள் அதற்கு மானியமாக ரூபாய் 11.68 கோடி வழங்கியிருப்பது மக்கள் போற்றி வரவேற்கும் மற்றுமொரு மகத்தான சாதனை ஆகும்.

திருக்கோயில்களில் பணியாற்றும் ஊழியர்களுக்குச் சிறப்பான எதிர்காலம் அமையும் வகையில் ஓய்வு ஊதியத் திட்டத்திற்கு **நம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்கள் ஆணை வழங்கியிருப்பதும், அதைப்போல ஓய்வு பெற்ற ஓதுவார்கள், அரையர்கள், அர்ச்சகர்கள், வேதபாராயணர்கள், பூசாரிகள் ஓய்வூதியத் தொகையை ரூபாய் 500லிருந்து ரூபாய் 750 ஆக உயர்த்தி ஆணை வழங்கியிருப்பதும் அறநிலையத்துறை வரலாற்றில் பொற்காலம் இதுவே என பல்லாயிரக்கணக்கான மக்கள் போற்றிப் புகழும் மகத்தான சாதனைகள் ஆகும்.

**நம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்களின் 58ஆவது பிறந்த நாளை நாடு கொண்டாடி மகிழும் இப்பொன்னான வேளையில் நாமும் அவரைப் **''பல்லாண்டு பல்லாண்டு வாழ்க''** எனப் பரிவன்போடு போற்றி வாழ்த்திடுவோமாக!

இனிய இந்த மார்ச்சு ''திருக்கோயில்'' இதழில் **''புத்திபலம், மனோபலம், ஆத்மபலம்''** எனும் தலைப்பில் ஞானத்தேடலைப் பற்றிய புதிய கட்டுரைத் தொடரைத் தொடங்கியுள்ளார் ''எழுத்துச் சித்தர்'' பாலகுமாரன் அவர்கள்.

**''அண்டர்பதி குடியேற''** அருள்புரிந்த முருகன் அடியார்கள் சொந்தவீடு குடிபுகவும் அருள்புரிவான் என்பதை நயமுற விளக்குகின்றார் ''திருப்புகழ் அமுதன்'' ரா. கிருஷ்ணன்.

**''சிலமார் பூசைசெய்த சிலந்தியார்''** எனப் பேராசிரியர் முனைவர் செல்வராசு அவர்கள் வடித்துள்ள ஆய்வுக் கட்டுரை திருக்கோயில் வாசகர்களைப் பெரிதும் மகிழ்விப்பது திண்ணம்.

சேலத்தில் சிறந்து விளங்கும் ''குமரகிரி அருள்மிகு தண்டாயுதபாணி ஆலய'' வரலாறும், மகிமைகளும் நம்மைப்பெரிதும் பரவசப் படுத்துகின்றன.

வழக்கமாய் இடம் பெறும் அத்தனைச் சிறப்பு அம்சங்களும் பொருந்தி வெளிவரும் **இந்த ''திருக்கோயில்''** இதழும் வழக்கம்போல் உங்களைப் பெரிதும் மகிழ்விக்கும் என நம்புகின்றேன்.

அன்புள்ள


இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, உத்தமர் காந்தி சாலை,
சென்னை - 600 034.

(த. பிச்சாண்டி, இ.ஆ.ப.)
ஆணையாளர்






# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திருக்கோயில் அன்னதானத் திட்டத்திற்குநான்கு மாதச் சம்பளம் நன்கொடை

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்கள் ''திருக்கோயில் அன்னதானத் திட்டம்'' தொடங்கிய 23.3.2002 முதலாகத் தம்ஒவ்வொரு மாதச் சம்பளத்தையும் ''திருக்கோயில் அன்னதானத் திட்டத்திற்கே'' வழங்கி வருகிறார்கள்.

2005ஆம் ஆண்டு அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்கள் மற்றும் 2006ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்குரிய தம் சம்பளத் தொகை மொத்தம் 52 ஆயிரத்து 860 ரூபாயை நான்கு திருக்கோயில்களின் அன்னதானத் திட்டத்திற்கு நன்கொடையாக வழங்கி யுள்ளார்கள்.

காஞ்சிபுரம் மாவட்டம் திருப்போரூர் அருள்மிகு கந்தசாமி திருக்கோயில், திருநீர்மலை அருள்மிகு ரங்கநாதர் திருக்கோவில், வேலூர் மாவட்டம், சேண்பக்கம் அருள்மிகு செல்வவிநாயகர் திருக்கோயில், மற்றும் திருச்சி மாவட்டம் தொட்டியம் அருள்மிகு மதுர காளியம்மன் திருக்கோவில்களின் அன்னதானத் திட்டத்திற்கு **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்கள் வழங்கிய நன்கொடையை அந்தந்தத் திருக்கோவில்களின் செயல் அலுவலர்கள் தலைமைச் செயலகம் வந்து **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்களிடம் நேரில் பெற்றுக் கொண்டார்கள்.

## இதழின் உள்ளே ....


1. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திருக்கோயில் அன்னதானத் திட்டத்திற்கு நான்கு மாதச்சம்பளம் நன்கொடை 2
2. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிக்கை: 241 கோவில் தேர்கள் ரூ 11.68 கோடியில் புதுப்பிக்கப்படும் 3
3. திக்கெலாம் புகழும் திருநெல்வேலியுறை செல்வர் 4
4. கருப்பண்ணசுவாமிகள் கட்டிய சேலம் குமரகிரி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி ஆலயம் - அருள்செல்வி 5
5. கருணைத் தெய்வம் குமரகிரி முருகப் பெருமான் - பி.எம்.பிச்சை 8
6. கேள்வி - பதில் 9
7. காலச்சுவடுகள் : தலை ஓரிடம் வால் வேறிடம் தும்பூர் அருள்மிகு நாகம்மன் ஆலயம் தோன்றிய வரலாறு 10
8. புத்திபலம், மனேபலம், ஆத்மபலம் - ''எழுத்துச்சித்தர்'' பாலகுமாரன் 11
9. திருக்குறள் செல்வர் - அன்னம் பாலித்தவர் - கே.பாலசுந்தரி எம்.ஏ. 15
10. திருக்கோயில் பொருந்த ஓர் செங்கல் இடுவார் உலகாள்வார் (நீதிக்கதை) - நிறைமதி பி.எல் 17
11. திருவிளையாடல் புராணம் - இரா.அரங்கசாமி 19
12. மகாபாரதம் - முனைவர் த.அமிர்தலிங்கம் 20
13. சொந்த வீடு குடிபுக அருளும் சிறுவாபுரி முருகன் - வலையப்பேட்டை இரா.கிருஷ்ணன் 23
14. திருமந்திர உபதேசம் - திருமந்திரச் செல்வர் டி.வி.வெங்கட்ராமன் இ.ஆ.ப.(ஓய்வு) 26
15. முழுமுதல் தமிழ்த் தெய்வம் முருகன் - டாக்டர் பு.ஏ.இராமையா இ.ஆ.ப. 28
16. தமிழ் நாட்டுச் சித்தர் பரம்பரை - கருவூரார் - முனைவர் இரா.செல்வக்கணபதி 30
17. அரங்கனாருக்கு மாமனார் ஆகும் பேறு பெற்ற குலசேகராழ்வார் - இந்திரா ஆராஅமுதன் 32
18. மன்னார் கோயில் மாண்பு - சண்முக தெய்வ நாயகம் 35
19. வக்கிரங்கள் தீர்க்கும் வக்கிரகாளி அம்மன் - மு.அருணகிரி 36
20. சீலமார் பூசைசெய்த சிலந்தியார் - டாக்டர் டி.செல்வராசு 37
21. நட்சத்திர மரங்கள் - கிருஷ்ணமூர்த்தி 39
22. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிக்கை: திருவொற்றியூர் அருள்மிகு வடிவுடையம்மன் கோவிலுக்கு ரூ.30 லட்சம் செலவில் புதிய தேர் 40

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிக்கை : 241 கோவில் தேர்கள் ரூ. 11.68 கோடியில் புதுப்பிக்கப்படும்



ஒவ்வொரு கோவிலுக்கும் ராஜ கோபுரம், விமானங்கள், திருமதில், திருக்குளம், திருத்தேர் ஆகியன அழகு சேர்ப்பனவாக விளங்குகின்றன. எனது தலைமையிலான அரசு பொறுப்பேற்ற போது, இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப் பாட்டில் உள்ள பல்வேறு கோவில்களில் உள்ள மொத்தம் 830 திருத்தேர்களில், 438 திருத்தேர்கள் மட்டுமே நல்ல நிலையில் இருந்தன.

மீதமுள்ள 392 திருத்தேர்கள் பழுதடைந்த நிலையில் இருந்தன. எனது அரசு பொறுப்பேற்ற பின்பு, இதுவரை 151 திருத்தேர்கள் பழுது நீக்கப் பட்டுப் புதுப்பிக்கப்பட்டுத் தேரோட்டம் நடத்தப் பட்டு உள்ளது.

மீதமுள்ள 241 திருத்தேர்களைப் பழுது பார்த்து, புதுப்பிக்கப்பட வேண்டியுள்ளது என்றும், இத்திருத் தேர்களைச் செப்பனிட உபயதாரர்களின் ஆதரவு சொற்பமாகவே உள்ளது என்றும் எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

பழுதடைந்த நிலையிலுள்ள இத்திருத் தேர்களை செப்பனிட்டு அந்தந்தத் திருக்கோவில் அமைந்துள்ள பகுதிகளில் நின்று போன தேரோட்டம் மீண்டும் நடத்தப்பட வேண்டுமென்று ஆன்மீகப் பெருமக்கள் மற்றும் பக்தர்கள் எனக்கு வேண்டுகோள் விடுத்தனர்.

இந்த வேண்டுகோளினை ஏற்றுத் தமிழகத்தில் பழுது பார்த்து, புதுப்பிக்க வேண்டிய 241 திருத் தேர்களில், 16 திருத்தேர்களை, ரூ.83.85 லட்சம் மதிப்பீட்டில், அந்தந்தத் திருக்கோவிலின் நிதியா தாரங்களைக் கொண்டு மராமத்து செய்து, புதுப்பித்திடவும், எஞ்சியுள்ள 225 திருத்தேர்களைப் பழுது பார்த்துப் புதுப்பிப்பதற்கு 10.84 கோடி ரூபாயைத் திருக்கோவில்களின் உபரி நிதியிலிருந்து பெற்று, இந்து சமய அறநிலையத்துறையின் மூலம் மானியமாக வழங்கிட நான் தற்போது ஆணை யிட்டுள்ளேன். ஆக மொத்தம் 241 திருத்தேர்கள் 11.68 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பழுது பார்த்து, புதுப்பிக்கப்படும்.

திருநெல்வேலி நெல்லையப்பர் கோவில், வைத்தீஸ்வரன் கோவில், மாமல்லபுரம் ஸ்தலசயன பெருமாள் கோவில், புதுக்கோட்டை பிரகதாம்பாள் கோவில், கடலூர் மாவட்டம் திருச்சோபுரம் திருச்சோபுரநாதர் கோவில், நாகப்பட்டினம் மாவட்டம் நாகூர் அருள்மிகு நாகநாத சுவாமி கோவில் ஆகிய கோவில்களில் உள்ள திருத்தேர்கள் உட்பட மொத்தம் 241 திருத்தேர்கள் பழுது பார்த்து, புதுப்பிக்கப்படும் பணிகளை விரைவில் செயல்படுத்திட நான் ஆணையிட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.





## தைப்பூசத் தெப்போற்சவ விழா

மாங்காடு அருள்மிகு காமாட்சியம்மன் திருக்கோயிலில் தைப்பூசத் தெப்பத் திருவிழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் **திருமதி வளர்மதி** அவர்களும், நம் இந்து சமய அறநிலையத் துறை ஆணையாளர் **திருமிகு த.பிச்சாண்டி** இ.ஆ.ப. அவர்களும் இவ்விழாவில் பங்கேற்றுச் சிறப்பித்தார்கள். திருக்கோயில் பரம்பரை அறங்காவலர் டாக்டர் ஆர்.சீனிவாசன் எம்.டி.எஸ் அவர்களும். திருக்கோயில் துணை ஆணையாளர் திருமதி எஸ்.ஹரிப்பிரியா பி.ஏ.,பி.எல் அவர்களும் விழா ஏற்பாடுகளைச் சிறப்புறச் செய்திருந்தார்கள்.

# திக்கெலாம் புகழும் திருநெல்வேலியுறை செல்வர்



''திக்கெலாம் புகழுறும் திரு நெல்வேலியுறை செல்வர்தாமே''

என்று நெல்லை அருள்மிகு நெல்லையப்பரைத் திருஞான சம்பந்தர் போற்றிப் புகழ்வதால் இத்திருக்கோயில் 1300 ஆண்டுகளுக்கு முன்பே புகழ்மிக்க திருத்தலமாக இருந்த சிறப்பை நாம் நன்கு உணரலாம்.

வேதபட்டர் இறைவருக்குத் திருஅமுது ஆக்குவதற்கு உலரப் போட்டிருந்த நெல்லை, மழையினால் நனையாதவாறு வேலியிட்டுக் காத்தார் சிவபெருமான்.

இதனால் இத்தலத்திற்கு ''நெல்வேலி'' என்ற பெயர் உண்டானதாகத் தலபுராணம் கூறுகின்றது.

இறைவனுக்கு நெல்வேலிநாதர், நெல்லையப்பர் என்பது திருநாமம்.

மூங்கில் வனத்தில் சுயம்பு வடிவமாக இறைவர் இருந்தபோது அவ்வழியே பாற்குடம் சுமந்து சென்ற ''முழுதும் கண்ட இராமக்கோன்'' என்ற சிவபக்தனைக் கால் இடறச் செய்து நித்தமும் பாலாபிசேகம் செய்து கொண்டார் இறைவர்.

அதனால் ஐயுற்று அங்கு வெட்டிப் பார்த்த போது, வெட்டுண்ட கோலத்தோடு காட்சி தந்தருளியபடியால் சுவாமிக்கு வேணுவன நாதர் என்ற திருநாமமும் உண்டானது.

இன்றும் மூங்கில் மரமே இத்திருத்தலத்தின் தலமரமாகத் திகழ்ந்து வருகின்றது.

இத்தலத்தில் அம்பாள் காந்திமதி அம்பாள், வடிவுடையம்மை என்ற திருநாமங்கள் பூண்டு விளங்குகின்றார்.

அகத்தியர் கயிலைத் திருமணக்காட்சியைத் திருநெல்வேலியில் கண்டு இன்புற்றதாகவும் தலபுராணம் கூறுகின்றது.

இத்தலத்தில் அம்பாளைச் சிவபெருமானுக்குத் தாரை வார்த்து கொடுத்துக் கோவிந்தராஜப் பெருமாள் திருமணம் செய்து வைத்த சிறப்பினால், இங்குக் கோவிந்தராஜருக்கும் தனிச்சன்னிதி உண்டு.

சைவ - வைணவ ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டாக இத்திருத்தலம் திகழ்கிறது.

நடராஜரின் பஞ்சசபைகளில் இங்குள்ள சபை ''தாமிர சபை'' ஆகும். நடராஜர் ''தாமிர சபாபதி'' என்று அழைக்கப்படுகிறார்.

திருநெல்வேலி நகர் நடுவே 14 ஏக்கர் பரப்பளவில் பரந்து விரிந்துள்ள இத்திருக்கோயில் வருவோர்க்கு வளமும், நலமும் வாரி வழங்கும் அற்புதத் திருக்கோயிலாகத் திகழ்கின்றது.

நாள்தோறும் ஆறு காலம் பூஜைகள் சிறப்பாக நடைபெறுகின்றன. உச்சிகாலப் பூஜையின் சிறப்பு காந்திமதி அம்பிகையே - இறைவியே நேரில் வந்து சுவாமியை வழிபடுவதாக ஐதீகம். ஆகவே உச்சிகாலப் பூஜையைத் தரிசித்தால் அம்பிகையின் திருவருளும், ஐயனின் திருவருளும் ஒரு சேரப் பெற்றுப் பெருவாழ்வு பெறலாம்.

இத்திருத்தலத்தில் உள்ள ''பொல்லாப் பிள்ளையார்'' சந்நிதி மிகவும் விசேசமானது. இவரை வேண்டி 41 நாட்கள் விரதம் இருந்தால் குழந்தைப் பேறு உண்டாவது உண்மை.

குழந்தை பெற்றபின் அக்குழந்தையைக் கொண்டுவந்து, பிள்ளையார் சன்னிதியில் உள்ள சன்னல் வழியாக உட்புறமாகத் தந்து வெளியில் வாங்கும் வழக்கும் உள்ளதால் இப்பிள்ளையாருக்கு ''பிள்ளைத் துண்டு விநாயகர்'' எனவும் பெயர் வழங்குகின்றது.

இங்குளள ஆறுமுகர் சந்நிதியும் மிகவும் விசேசமானது. மயில் மீது ஆறுமுகர் வள்ளிதெய்வயானையருடன் வீற்றிருக்கும எழிற்கோலம் கண்டாலே பக்தர்கள் குறை தீரும்.

இக்கோயிலில் உள்ள சுரதேவர் சந்நிதியும் மிகவும் சிறப்புடையது. மூன்று கைகளுடன் சுரதேவர் கையில் தண்டம், மணி, சூலத்துடன் காட்சி தருகிறார்.


யாருக்கேனும் சுரம் வந்து தீராமல் வாட்டுமானால், இங்குள்ள சுரதேவருக்கு மிளகு அரைத்துச் சாற்றி வெந்நீரால் அபிஷேகம் செய்தால் சுரம் உடனே குணமாகிவிடும்.

''மருந்தவை மந்திரம் மறுமை
நன்னெறியவை மற்றுமெல்லாம்
அருந்துயர் கெடும் அவர் நாமமே
சிந்தைசெய் நன்னெஞ்சமே''

என்று திருஞானசம்பந்தர் பாடுவதால் இங்குவந்து வழிபட்டாலே தீரா நோயெல்லாம் தீர்வது திண்ணமாகும்.

# கருப்பண்ண சுவாமிகள் கட்டிய சேலம் குமரகிரி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி ஆலயம்

அருள் செல்வி




குமரகிரி தோன்றிய வரலாறு

''சாது கருப்பண்ண சாமியென் பார் முயன்று
ஓதும் குமரகிரி ஓங்கல்மேல் - மாதவர்கள்
செல்லவும் மாதண்ட பாணியைச் சேவிக்கவும்
நல்லதலம் செய்தார் நாடு''

சேலம் அம்மாப்பேட்டைக்கு அருகாக சுமார் ஒரு கி.மீட்டர் தொலைவில் நாற்புரமும் வயல்கள் சூழ்ந்த அழகிய இயற்கைச் சூழலில் மலைமேல் அமைந்து விளங்கும் அருள்மிகு குமரகிரி தண்டாயுதபாணி சாமி ஆலயத்தைக் கருப்பண்ண சுவாமிகள் கட்டுவித்த வரலாறு ஒரு அற்புத வரலாறு ஆகும்.

அம்மாப்பேட்டையில் ஒரு நெசவாளர் குடும்பத்தில் மாரியப்பர் - சின்னம்மாள் தம்பதிகளின் ஒரே தவப் புதல்வராகத் தோன்றியவர் கருப்பண்ணர்.

வள்ளியம்மை எனும் மங்கை நல்லாளை மணந்து இல்லறம் எனும் நல்லறத்தில் ஈடுபட்ட கருப்பண்ணர் ஆறு ஆண் குழந்தைகள், இரண்டு பெண் குழந்தைகள் ஆக எட்டுக் குழந்தைகளுக்குத் தந்தையும் ஆவார். நம் சைவ சமயம் வளர்த்த நாயன்மார்கள் பலரும் இல்லறத்தில் இருந்து கொண்டே அரிய அரும்பணியையும் ஆற்றியது போலவே கருப்பண்ணரும் சிறந்த பக்தராக - பக்தர்களுக்கு அறம் பல புரியும் இறை பணியாளராகத் திகழ்ந்து வந்தார்.



இவருடைய இல்லத்தை ஆன்மீக ஞானிகள் பலர் நாடி வந்து, வீற்றிருந்து அருள் ஞான உபதேசங்களையும் பொழிந்து வந்தார்கள். சித்தமெல்லாம் சிவமயமாகி இல்லறப் பந்தங்களிலிருந்து தம்மை அறவே விடுவித்துக் கொள்ளும் மனப்பக்குவம் பெற்ற கருப்பண்ணர், முழுதும் ஈசன் திருப்பணியிலே ஈடுபடும் நல்ல நாளை எதிர்நோக்கியிருந்தபோது தான் நிகழ்ந்தது அந்த அற்புதச்சம்பவம்.

கபடவேடதாரியான ஒரு சந்நியாசி இவரைக் காளிக்கு பலியிட்டு அட்டமா சித்திகளைப் பெற எண்ணி ஒரு நாள் நள்ளிரவு 12 மணிக்கு அம்மாப்பேட்டை ஏரிக்கு இவரை அழைத்துச் சென்றார். அங்கே கருப்பண்ண சுவாமிகளைக் கொண்டே ஒரு பெரிய குழியை வெட்டச் சொன்னார்.



சந்நியாசி கொடுத்த யந்திரத்தைக் குழியில் வைக்க கருப்பண்ணரிடம் கொடுத்த கபட சந்நியாசி, சுவாமியைப் பலி கொடுக்க அரிவாளை ஓங்கினார். அப்போது காளிதேவி பிரசன்னமாகி தம் திரிசூலத்தால் சந்நியாசியைத் தடுத்துக் ''கருப்பண்ணன் என் பக்தன். அவனால் பல அருட்பணிகள் நடைபெறும். அவனுக்குத் தீங்கு செய்தாயோ நீதீர்ந்தாய்'' என்று திருவருள் புரிந்தாள். சந்நியாசி நம் சுவாமிகளின் திருவடிகளில் விழுந்து பலவாறாகத் தொழுது புகழ்ந்து கருப்பண்ண சுவாமிகளின் முதல் சீடரானார்.

பிறகு கருப்பண்ண சுவாமிகள் பழநிக்குச் சென்று பழநிமுருகரின் திருவருளுக்குப் பாத்திரமானார், பழநிமுருகர் ஒரு லங்கோடு தாரியான கிழவராகக் காட்சி அளித்து ''மெய்த்தவ பக்தா ! குமரகிரியில் தண்டாயுதபாணி ஆலயம் உன்னால் உருவாகும்'' என்று அருள் பாலிக்க அவ்விதமே சாமி ஆலயத்தைக் கட்டுவித்தார்.

கருப்பண்ண சுவாமிகள், அம்மாப் பேட்டையிலும் சேலத்திலும் வீட்டுக்கு வீடு, கடைக்குக் கடை, ஆலயத்திருப்பணிக்கு அன்பர்களிடம் பொருள் திரட்டி தம் இடையறா முயற்சியால் சேலத்திற்கு ஒரு பழநியாக பழநிமலையின் தோற்ற வடிவில் ஸ்ரீ குமரகிரி தண்டாயுத பாணி சுவாமி ஆலயத்தை உருவாக்கிய கருப்பண்ண சுவாமிகளின் திருத்தொண்டை எவ்வளவு போற்றினாலும் தகும்.

''சீர் பெற்ற செங்குந்தர் மரபில் தோன்றிச்
சிறப்புற வாழ்ந்து
பேர் பெற்ற சிவநெறியைச் செவ்வனே
செய்தம்தொழிலாம்
தார்சுற்றும் பணியை விட்டுப் பாரோர்
போற்றும் கந்தனருளால்
பேர் பெற்று விளங்கிய கருப்பண்ணா
போற்றி போற்றி''

குமரகிரி மலை அடிவாரத்தில் கருப்பண்ண சுவாமிகள் சமாதியும், சுவாமிகளின் துணைவியார் ஸ்ரீ வள்ளியம்மையர் சமாதியும் சிவலிங்கம், அம்பிகை வடிவாய் இன்றும் பக்தர்களுக்கு அருள் பாலித்து வருகின்றன.

காசி சுவாமிகள் போற்றிடும் குமரகிரி

ஸ்ரீநிஜாநந்த பிரமேந்திர சரஸ்வதி சுவாமிகள் எனப்படும் காசி சுவாமிகள், குமரகிரி மலை அடிவாரத்தில் அமைந்திருக்கும் தியான நிலையத்தில் தங்கியிருந்து குமரகிரி முருகனை நாளும் பரவிப் போற்றியுள்ளார்.

ஸ்ரீ காசி சுவாமிகள் அருளிச் செய்திருக்கும் ஸ்ரீ குமரகிரி முருகன் புகழ் வெண்பா, ஸ்ரீ குமரகிரி முருகன் இரட்டை மணி மாலை, ஸ்ரீ குமரகிரி முருகன் நவமணி மாலை ஆகிய அருள் நூல்கள் குமரகிரி முருகன் அருள் அற்புதத்தை விவரிக்கின்றன.

இவருடைய நூற்றாண்டு விழா 1985ஆம் ஆண்டு கொண்டாடப் பெற்றுள்ளது.

''கொங்குவள நாட்டினிலே குமரமலைச்
சேத்திரத்தில்
பொங்குபுக ழோடிருந்த பூரணநற்
துறவியாம்
மங்களமாம் புகழ்படைத்த மாண்புடைய
நிஜானந்தன்
தங்கநூற் றாண்டுவிழா தழைத்தோங்க
வேண்டுவனே''

என்று வாகீசகலாநிதி கி.வா.ஜ. அவர்கள் குமரகிரி திருத்தலத்தையும், அத்திருத்தலத்தில் எழுந்தருளி இருந்த சுவாமிகளையும் போற்றிப் பாடியிருக்க காண்கிறோம்.

குமரகிரி முருகன் பக்தர்கள் வேண்டிய வற்றை வேண்டியவாறே அருளும் கற்பகம் என்கிறார் ஸ்ரீ காசி சுவாமிகள்.

''பாலதண்ட பாணிப் பரமன் குமரகிரி
கோலநம் உள்ளத்தைக் கொள்ளை
கொள்ளும் - சீலராம்
வேண்டுவார் வேண்டுவன எல்லாம்
கொடுக்கின்ற
காண்தகு கற்பகம் காண்''

# குமரகிரி முருகன்

முனைவர் த. அமிர்தலிங்கம்



குமரகிரிக் கோயில் கொண்ட கந்தனை
எண்ணும்போது
உள்ளம்தான் உருகுதம்மா!
அமரர்தொழும் ஐயன் மீதினில் அன்பு
வெள்ளம்தான் பெருகுதம்மா!
(சேலம் குமரகிரி)

வயல்சூழ்ந்த மருதநிலம் நடுவினிலே - உயர்
மலைமீதில் அமர்ந்திருப்பான் வடிவேலன்
அயல்தேசம் சென்றாலும் பங்குனியில் - வர
அழைப்பிதழை அனுப்பிடுவான் உமைபாலன்
(சேலம் குமரகிரி)

அரகர கோஷம் முழங்கி அடியவர்
காவடி ஆட்டமும் ஆட
சரவண பவனின் திருப்புகழோடு
சந்தங்கள் பலவும் பாட
அரவினை அணிந்தவன் ஆனைமுகனும்
அன்பினில் வந்து கூட
திருமகளோடு திருமாலும் தன்
மருமகனின் விழவினை நாடும்
(சேலம் குமரகிரி)

உத்திர நாளில் சக்தியின் மைந்தனைக்
காண்பவர் குலங்கள் வாழும்
சத்தியம் அவர்தம் மனையில் பொன்னொடு
பொருள்வளம் நலங்கள் சேரும்
வித்தகக் கல்வி வினைத்திறம் வல்ல
மிகுபுகழ் யாவும் கிடைக்கும்
உத்தமியார்க்கு நெற்றியில் மஞ்சள்
குங்குமம் என்றும் நிலைக்கும்.
(சேலம் குமரகிரி)

ஆண்டுதோறும் பங்குனி உத்திரத்தை ஒட்டி பத்துநாள் பிரம்மோற்சவம் வெகு சிறப்பாகக் கொண்டாடப் பெறுகிறது. அப்போது சேலம் வாழ் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் திரள் திரளாக வந்து குமரகிரி முருகரைத் தொழுவதையும்

**''பங்குனி உத்திரத்தில் பல்லாயிரம் பக்தர்**
**பொங்கும் களிப்பும் பூரிப்பும் - எங்கும்**
**குலவஇறை தண்ட பாணியின் கோவில்**
**தலம்சென்று சேவிப்பார் தாம்''**

என்று பாடுகிறார் ஸ்ரீகாசி சுவாமிகள். இத்தகைய அருள் வெண்பாக்கள் 333 ஸ்ரீகுமரகிரி முருகன் புகழ் வெண்பாவில் அமைந்து கற்பார்க்குக் கற்கண்டாய் தித்திக்கின்றன.

''ஸ்ரீ குமரகிரி முருகன் புகழ் வெண்பா ஒரு சாதாரண புலவரின் காவியம் அல்ல. அது முருகன் அருள் பெற்ற ஒரு யோகியின், ஒரு ஞானியின், ஒரு பக்தரின் அருள் வாக்கு என்பதில் யாருக்கும் ஐயம் வேண்டா'' என்று சுவாமி தேஜோ மயானந்தா போற்றுவதும இங்கு நினைத்து மகிழத்தக்கது.

ஸ்ரீ காசி சுவாமிகள் தமது 94ஆவது வயதில் 1977-ல் தியான நிலையத்தில் குமரகிரி முருகர் திருவடி நிழலை அடைந்தார். அவரது மகாசமாதி அவருடைய அன்பர்களால் அமைக்கப்பட்டும் பேணப்பட்டு வருகிறது. தியான நிலையமும் ஸ்ரீமத் காசி சுவாமிகள் தியான நிலையம் என்றே அழைக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு பௌர்ணமியிலும் பௌர்ணமி பூசைஇங்குச் சிறப்பாக நடைபெறுவதோடு வைகாசி மாதம் ரோகிணி நட்சத்திரத்தில் குருபூஜையும் கொண்டாடப்பட்டு வருகிறது.

ஸ்ரீ குமரகிரியில் தியான ஆசிரமம் தோற்றுவித்து ஸ்ரீகாசி சுவாமிகளைத் தங்கியிருக்கச் செய்து அருள்ஞானம் தழைக்கச் செய்தவர் திரு.சி.இராமலிங்கம் என்ற முருக பக்தர் ஆவார். குமரகிரி முருகரை வழிபடும் அன்பர்கள் தியான ஆசிரமத்தையும் தரிசித்துப் பயன் அடைவராக!

**''சடம் உகுத்தான் காசி சுவாமிஎன்**
**றெண்ணாதீர்**
**உடல் விட்டு உயிரொளி வடிவாய்**
**நின்றான்காண்**
**அடிவார தியான நிலையத்தில் அருஉரு**
**வடிவராய் அருள்புரிகின்றான் ஐயன்''**


எத்தனை எத்தனை அற்புதங்கள்:

குமரகிரி முருகர் அருளால் உய்வு பெற்றவர்கள் கோடானு கோடி அன்பர்கள் ஆவர்.

பாத்திரங்களைத் தலையில் வீதி வீதியாக விற்ற ஒரு பக்தர் இன்று சேலத்தில் கோடீஸ்வரராக வாழ்ந்து கொண்டிருக்கிறார். அது மட்டுமல்ல குமரகிரி முருகருக்கும் பல லட்சக் கணக்கான ரூபாயில் திருப்பணிகளையும் கூட அவர் இன்று செய்து கொண்டிருக்கிறார் என்றால் முருகர் தம் பன்னிரு கண்களில் ஒன்றிரண்டு கண்கள் மலர்ந்தாலும் போதாதோ பக்தர்களின் வாழ்வு உயர்வதற்கு. (தொழில் மேதை குமரகிரி முருக பக்தர் திருமிகு பிச்சைஅவர்கள் தமக்கு வாழ்வளித்த குமரகிரி முருகர் பெருமையை குமரகிரி திருக்குட நீராட்டு விழா மலரில் எடுத்து விளக்கியிருப்பது முருக பக்தர்களுக்காகத் தனியே வழங்கப் பட்டுள்ளது. படித்து இன்புறலாம்)

இவ்வாறு பக்தர்களுக்கு வாரி வாரி வழங்கும் வள்ளலாய், கலி தீர்க்கும் கண்கண்ட தெய்வமாய்த் திகழும் குமரகிரி முருகரைக் கண்ணாரக் கண்டு தொழ அன்பர்களே நீங்களும் இப்பொழுதே புறப்படுங்கள் சேலத்திற்கு.

# கருணைத்தெய்வம் குமரகிரிப் பெருமான்



தொழில் மேதை P.M. பிச்சைசெட்டியார்
**தலைவர், குமரகிரி டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட்**

கந்தப்பெருமான் கருணைத்தெய்வம், காக்கும் தெய்வம், கலியுகத்திலும்கண்கண்ட தெய்வம்.

18 ஆண்டுக் காலம் சூரனோடு போர் செய்து தேவர்களைக் காத்த வீரத்தெய்வம், பகைவனைக் கொல்லாமல் பகையை மட்டும் கொன்று பகைவனை நண்பனாக்கி - ஆம் சேவலும் மயிலுமாக்கி அருள்புரிந்த அற்புதத் தெய்வம்.

என்னுடைய வாழ்க்கையில் குமரகிரிப் பெருமான் திருவருள் தொடர்ந்து என்னை ஆட்கொண்டு அருள் செய்து வந்துள்ளது.

1926 அக்டோபர் 26-ல் திருச்சி மாவட்டம் தெலுங்கப்பட்டி கிராமத்தில் பிறந்த நான் ஒன்பதாவது வயதில் தந்தையை இழந்தேன், ஐந்தாம் வகுப்பில் தேறாமல் உள்ளூரில் பலசரக்கு கடையில் உதவியாளராக வேலையில் சேர்ந்தேன். 10ரூபாய் மூலதனத்தில் திருச்சியில் பழைய காகிதம் வாங்கி விற்கும் தொழிலில் ஈடுபட்டேன், பின்னர் பாத்திரங்கள் வாங்கி விற்கும் தொழிலில் சேலத்தில் ஈடுபட்டேன்.

அந்தக் காலத்தில் இரவு, பகல், மேடு, பள்ளம் பாராமல் ஊர்ஊராக நடைநடையாய் சுமையாக சுமந்து சேலத்தில் வீடுவீடாக வியாபாரம் செய்யும் போதெல்லாம் அம்மாப்பேட்டைக்கும் வருவேன். ஒருநாள் அப்போது எனக்கு வயது பதினாறு, அம்மாப்பேட்டையில் ஒரு கடையில் பாத்திர மூட்டையை வைத்து விட்டு நடையாய் வந்து மலையேறி குமரகிரியானைத் தொழுதேன்.

''எனக்கும் காலம் வரும், காலம் வந்தால் வாழ்வு வரும். வாழ்வு வந்தால் அனைவரையும் வாழ வைப்பேன்'' என்று வணங்கி மீண்டேன். அது முதல் பலதடவைகள் குமரகிரி வந்து மனமுருகி முருகனை வேண்டி வழிபட்டதுண்டு. என்னுடைய தாய் தந்தையரால் உணவுடன் ஊட்டி வளர்க்கப் பெற்ற தெய்வபக்தியை மேலும் வளர விட்டான் குமரகிரி முருகப் பெருமான்.

முருகப் பெருமான் திருவருள் நோக்கம் என் மீது பதியப்பெற்ற காரணத்தால் விடா முயற்சியுடனும் நேர்மையுடனும் பிறருக்கு உதவ வேண்டும் என்ற குறிக்கோளுடனும் முயன்றதால் என் வாழ்வில் பல்வேறு மாற்றங்கள் நிகழ்ந்தன. சாதாரண குடிமகனாக பிறந்து ஐந்தாம் வகுப்பையே பூர்த்தி செய்யாத நான் இன்று மேல் நாட்டு தொழிற்சாலைகளை நிறுவியதுடன், பல்லாயிரக் கணக்கானவர்களுக்கு வேலை கொடுத்து வருகிறேன். பல்வேறு அறப்பணிகளுக்கு ஒல்லும் வகை உதவி வருகிறேன்.

உலோகத் தொழிற்சாலைகள் பலவற்றை நிறுவித் ''தொழில்மேதை'' என அன்பர்கள் அழைக்கும் நிலையில் என்னை உயர்த்திய கருணைத் தெய்வம் கந்தப் பெருமானுக்கு நன்றிக் கடனாக நான் புதிதாக துவங்கிய நூற்பாலைக்குக் குமரகிரி டெக்ஸ்டைல்ஸ் எனப் பெயரிட்டேன். நூற்பு ஆலைத் துறை எனக்கு புதிது. மேலும் பங்குதாரர் அமைப்பில் உருவானது. இதிலும் வெற்றியைத் தேடித் தந்தவன் குமரகிரியான்.

பல்வேறு நிறுவனங்களுக்கு தலைவனாகிய இந்த நிலையில் என் ஆரம்ப கால வாழ்வின் அல்லல்களும். அவலங்களும் நெஞ்சில் நிழலாடத் தான் செய்கிறது. அதனூடே குமரகிரியானும் வருகிறான்.

அவன் திருக்கோவில் கும்பாபிஷேக விழாவில் எனது வேண்டுகோள் ''என்னை ஆளாக்கிய அவனுக்கு என்னால் இயன்ற பணி செய்ய வாய்ப்பினைத் தந்தருள்க என்பது தான்.

நன்றி : அருள்மிகு குமரகிரி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்

மகாகும்பாபிஷேக மலர்; நாள் : 21.1.1991



# பதில்





(இந்த இதழில் வாசகர்களின் வினாக்களுக்கு அருளரசு டாக்டர் திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளின் வாக்கிலிருந்து விடைகள் வழங்கப் பட்டுள்ளன என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்)

**★★★ திருமதி ந. விஜயலட்சுமி, ஓட்டேரி, சென்னை - 600012**

கேள்வி : ஐயா ! என் திருமணத்திற்குப் பிறகு தினமும் என் மனதில் கணவனை முதல் இடத்திலும், கடவுளை இரண்டாம் இடத்திலும் வைத்து நினைத்துக் கொண்டு இருக்கிறேன். நான் நினைப்பது சரியா? தவறா? விளக்கம் தருக.

பதில் : கற்புடைய மனைவியால் கணவனுக்கு ஆயுள், செல்வம், புகழ், அழகு, வெற்றி, இன்பம், கல்வி முதலியவைகள் தானே வந்தடையும்.

இதற்கு எடுத்துக்காட்டாக இன்றும், என்றும் எங்கும் நின்று நிலவுகின்றன சாவித்திரி போன்ற மாதரசிகளின் புண்ணிய சரித்திரங்கள்.

கற்புடைய பெண்மணிகளுக்கு நிகரான பொருள் மூவுலங்களிலும் இல்லை.

கணவனை வழிபடுகின்ற காரிகைகளுக்கு இம்மையில் புகழும், மறுமையில் முத்தி நலனும் உண்டாகும்.

எனினும் கற்புடைய மாதர்களுக்கும் கடவுள் அருளாலே அந்த நற்கணவன் உள்ளிட்ட யாவும் உண்டாவதால் எஞ்ஞான்றும கடவுளையே முதல் இடத்தில் வழிபட்டு வருதல் வேண்டும்.

**★★★ த. சத்திய நாராயணன், அயன்புரம்**

கேள்வி : வாலியை இராமர் மறைந்து நின்று கொன்ற முறை சரியா? தவறா ? விளக்குக.

பதில்: இராவணனுக்கும், இந்திரனுக்கும் பகை.

இந்திரன் இமையவருடன் சென்று திருமாலிடம் முறையிட்டான்.

''மானுடனாக நான் அவதரிக்கின்றேன். தேவர்களே நீங்கள் வானரங்களாகப் பிறந்திருங்கள். நான் இராவண வதம் புரிவேன்'' என்று திருமால் பணித்தருளினார்.

அவ்வாறே இந்திராதி தேவர்கள் புவியில் வானரங்களாக வந்து பிறந்தார்கள். இந்திரன் வாலியாக வந்தான். எதன் பொருட்டு? இராவண வதம் நிகழும் பொருட்டு.

ஆனால் வந்தவன் இராவணனுடன் நெருப்பை வைத்து ''உனக்கு உறவு, எனக்கு உறவு, உன் பகை என் பகை'' என்று சத்தியம் செய்து கொண்டான். வாலி வந்த நோக்கம் இதனால் பிழைத்து விட்டது.

ஒரு நாடகத்தில் நாடகாசிரியன் ஒருவனுக்குக் கதாநாயகனாக நடிக்கக் கற்பித்தார். அந்த நடிகன் கதாநாயகன் வேடம் புனைந்து ஒருகோமாளியைப் போல் குதித்தும் பாடியும் நடிக்கத் தொடங்கினான்.

நாடகாசிரியன் திரை மறைவில் நின்றபடியே அவனை உள்ளுக்கு இழுத்து விடுவான். வெளியே நின்று காரணங்காட்டி தண்டிக்க மாட்டான்.

அதைப் போல ''நீஇந்திரன். நான் திருமால். நீஇராவண வதம் நிகழும் பொருட்டு வந்தாய். வந்த வரவை மறந்தாய். அதனால் உன்னை மறைந்து நின்று தண்டித்தேன்'' என்று வாலி உணர உணர்த்தினார் இராமர். வாலி உணர்ந்தான். உணர்ந்தபின் தன் பிழையை நினைத்து நொந்தான். பின்னர் மன்னிப்பு வேண்டினான்.

**★★★ தமிழினியன், திருவண்ணாமலை**

கேள்வி : விபீஷணர் சகோதரத் துரோகம் செய்தது சரியா? தவறா?

பதில் : விபீஷணர் இராவணனைத் துறந்து இராமரிடம் சேர்ந்தது சகோதரத் துரோகம் செய்வதாகும் என்றும், அண்ணனைக் காட்டிக் கொடுத்தார் என்றும் கூறிச் சிலர் இடர்ப்படுவர்,

இராமருக்குரிய வாழ்க்கைத் துணையை இராவணன் களவு செய்தான். விபீஷணர் நீதி நெறி கூறியும் அவன் திருந்தாமையால் இராமரிடம் சேர்ந்து அவருக்குரிய பொருளை அவர்பால் சேர்த்தது முற்றிலும் நியாயமே.

ஐம்பெரும் பாவங்கள் புரிவாருடன் சேர்ந்திருந்தாரும் அப்பாவத்திற்கு உரியவரே எனத் தெளிக.

போர் மூண்ட பின்னர் அண்ணனை விட்டுப் பிரிந்தால் அது முறையாகாது. போர் மூண்ட படியால் கும்பகர்ணன் அண்ணனைப் பிரியாது உயிர்கொடுத்தான்.

ஆனால் விபீஷணர் போர் மூள்வதற்கு முன், நீதி கூறித் திருத்த முற்பட்டார். திருந்தாத இராவணன் நீதி கூறிய தன்னையே கொல்ல முற்பட்டபோது இராவணனை விபீஷணர் துறந்தது முறையே எனத் தெளிக.




# தலை ஓரிடம் வால் வேறிடம் தும்பூர் அருள்மிகு நாகம்மன் ஆலயம் உண்டான அற்புத வரலாறு

விழுப்புரத்திலிருந்து செஞ்சிக்குச் செல்லும் பாதையில் தும்பூர் எனும் ஊரை அடுத்துள்ள நாகம்மன் திருக்கோயில், பாம்பு படம் எடுத்து ஆடும் வடிவில் பெரிய சிலையின் தலைப்பகுதி மட்டும் மக்கள் போற்றி வழிபாடு செய்யும் திருக்கோயிலாக அமைந்து சிறப்புடன் திகழ்ந்து வருகின்றது.

இதன் வால், விழுப்புரத்தில் சிறப்புடன் திகழும் பாடல் பெற்ற திருத்தலமான திருவாமாத்தூர் அருள்மிகு அபிராமேஸ்வரர் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் அருள்மிகு முத்தாம்பிகை அம்மன் திருமார்பில் திகழ்ந்து வருகின்றது.

அம்பாள் முத்தாம்பிகை அற்புதமான அழகு திருவுருவம், பக்தர்கள் வேண்டியவற்றை எல்லாம் வாரி வழங்கும் அருட்கடல்.

அம்பாள் சந்நிதிக்கு வலப்புற மூலையில் வட்டப்பாறை அம்மன் சந்நிதி திகழ்கின்றது. அவ்வட்டப்பாறை அம்மன் சந்நிதியில் யாரேனும் பொய்ச் சத்தியம் செய்தால் அவர்களைப் பாம்பு தீண்டிக் கொன்று விடும் என்பது மக்கள் கொண்டுள்ள அசையாத நம்பிக்கை ஆகும்.



முன்னாளில் இங்கு வாழ்ந்திருந்த வஞ்சகனான அண்ணன் ஒருவன், தன் இளைய வயது தம்பியின் சொத்து முழுவதையும் வஞ்சித்துத் தானே அனுபவித்து வந்தான்.

வாலிபனாக வளர்ந்ததும் தம்பி தன் அண்ணனிடம் வந்து தனக்குரிய சொத்தினைத் தருமாறு வற்புறுத்தினான்.

''என்னிடம் ஏதும் உன்பொருள் இல்லை'' என்றான் அண்ணன்.

''அப்படியானால் திருவாமாத்தூர் வட்டப் பாறைக்கு வந்து சத்தியம் செய். நம்புகிறேன்'' என்றான் தம்பி.

தம்பிக்குரிய சொத்தினை எல்லாம் விற்றுத் தங்க காசுகள் வாங்கித் தன் கைத்தடியில் மறைத்து வைத்திருந்த அண்ணன், வட்டப்பாறைக்கு வந்து சத்தியம் செய்து கொடுப்பதாக உறுதிக் கூறி உடன் வந்தான்.

வட்டப்பாறை சந்நிதியில் சத்தியம் செய்யும் முன் கைத்தடியை அண்ணன் தன் தம்பியிடம் கொடுத்து ''உன் பொருள் ஏதும் இப்போது என்னிடம் இல்லை. இது சத்தியம்'' என்று பொய்ச் சத்தியம் செய்து கொடுத்தான்.

சத்தியம் செய்து முடித்ததும் ''என்ன திருப்தியா உனக்கு?'' என்று கேட்டுவிட்டு ''கைத்தடியை இப்போது என்னிடம் கொடு'' என்று கைத்தடியைக் கேட்டுப் பெற்றுக் கொண்டான்.

அண்ணனின் வஞ்சனை அறிந்த ஊர்க்காரர்கள் பலரும் பொய்ச் சத்தியம் செய்து கொடுத்தும் வட்டப் பாறை அம்மன் வஞ்சித்தவன் உயிர் பறிக்காததை எண்ணி வியப்புற்றனர்.

கொஞ்சதூரம் சென்ற பிறகு பொய்ச் சத்தியம் செய்து கொடுத்த அண்ணன், தம்பியைப் பார்த்து ஏளனம் செய்து சிரித்தபடியே ''முத்தாம்பாள் என்னைத் துரத்திக் கொத்துவாள் என்று தானே சத்தியம் செய்யச் சொன்னாய். நானும் உன்னை வஞ்சித்து உண்மையை மறைத்துப் பொய்ச் சத்தியம் தான் செய்தேன். முத்தாம்பிகை என்னைக் கொத்தி விட்டாளா?'' என்று கூறிப் பரிகாசத்துடன் சிரித்தான்.

அப்போது அங்குள்ள பூமி வெடித்தது. கரும் பாம்பொன்று தோன்றி வஞ்சகனான அண்ணனைக் கொன்று பூமிக்குள் மறைந்து விட்டது.

கரும்பாம்பு தோன்றிய இடத்திலேயே படமெடுத்தாடும் பாம்பு தலைமட்டும் வீற்றிருக்கத் திருக்கோயில் இன்று ''நாகம்மன் திருக்கோயில்'' ஆகத் திகழ்ந்து வருகின்றது.

பாம்பின் வால் திருவாமாத்தூர் அருள்மிகு முத்தாம்பிகை மார்பில் இன்றும் அமைந்திருக்கக் காணலாம்.

முத்தாம்பிகைக்குச் சாற்றும் வெள்ளிக் கவசத்தில் ''சர்ப்பத்தின் வால்'' செதுக்கப் பட்டிருப்பதை இன்றும் இத்திருக்கோயிலில் கண்டு அதிசயிக்கலாம்.



# புத்திபலம் மனோபலம் ஆத்மபலம்



''எழுத்துச்சித்தர்'' பாலகுமாரன்

''குருவே உங்களிடம் ஒரு விண்ணப்பம் செய்து கொள்ள வேண்டும்''.

சிஷ்யை மிக பவ்யமாக குருவைப் பணிந்து வணங்கிக் கைகூப்பியவாறு கேள்வி கேட்டாள்.

அவள் பணிவில் ஒரு முழுமை இருந்தது. உண்மை இருந்தது.

குரு கனிவானார்; கண்கள் விரித்து சிஷ்யகோடியை ஊடுருவிப் பார்த்ததார். ஆண், பெண் என்கிற பிரிவினைக்கப்பால், உயிர் உயிரைக் பார்க்கின்ற தன்மை அந்தப் பார்வையில் இருந்தது.

''என்ன தாயே, என்ன வேண்டும் கேள்'' என்று பாசத்தோடு வினவினார்.

''எனக்கு மூன்று வரங்கள் தர வேண்டும்''.

சிஷ்யை கையைப் பிரிக்காமல் குருவிடம் கேட்டார்.

''ஆஹா... உனக்கு வரம் தருவதற்கு தயக்க மென்ன. நீநல்ல பெண்மணியல்லவா! கடவுள் தேடலில் மும்முரமாய் இருப்பவள் அல்லவா! தன்னையறிவதில் நாட்டமுள்ளவள் அல்லவா! கடவுளைத் தெரிந்து கொள்வதில் ஆவல் உள்ளவள் அல்லவா! வைராக்கியம் மிகுந்தவள் அல்லவா! உனக்கு வரம் தருவதில் எனக்கு விருப்பம் உண்டு. என்ன வேண்டும் கேள்''.

'' எனக்கு புத்திபலம். மனோபலம், ஆத்ம பலம் மூன்றையும் நீங்கள் தந்தருள வேண்டும்'' கெஞ்சுகின்ற குரலில் சிஷ்யை கேட்பாள்.

''அப்படியா, இது மூன்றும் தானா? வேறு ஏதாவது இருக்கிறதா?''

''இந்த மூன்றும் போதும்''.

''ஏன், இந்த மூன்றும் போதும் என்கிறாய்''.

''இந்த மூன்றும் இருப்பின், உங்கள் அருளால் எனக்கு இவை கிடைத்துவிடின், இவற்றை வைத்துக் கொண்டு இந்த வாழ்க்கையை நான் செவ்வனே தாண்டி விடுவேன். இனி பிறவா நிலை எடுப்பேன். மறுபடி, மறுபடி பிறக்கின்ற வேதனையின்றி இருப்பேன்''.

''நல்லது. உன் ஆசையும், உன் அனுமானமும் மிகச் சரியானவையே. ஆனால், ஒரு வரம் கேட்பதற்கு முன்பு அந்த வரம் என்ன என்று கேட்டவர் அறிந்து கொள்ள வேண்டாமா. நான் வரம் கொடுப்பதற்கு முன்பு அந்த வரத்திற்கு நீதகுதியா என்று நான் சோதிக்க வேண்டாமா. நான் உன்ன சோதிக்கப் போகிறேன். நீகேட்டதை வைத்துக் கொண்டே உன்னிடம் கேள்வி கேட்கப் போகிறேன். புத்தி பலம், மனோ பலம், ஆத்ம பலம் என்றால் என்ன?''

சிஷ்யை யோசித்தாள்.

அமைதியாய் உள்ளுக்குள் புகுந்து அந்தக் கேள்விக்குப் பதில் தேடினாள்.

குரு மேலும் கனிவானவார். அவள் தேடுதல் அவருக்குத் தெரிந்தது.

''நல்லது. இந்தக் கேள்வி போதும். இப்படியொரு கேள்வி உனக்குக் கேட்க வேண்டுமென்று தோன்றிற்றே இந்த ஆவல் போதும். இந்த ஆவல் இருப்பின் மறுபடியும் இங்குப் பிறக்க வேண்டாம் என்கிற விருப்பம் இருப்பின் மற்றவை தானாக கிடைக்கும். புடவைக்கு ஆசைப்படாமல், நகைகளுக்கு ஆசைப்படாமல் புகழுக்கு ஆசைப்படாமல், வேறு பொருளுக்கு ஆசைப்படாமல் புத்திபலம், மனோபலம் என்று கேட்டாயே இந்த ஆசைமிக உயர்வானது. தெரிந்து கேட்டாலும், தெரியாது கேட்டாலும் இவை பற்றி உனக்கு விளக்கிவிட்டு, இவைகளை வழங்க நான் சித்தமாக இருக்கிறேன். எனவே நான் சொல்ப வற்றை அமைதியாய் அமர்ந்து முழு ஈடுபாட்டோடு கேட்கத் துவங்குவாய்'' என்று கட்டளையிட்டார்.

சிஷ்யை அவர் எதிரே உட்கார்ந்து கொண்டாள்.

அவளின் இடுப்பு, முதுகு, கழுத்து, தலை இவை ஒரே கோட்டில் நின்றன. மிகுந்த அக்கறையோடும் அன்போடும் குருவினுடைய வார்த்தைகளைச் செவிமடுத்தாள்.

குரு விளக்கம் தரத் தொடங்கினார்.

புத்திபலம் என்பது இந்த லௌகீக உலகில் வெற்றிக்காக ஏற்பட்டது. புத்தியின் கூர்மை இல்லா

விட்டால், இந்த உலகத்தில் சுகங்களை வெகு நிச்சயம் சம்பாதிக்க முடியாது. எது உலகாயதமான சுகங்கள். உணவு, உடை, உறைவிடம். இதைச் சுற்றி உள்ள விஷயங்கள்தான் உலகாயத சுகம். நல்ல ருசிகரமான உணவு, சுத்தமான உடைகள் காற்றிலிருந்தும், வெய்யிலில் இருந்தும், குளிரில் இருந்தும் தப்பித்துக் கொள்கின்ற ஒரு உறைவிடம் வெகு நிச்சயம் ஒரு மனிதருக்குத் தேவை.

இவைகளைப் பெறுவது எளிதன்று. இதற்குக் கடுமையாக உழைக்க வேண்டும். உழைப்பது என்பது வெறும் முரட்டுத்தனமாக இருந்தால் போதாது. எவ்வளவு உழைக்க வேண்டும், எப்போது உழைக்க வேண்டும், எங்கே உழைக்க வேண்டும் என்று தெரிய வேண்டும். இப்படித் தெரிவதற்குப் புத்திபலம் வேண்டும். எது குறித்து உழைக்கிறோம் என்றும் தெரிய வேண்டும். எவை எவை எல்லாம் உலகாயத சுகங்கள். இவைகளில் எவை முக்கியமானவை என்பதும் தெரிய வேண்டும். எந்த அளவுக்கு இவை வேண்டும் என்பது பற்றிய அறிவு வேண்டும்.

வீடு பெரிதாகப் புதிதாக இருந்தால் போதுமா? அது சௌகரியமாகிவிடுமா? இல்லை. வீடு அளவானதாக இருக்க வேண்டும். உன்னுடைய குடும்பம் எத்தகையது. எத்தனை பேர் கொண்டது என்பதற்கு ஏற்ப அங்கே அந்த வீட்டினுடைய அளவு இருக்க வேண்டும். இரண்டு பேர் வாழ பதிமூன்று அறைகள் கொண்ட ஒரு வீடு வியர்த்தம். பன்னிரெண்டு பேர் கொண்ட ஒரு குடும்பம் வாழ இரண்டு அறைகள் கொண்ட ஒரு வீடு மிகக் கடினம். எனவே உன் குடும்பத்திற்கு ஏற்ற ஒரு வீடு என்பது தான் சரியான விஷயம்.

இதை எது தீர்மானிக்கும்? இதைப் புத்தியே தீர்மானிக்கும். எது உன் உணவு? எவ்வளவு தித்திப்பு? எத்தனை துவர்ப்பு? எத்தனை கசப்பு? உப்பின் சதவீதம் என்ன என்பதையும் உன்னுடைய உடல், நிதி நிலைமையைப் பொறுத்துப் புத்தி தீர்மானிக்கும். உன் உடைகளின் சுத்தமும், சொகுசும் அது தெரிவிக்க வேண்டிய கருத்தையும் புத்திதான் உனக்கு உணர்த்தும். அதுமட்டும்தான் புத்தியின் வேலையா? இல்லை.

இவைகளை அனுபவிப்பதற்கு உண்டான செல்வத்தைப் புத்தி கொண்டுவந்து தர வேண்டும். அந்தச் செல்வம் எப்படி வரும்? உன் உழைப்பினால் ஏற்படும். அந்த உழைப்பிற்கு நீஎன்ன தகுதியை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அதை உன் புத்தி தீர்மானிக்கும். அப்பொழுது என்னவிதமான பயிற்சிகளில் நீஈடுபட வேண்டும் எப்படி அந்தப் பயிற்சிகளை நீஎப்படி அணுக வேண்டும்? இந்த உழைப்புக்கு இந்தப் பயிற்சி போதுமா? இந்த உழைப்பு நீவிரும்பி செல்வத்தைக் கொண்டு வந்து சேர்க்கிறதா என்று எல்லாவற்றையும் நீஎடை போட்டுப் பார்க்க வேண்டும்.

செல்வம் சேர்ப்பதற்கு அல்லது உழைப்பிற்கு இடைஞ்சலாக உள்ளது என்ன? உன் சோம்பலா? உன் நண்பர்களா? உன் உறவா? அல்லது உன்னுடைய எஜமானர்களா? என்று எடைபோட புத்தி மிக வேகமாக வேலை செய்ய வேண்டும். புத்தி இப்படி வேலை செய்வதற்கு பயிற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். இப்படி பயிற்சி எடுத்துக் கொள்வதற்கு பல்வேறு விஷயங்களில் ஈடுபட வேண்டும். ஈடுபட்டதை நினைவில் கொள்ள வேண்டும்.

புத்தி என்பது நினைவுச் சக்தி. கற்பனைத் திறன். எதிர்காலம் குறித்த திட்டமிடல். நல்ல

## வாசகர் எண்ணங்கள்

''எழுத்துச்சித்தர்'' பாலகுமாரன் அவர்களின் ''இறைமை கலந்த தமிழ்'' அமுதமெனத் தித்தித்தது. அவருடைய ''வைராக்கியம்'' கட்டுரை பக்தர்களுக்கு வழிகாட்டும் அருமையான கட்டுரை.

- திருமதி இந்திரா ஆரா அமுதன், திருவரங்கம்

''திருக்கோயில்'' இதழ் தமிழகத் திருக்கோயில்களின் அருமை பெருமைகளைப் படம்பிடித்துக் காட்டும் பல்சுவை இதழாகப் பரிணமிக்கிறது.

இதழில் இடம் பெறும் கட்டுரைகள் குடும்பத்தில் எல்லாத் திறத்தாரும் படித்துப் பயன்பெறத்தக்க கட்டுரைகளின் களஞ்சியமாகத் திகழ்கின்றன.

- பி.வி.கிரி
முன்னாள் உதவியாசிரியர், ''தமிழரசு''

பழநியில் தைப்பூசத் திருவிழா கட்டுரை அருமை. சகல உலகினரும் அடிபரவும் பழநிமலைக்கு உடனே சென்று பழநியிலேயே தங்கிவிடலாமா என்ற எண்ணத்தை எனக்கு அக்கட்டுரை ஊட்டி விட்டது.

- சிவப்பிரகாசம், கே.கே. நகர், மதுரை

கேள்வி பதில் பகுதி அருமையிலும் அருமை - ஆன்மீகம் தொடர்பான ஐயங்களைப் போக்கும் அறிவுச்சுரங்கம்

- த.சத்தியநாராயணன், அயன்புரம்

திருமந்திரஉபதேசம் ''தமிழ்நாட்டுச் சித்தர் பரம்பரை'' ஆகிய ஞானக் களஞ்சியங்களை நான் தவறாமல் பயின்று பாதுகாத்து வருகின்றேன்.

- டி. சௌந்தர், ஈரோடு.

விளைவுகள் பற்றியும், தீய விளைவுகள் பற்றியும் உண்டான ஞானம் என்று பல்வேறு பகுதிகளைக் கொண்டிருக்கிறது. எல்லா நிலையிலும் சீர்தூக்கிப் பார்க்கின்ற ஒரு திறமையை தன்னுள்ளே அது வளர்த்துக் கொண்டே ஆக வேண்டும். அப்போது தான் வெற்றி பெறுதல் சீராக இருக்கும். செல்வம் சேர்த்தல் முழுமையாக இருக்கும்.

செல்வம் சேர்த்ததை சரியான பங்கீடு செய்து, சரியாக முதலீடு செய்து அவைகளை தாவர ஜங்கம சொத்துக்களாக மாற்றுதல் என்பது புத்தியின் பலத்தாலேயே நடைபெறும். வெற்றி பெறும்போதும், தோல்வியுறும் போதும் தன்னைத் தேற்றிக் கொண்டு அடுத்துச் செய்ய வேண்டியது என்ன? என்னமாதிரி வைத்தியம், என்னவிதமான உணவுக் கட்டுபாடு என்று தெளிவாவதும் புத்தியின் பலமே. இந்தத் தோல்விக்கு என்ன காரணம். எவர் காரணம். என்ன செய்திருந்தால் தோல்வி தவிர்க்கப்பட்டிருக்கும் என்று நினைத்து, அடுத்த முறை அந்தத் தோல்வி ஏற்படாமல் இருக்கும் அளவுக்குக் கவனத்தோடு இருப்பதும் புத்தியின் வேலையே.

''சரி. இந்தப் புத்திபலம் இல்லாவிட்டால் என்ன? உணவும், உடையும், உறைவிடமும் பிரச்சினையால் வேறு எது குறித்தும் உங்களால் யோசிக்க முடியாது. வேறு எதனுள்ளும் உங்களால் தேர்ச்சி அடைய முடியாது. அடுத்த வேளை உணவுக்காக அல்லாடுதலும், கடன் வாங்கி முழி பிதுங்கி அவமானப்படுதலும் உறக்கமின்றி இருத்தலும், உணவுச் செரியாமை ஏற்படுதலும் வந்து விட்டால் வாழ்க்கை நரகமாகிவிடும். மன நிம்மதியின்றி ஆன்மீகப் பிடிப்பின்றி எந்நேரமும் குழப்பத்திலேயே ஈடுபட வேண்டியிருக்கும்.

எனவே, புத்தியின் பலத்தால் வாழ்க்கையை தெளிவாக்கிக் கொள்ளுதல் மிக முக்கியம். லௌகீக உலகின் அதாவது உலகாயதமான வெற்றிகளை அடையவும், அவைகளைத் தக்க வைத்துக் கொள்ளவும், தோல்விகளிலிருந்து தப்பித்துக் கொள்ளவும், நிம்மதியாகத் தூங்கவும் புத்தியின் உதவி நிச்சயம் தேவை. எனவே, ஒவ்வொரு மனிதரும் புத்திபலம் பெற்றே ஆக வேண்டும்.

# நூல் மதிப்புரை

நூல் பெயர் : சைவமும் தமிழும்

நூலாசிரியர் : ''செந்தமிழ் வாரிதி'' முனைவர் இரா. செல்வக்கணபதி

நூல் வெளியீடு : தெய்வச்சேக்கிழார் மனித வள மேம்பாட்டு அறக்கட்டளை
H 15/2 கரிகாலன் தெரு,
கலசேத்ராகாலனி,
பெசண்ட் நகர்,
சென்னை - 600090.

நூல் பக்கங்கள் : 187

விலை : ரூ. 50.00






''செந்தமிழ்வாரிதி'' முனைவர் இரா. செல்வக் கணபதி அவர்கள் நாடறிந்த நல்ல தமிழ் அறிஞர். சமய இலக்கியப் பேருரையாளர். பல்வேறு சைவ சமய அமைப்புகளால் பற்பல விருதுகளும் பட்டங்களும் வழங்கப் பெற்றுச் சிறப்பிக்கப் பட்டவர்கள். இலங்கை, சிங்கப்பூர், இலண்டன் போன்ற உலகநாடுகள் பலவற்றிற்கும் சென்று தமிழ்முழக்கம் நாளும் ஆற்றிவரும் நற்பெருந் தொண்டர் ஆவார்.

இவர்கள் எழுதியுள்ள ''சைவமும் தமிழும்'' நூல் சைவ சமயத்தின் பழமையையும், சிறப்புக் களையும் இலக்கிய வளத்தையும் மிகத் திறமையாக நமக்கு எடுத்துக் காட்டுகின்றது. பன்னிரு திருமுறைகளின் அருமை பெருமைகளைச் சிறப்புறத் தொகுத்துக் கூறும் இந்நூல், ஒவ்வொரு வரும் படித்து இன்புற வேண்டிய அரிய நூல் என்பதில் ஐயமில்லை.

நூல் பெயர் : ஒளவையார் அருளிய கல்வியொழுக்கம்

நூலாசிரியர் : ''சுடர்மணிக்கவிஞர்'' வேம்பத்தூர் கிருஷ்ணன்

நூல் வெளியீடு : சுடர்மணிப்பதிப்பகம்
19, பஜனைக் கோயில் தெரு,
சூளைமேடு,
சென்னை - 600094.

நூல் பக்கங்கள் : 32

விலை : ரூ. 10.00

அமெரிக்காவில் பிரிமாண்ட் மேல்நிலைப் பள்ளியின் வானியல்துறை உலகப் புகழ் பெற்றது. அப்பள்ளி வளாகத்தின் முகப்பில்

''கற்றது கைமண்ணளவு
கல்லாதது உலகளவு''

என்ற ஒளவையின் வாசகம் ஒளிர்கிறது என்கிறார் இந்நூலின் உரையாசிரியரும், ஒளவைத் தமிழ்ச் சங்கத் தலைவருமான வேம்பத்தூர் கிருஷ்ணன்.

கல்வி பயிலும் மாணவர்கள் கடைப் பிடிக்க வேண்டிய ஒழுக்கங்களை ஒளவையார் கல்வியொழுக்கம் நூலாக வடித்திருப்பது போற்றற்குரிய ஒன்று. இந்நூலினை மாணவர்கள் அனைவரும் பயின்று பயன் பெற வேண்டும்.

அப்படியானால் மனோபலம் எதற்கு? புத்தி மட்டும் போதாதா என்று கேட்கலாம்.

இல்லை புத்திபலம் உலகாயத வெற்றிகளை பெறுவதற்காக உபயோகப்படுகிறதென்றால், மனோபலம் உங்களை நீங்கள் வெற்றி கொள்வதற்கு உபயோகப்படுகிறது.

உங்களை நீங்கள் வெற்றி கொள்வது என்றால் என்ன? உங்கள் கோபத்திலிருந்து நீங்கள் தப்பித்துக் கொள்ளுதல். உங்கள் ஆத்திரத்தை நீங்கள் அடக்கி வைத்தல். உங்கள் அலட்டலை நீங்கள் அறிந்து கொள்ளுதல். உங்களை காதலை, உங்கள் காமத்தை, நீங்கள் கட்டுப்பாட்டை இழத்தலை கவனமாக குறித்து வைத்துக் கொண்டு அவைகளுக்குக் கடிவாளமிட்டு மிகச்சரியாகச் செலுத்துதல். உங்கள் உணர்வுகளோடு போராடி ஜெயித்தல். உங்கள் உணர்வுகளை வெகு எளிதில் இனம் கண்டு கொள்ளுதல்.

இது எதனால் முக்கியம்?

இந்த உணர்வுகளை சரியாக வைக்க வில்லையெனில் புத்தியில் நீங்கள் பெற்ற அத்தனை வெற்றிகளும் குப்பையாய்ப் போகும். நீங்கள் சேர்த்து வைத்த செல்வம் சீழிந்து போகும். உங்கள் புகழும், பொருளும் காணாது போகும். உங்களிடமுள்ள கோபத்தில் மிகப்பெரிய குற்றம் செய்து விட்டு உங்கள் செல்வம் அத்தனையும் விட்டு விட்டு வேறு எவரோ ஆளும்படி செய்து விட்டு, நீங்கள் சிறைவாசம் அனுபவிப்பீர்கள். உங்கள் ஆத்திரத்தைக் கட்டுப்படுத்தாமல் அதிகாரமாய், அகம்பாவமாய் நடந்து விட்டு அதனால் பெரிதும் வருத்தப்படுவீர்கள். உங்கள் செல்வமோ, உங்கள் புகழோ உங்களுக்குத் துணைக்கு வராது. மாறாய் அவைகளும் உங்களோடு இழிவுப்பட்டு நிற்கும். என்ன காசு இருந்து என்ன? எவ்வளவு புகழ் இருந்து என்ன? கடைசியில் மலக் குப்பையில் அல்லவா விழுந்தான் என்று ஊர் எள்ளி நகையாடும்படியாகும்.

வெற்றி என்பது அனுபவத்தின் விளைவால் உள்ள நினைவாற்றலிருந்து கடைந்தெடுத்த தன்மையை அழகாக தற்போதுள்ள இடத்தில், நிலையில் செயல்படுத்தி எதிர்காலம் குறித்த கவலையோடு இயங்குவது. அதாவது கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்று மூன்று நிலையிலும் செயல்படுவது. ஆனால், மனம் என்பது அந்த நேரத்தில் எகிறிப்பாய்வது. துள்ளி எழுவது, நல்லதோ கெட்டதோ, சரியோ, தவறோ உடனடியாக தன்னை வெளிப்படுத்தக் கூடிய இயல்பு மனதிற்கு உண்டு. கோபம் போலவும், ஆனந்தமும் துள்ளியெழும். அதிலும் அத்து மீறாதிருக்க வேண்டும்.

மனபலம் மிகுந்த ஆண்களாயினும் சரி, பெண்களாயினும் சரி அதிகம் இளிக்க மாட்டார்கள். எங்கேனும் அறிமுகமாகும் போது கூட மெல்லிய புன்னகை, அழுத்தமான புன்னகை இருக்குமே தவிர பல்தெரியச் சிரிப்பது என்பதை மனதின் மீது கண் வைத்திருப்பவர்கள் நிச்சயம் செய்ய மாட்டார்கள்.

## முருகப் பெருமானின் பன்னிரு ஆயுதங்கள்



| | |
|---|---|
| 1. தோமரம், | 2. கொடி |
| 3. வாள், | 4. குலிசம் |
| 5. அம்பு | 6. அங்குசம் |
| 7. மணி | 8. தாமரை |
| 9. தண்டம் | 10. வில் |
| 11. மழு | 12. வேல் |

ஆகியன முருகப் பெருமான் தம் பன்னிரு கரங்களிலும் தாங்கியுள்ள ஆயுதங்கள். வேல் தவிர மற்றும் பதினொரு ஆயுதங்களும் பதினொரு உருத்திரர்களைக் குறிக்கும்.

வேல் - இச்சா, கிரியா, ஞானம் எனும் மூன்று சக்திகளின் உருவமாகும்.

அதென்ன மனதின் மீது கண் வைத்திருப்பது? முற்றிலும் விழிப்புணர்வோடு இருப்பது தான் மனதின் வேலை. மயங்கிக்கிடப்பதல்ல. ஒரு சிறிய புகழ்ச்சி செய்தாலும் உடனே பல் தெரிய நிற்பது என்பது கொஞ்சம் அபத்தமான விஷயம். மனம் ஒரு கட்டுப்பாட்டில் இல்லை என்பதுதான் அர்த்தம். வெகு சுலபமாக புகழ்ந்து பேசி அவர்களை கவிழ்த்து விட முடியும். வசப்படுத்திக் கொள்ள முடியும். விழிப்புள்ள மனம் உர்ரென்ற முகத்தோடும் இருக்காது. அலட்டலாக அலட்சியமாகப் பேசாது. அந்த மனம் மிக அமைதியாக இருக்கும். அந்த அமைதி முகத்தில் தெரியும். மனம் விழிப்போடு இருந்தால்தான், புத்தியினுடைய காரியங்களைப் பற்றித் தெளிவாக அறிந்து கொள்ள முடியும்.

நம் குணாதியங்களை நாம் தெளிவாக அறிவதைத் தவிர நமக்கு வேறு வேலை ஏதும் இங்கு இல்லை. நம்மையே நாம் அறியாதபோது மற்றவை எதுபற்றியும் அறிந்து எந்த நன்மையும் ஏற்படப் போவதில்லை. எனவே, புத்தியில் ஏற்படுகின்ற சலனங்களைக் கண்டு மருளாமல் மனம் அமைதியாக இருக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். இல்லையெனில் புத்தியில் ஏற்பட்ட வெற்றிகள் அனைத்துமே வீணாகும். ஞாபக சக்தியும், திட்டமிடலும் கடும் உழைப்புமே குப்பைக்குப் போகும். மனமும், புத்தியும் ஒருங்கிணைந்து செயல்பட்டால் வாழ்க்கை நிம்மதியாக இருக்கும்.

மனமும், புத்தியும் செயல்பட்டால் போதுமா? உங்கள் தினசரி வாழ்க்கை நிம்மதியாக இருந்தால் போதுமா? அதைத் தாண்டி வேறு ஏதோ ஒரு தேவை மனிதனுக்கு இடையறாது ஒரு ஏக்கத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. எல்லா வெற்றியும் கிடைத்தும் கூட, எதையும் அடக்கித் தன் வயப்படுத்தியவர் கூட நிம்மதியாக இல்லை. உள்ளுக்குள்ளே வேறு ஏதோ தேடுகிறார்.


என்ன அது?

குரு சிஷ்யகோடியைப் பார்த்து கூர்மையாகக் கேட்டார். பிறகு அவரே தொடர்ந்து பேசலானார்.

- தொடரும்

# திருக்குறட் செல்வர் - அன்னம் பாலித்தவர்

கே.பாலசுந்தரி, எம்.ஏ.



பசி!

இது எல்லா உயிர்க்கும் பொதுவானது. ''பசி வந்திடப் பத்தும் பறந்து போம்'' என்பது பழமொழி. பத்து விதமான உயர் குணங்களைப் பறந்திடச் செய்யும் பசி தீர உணவிட்டவரை, ''உண்டி கொடுத்தவர் உயிர் கொடுத்தவர்'' எனப் போற்றுகிறோம்.

எனவே தான் பாரதி ''தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் இந்த ஜெகத்தினை அழித்திடுவோம்'' என கர்ஜிக்கிறான். பண்டைக் காலத்தில் மன்னர்கள் அன்னசத்திரம் அமைத்துப் பசிப்பிணி தீர்த்தனர். மணிமேகலை அமுதசுரபி கொண்டு அமுது படைத்ததை அறிகிறோம். இதிகாசகாலத்தில் குருஷேத்திர யுத்தம் நடந்த போது சேரமன்னன் உதியன் போரிடும் வீரர்களுக்கு சோறிடும் சேவை செய்தான். அதன் காரணமாகப் ''பெருஞ்சோற்று உதியன் சேரலாதன்'' எனப் புகழ் பெற்றான். என வரலாறு கூறுகிறது அவன் அன்னதானச்சிறப்பை.

இந்த அன்னதானச் சிறப்பினை உணர்ந்த இராமலிங்க அடிகளார் வடலூரில் அணையா அடுப்பைப் பற்ற வைத்தார். பற்றற்ற வள்ளலார் பற்ற வைத்த நெருப்பு மக்களின் பசித்தீயை அணைத்தது. இப்படி சிறப்பாகத் தமிழ் மண்ணில் நடந்து வந்த அன்னதானம் இடைக்காலத்தில் சற்றே குன்ற ஆரம்பித்தது.

ஆயினும் தற்போது புதுப்பொலிவுடன் அன்னதானம் சிறப்புடன் நடைபெறுகிறது. ஆலயங்களுக்குப் புதியதோர் லயம் ஏற்பட்டு உள்ளது. உலகுக்கு அமுதூட்டும் உமையை அன்னபூரணியாகக் கண்டவர்கள் அல்லவா நமது முன்னோர்கள்.

''விதைக்கு இல்லாது விற்பது கூடாது'' என்பது வேளாண்மை செய்பவருக்கான பழமொழி. அதற்கு மாறாக விதைத்த நெல்லையே விருந்தாக்கி மகிழ்ந்த வேளாளரும் உண்டு.

இளையான்குடி என்னும் ஊரில் மாறனார் என்பவர் வாழ்ந்து வந்தார். பயிர்த்தொழில செய்யும் வேளாளர் குலத்தவர். செல்வச் செழிப்புடன் சிறப்புடன் வாழ்ந்து வந்தவர். அடியவருக்கு அன்னம் பாலிப்பதே அவர் தம் முழுநேரப்பணி. இப்பணிக்குத் தக்கத் துணையாக நின்றவர் இவருடைய துணைவியார். இவர்கள் இட்ட உணவை உண்டவர்களின் மனமகிழ்வே தொட்டனைத்து ஊறும் மணற்கேணியெனப் பெருஞ் செல்வமாய் இவரிடம் பெருகியது. அடியவர்க்கு சோறிடுவதே பெரும் தொண்டு எனக் கருதி வாழ்ந்து வந்தார். திருமகள் இவர் தலைமகள் ஆனாள். மலையெனக் குவிந்த செந்நெல் கண்டு, விருந்தினரைப் போற்றி உணவளித்து மிஞ்சிய உணவை உண்டு வாழும் இவர் நிலத்தில் நெல் விதைக்காமலே விளையும் போலும் எனப் போற்றினர் ஊரார்.

**''வித்தும் இடல் வேண்டும் கொல்லோ விருந்தோம்பி**
**மிச்சில் மிசைவான் புலம்''**

(குறள்)

இவரைச் சோதிக்க எண்ணினான் அந்த ஜோதி வடிவானவன். சோதனை வரும் போது தானே சாதனை வரும். ''சோதனை வரும் முன்னே, சாதனை வரும் பின்னே'' என்பது புதுமொழி. இறைவன் மாறனாரை விட்டு திருமகளை விலகிடச் செய்தார் ஏன்?

அவர் வறுமையிலும் செம்மையாக அன்னதானம் செய்யும் பாங்கை உலகுக்கு உணர்த்த.

**''அட்டாலும் பால்சுவையில் குன்றாது அளவளாய்**
**நட்டாலும் நண்பு அல்லார் நண்பு அல்லார்**
**கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே சங்கு**
**சுட்டாலும் வெண்மை தரும்''**

என்ற மூதுரைக்கிணங்க வறுமையால் கெட்டாலும் மாறனாரின் மேன்மையின் திறத்தை விண்ணவரும் கண்டு வியந்திடச் செய்ய அவரைச் சோதிக்க நாள் குறிக்கிறான் அந்த ஜோதி வடிவானவன்.

செல்வம் மகிமை அனைத்தும் ''செல்வோம்'' என மெல்ல மெல்லக் குறைய, கைப்பொருள் விற்றும், கடன் வாங்கியும் அன்னம் படைக்கிறார். அவர் வளம் சுருங்கினும் மனம் சுருங்கவில்லை. வந்தவர்களுக்கு எல்லாம் விருந்து படைத்தத் தம்பதியர் தம் வயிற்றுப் பசிக்கே உணவற்ற நிலை. தம் நெஞ்சில் கசியும் ஈரம் கொண்டு தம் வயிற்றில்



# திருக்கயிலாயம் - மானஸரோவர் - முத்திநாத்

## விமானத்தில் 18 நாட்கள் / ரயிலில் 23 நாட்கள்

**2006-ம் ஆண்டு. மாதம் ஒரு குழு புறப்படுகிறது.**

| | |
|---|---|
| பிரதிமாதம் | 10 நாட்கள் கொண்ட சுற்றுலா - பூரி, புவனேஸ்வர், கொனார்க், கல்கத்தா, கயா, காசி, அலகாபாத். |
| பிரதிமாதம் | 12 நாட்கள் கொண்ட சுற்றுலா - சிம்லா, குல்லு மணாலி, டெல்லி, ஆக்ரா, சண்டிகர், மதுரா. |
| 05.06.2006 | 30 நாட்கள் கொண்ட சுற்றுலா - 12 சோதிர்லிங்கங்கள், பண்டரிபுரம், மும்பை, நாசிக், பஞ்சவடி, சீரடி, டெல்லி, ஹரித்துவார், பத்ரிநாத், ஆக்ரா, மதுரா, ரிஷிகேஷ், விஜயவாடா |
| பிரதிமாதம் | 12 நாட்கள் கொண்ட சுற்றுலா - கேதார், பத்ரி, ஹரித்துவார், ரிஷிகேஷ், டெல்லி |
| பிரதிமாதம் | 12 நாட்கள் கொண்ட சுற்றுலா - காட்மாண்டு முக்திநாத் காசி அலகாபாத் |
| 25.06.2006 முதல் 10.07.06 முடிய | 15 நாட்கள் கொண்ட சுற்றுலா - அமர்நாத் பனிலிங்க தரிசனம், வைஷ்ணவிதேவி, அமிர்தசரஸ், டெல்லி, குருசேத்திரம், பனிலிங்கம் தரிசனம் செய்ய - டோலி குதிரை, ஹெலிகாப்டர் வசதி உண்டு. |
| பிரதிமாதம் | மலேசியா, சிங்கப்பூர் 5 இரவு/ 6 பகல் சுற்றுலா மற்றும் பாங்காங்க், பட்டாயா 4 இரவு / 5 பகல் கொண்ட சுற்றுலா. |
| மாதந்தோறும் | 8 நாட்கள் கொண்ட அந்தமான் சுற்றுலா - ஒரு வழி கப்பல் - ஒரு வழி விமானம். |
| பிரதிமாதம் | ஆன்மீக ஸ்ரீலங்கா .7 இரவு / 8 பகல்கள் கொண்ட சுற்றுலா - திருக்கேதீசுரம், திருகோணமலை, கதிர்காமம் |

**மனோகர் டிராவல்ஸ்**

1433. ஸ்வஸ்திக் காம்ப்ளக்ஸ், அபிராமி தியேட்டர் அருகில்
ஈரோடு 638 011. போன்: 2223580, 5536280
மொபைல் : 94433 - 80159, 94433 - 80154
E.mail : Manohartravvels@packagetours4u.com
Website: www.packagetours4u.com



**கைலாஷ் டிராவல்ஸ்**

11, வீராசாமி வீதி, முதல் தளம்
ஹோட்டல் எவரேஸ்ட் எதிர்ரோடு
பெரியமேட், சென்னை - 600 003
போன்: 42053923. மொபைல் : 94433 - 80154
E.mail:Kailashtravels@packagetours4u.com


எரியும் பசித்தீயை அணைக்க முயன்று சோர்கின்றனர்.

ஒரு நாள் இரவு, இறைவன் தன் திருவிளையாடலை அரங்கேற்ற ஆரம்பித்தான். பெருமழை கொட்டியது. அவன் விரிசடையென கருமேகம் சூழ, அவன் கடைக்கண் பார்வையென மின்னல் வெட்ட, அவன் கை உடுக்கை ஒலி போன்று இடி முழங்கி அவன்கருணை போன்று மழை கொட்டியது. அவன் சூடிய கங்கையென வெள்ளப் பெருக்கு. இறைவன் சிவனடியான் வேடம் புனைந்து மாறனார் இல்லம் வருகிறார். பசி எனக் குரல் கொடுக்கிறார்.

தாயினைத் தேடி ஓடும் கன்றென விரைகிறார் மாறனார். கதவு திறக்கிறார். அடியவரை வரவேற்று அமரச் செய்கிறார். உலர்துகில் கொண்டு அவர் உடல்துடைக்கிறார்.

அடியவர்க்கு எப்படி அமுது இடுவது? மனைவியிடம் ஆலோசிக்கிறார். ''காலையில் வயலில் விதைத்த நெல்லை அள்ளி வந்தால் சமைக்கலாம்'' என்கிறாள் சமயோசிதமாக. ''நல்ல மனைவி நன் மந்திரி என்பதை மெய்ப்பித்தாய்'' என்று உவகை கொண்டார்.

மனைவி சொல்லை மந்திரமாகக் கொண்டு விதைத்த நெல்லை சேகரிக்க விரைகிறார். கும்மிருட்டு வேளையிலும் அவர் உள்ஒளி கோடாக வழிகாட்டுகிறது. நெல்லை அள்ளி சேறு போக அலசி மனைவியிடம் தருகிறார். விறகு? எனத் தயங்க வீட்டின் ஒரு பகுதியை வெட்டி விறகாகத் தருகிறார். கொல்லையில் படர்ந்த கீரை வகைகள் கறியமுது செய்து, ஈர நெல்லை வறுத்துக் குத்தி சோறாக்கித் தலை வாழை இலையிட்டு அடியவரை அழைக்கிறார் மாறனார். உறங்குவது போன்று நடித்த இறைவன் சிரிக்கிறான். ஜோதி வடிவாகக் காட்சி அளிக்கிறான். திகைக்கின்றனர் தம்பதியர்.

பின்னர் இடப வாகனத்தில் உமையோடு காட்சி அளிக்கிறான். தேவர்கள் பூமாரி பொழிய இறைவன் புகழ்மாரி பொழிகிறான். ''மாறா ! விண்ணவர் உண்ணும் அமுதமும் நீபடைத்த அமுதுக்கு ஈடாகாது. இந்த மண்ணுலகு உள்ளவரை உன் புகழ் நிலைக்கும். நீஉன் துணையோடு என்னுலகு அடைவாயாக. அங்குச் சங்க நிதி - பதுமநிதி கையில் ஏந்திய குபேரன் உன்னை வரவேற்று உன் மொழி கேட்டு உன் பணி செய்வான் என அருளி மறைகிறான்.

''செல் விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல் விருந்து வானத்தவர்க்கு''

(குறள்)

**முருகா என மும்மூர்த்திகளும் வருவர்**



காக்கும் கடவுள் முகுந்தன்.
அழிக்கும் கடவுள் ருத்ரன்.
படைக்கும் கடவுள் கமலோற்பவன்

இம்மூவரின் முதல் எழுத்துக்களின் அடக்கமே முருக எனும் திருப்பெயராகும். ஆகவே முருகா என அழைத்தால் மும்மூர்த்திகளும் ஓடிவந்து அருள்புரிவர்.

# திருக்கோயில் பொருந்த ஓர் செங்கல் இடுவார் உலகாள்வார் (நீதிக்கதை)

நிறைமதி, பி.எல்.

எமலோகத்தில் சித்திரகுப்தன் எழுதிக் கொடுத்த விவரக் குறிப்புகளின்படி உயிர்களை எடுத்துவர எமதர்மராஜா தம் தூதுவர்களை விரைந்து ஏவிக் கொண்டிருந்தார்.

''கருங்கல்பாளையம் கிராமம், நூறாம் எண்ணுள்ள வீடு, மன்னார் சாமி பேரு, அவனுடைய உயிரை நீங்கள் போய் கொண்டு வாருங்கள்'' என்று ஆணையிட்டார் எமதர்மர்.

''அப்படியே செய்கிறோம்'' என்று கூறி மன்னார்சாமியின் உயிரைப் பறிக்கப் புறப்பட்டார்கள் எமதூதர்கள்.

அதே நேரம் மன்னார்சாமி தன் ஆயுள் பலம் அறியுமாறு ஜோதிடர் ஒருவரைத் தேடிச் சென்று அவரிடம் தன் ஜாதகக் குறிப்பை நீட்டினான்.

ஜோதிடரும் மன்னார்சாமியின் ஜாதகக் குறிப்பை அலசி ஆராய்ந்தார்.

''கிரகப் பலாபலன்களைப் பார்க்கும் போது இவன் இன்றைக்குள் மரண கண்டத்தை அடைவான் என்றல்லவா தெரிகிறது!''

''இவனுக்கு இனியேது ஜாதகம்?'' என்று ஜோதிடர் தம் மனதிற்குள் கூறிக் கொண்டார்.

மன்னார்சாமியிடம் அவனுக்குள்ள மரண கண்டத்தை ஜோதிடர் கூறவில்லை.

மாறாகத் தமக்கு அதிகவேலை இருப்பதாகக் காட்டிக் கொண்ட ஜோதிடர் ''சரி சரி! நாளைக்கு வா! உன் பலாபலன்களைக் கணித்துச் சொல்கிறேன்'' என்று கூறி மன்னார்சாமியை அனுப்பிவைத்தார்.

தன் வீடு திரும்பும் வழியில் பெருமழை பிடித்துக் கொள்ள மன்னார்சாமி அருகிலிருந்த ஒரு இடிந்த மண்டபத்தில் ஒதுங்கினான்.

அவன் உயிரைப் பறிக்க வந்த இரு எமதூதர்களும் அவன் கண்ணுக்குப் புலப்படாமல் அவனருகிலேயே நின்று ''இவன் உயிரைப் பறிப்பது எப்படி?'' என்று ஆலோசித்தவாறு நின்று கொண்டு இருந்தார்கள்.



''சூறாவளிக் காற்றாய் மாறி மண்டபத்தை இடித்துத் தள்ளி இவனுயிரைப் பறித்துச் செல்வோம்'' என்று எமதூதர்கள் இருவரும் பேசி ஒரு முடிவுக்கு வந்தார்கள்.


பயங்கரமான சூறாவளி காற்று வீசி, இடி இடித்து, மின்னலும் மின்னியது.

மின்னல் மின்னிய வெளிச்சத்தில் அப்பாழடைந்த மண்டபம் இடிந்து போன ஒரு அம்மன் கோயிலாக இருக்கக் கண்ட மன்னார்சாமி படபடவெனத் தன் கன்னத்தில் போட்டுக் கொண்டான்.

''அம்மா! மாரியம்மா! எனக்கு மட்டும் வசதி இருந்தால் இடிந்திருக்கும் உன் கோயிலை நன்கு திருப்பணி செய்து புதுக்கோயிலாக மாற்றிக் கும்பாபிஷேகம் செய்வேன் அம்மா! இது சத்தியம்'' என்றும் கூறி நெஞ்சுருகிப் பிரார்த்தித்தான் மன்னார்சாமி.

இடிந்த மண்டபம் சூறாவளிக் காற்றில் நொறுங்கி அவன் தலைமேலே விழ இருந்த அந்தத் தருணம் நாகம்மாள் நாகமாய் தோன்றிச் சீறி விரட்ட, மன்னார்சாமியும் மண்டபத்திற்கு வெளியே வந்து விழுந்தான்.

## தலையில் லிங்கத்துடன் திருஞானசம்பந்தர்



பொன்னேரி தாலுக்கா அரியத்துறை கிராமத்தில் அமைந்துள்ள சிவாலயத்தில் திருஞான சம்பந்தர் தம் தலையில் ஒரு நாகலிங்கத்தை ஆபரணமாக அணிந்து வீற்றிருக்கும் திருக்கோலம் கண்டு இன்புறலாம்.



# பெண்ணறிவு நுண்ணறிவு

ஆலமரத்துப் பூதம் ஒன்றைப் பிடிக்கப் போனான் அரசன்.

அவனுக்கு அடங்கி இருக்க ஒத்துக் கொண்ட பூதம் ஒரு நிபந்தனை விதித்தது.

''எனக்கு ஓயாமல் வேலை தரவேண்டும். வேலை தர வில்லையானால் உன்னை விழுங்கி விடுவேன்'' என்று பூதம் நிபந்தனை விதிக்க

''வேலைக்கா பஞ்சம்?'' என்று எண்ணி அதற்கு ஒத்துக் கொண்டான் அரசன்.

ஆனால் பூதம்எந்த வேலை கொடுத்தாலும் உடனே உடனே செய்து முடித்து ''வேலை, வேலை'' என்று கேட்டு நச்சரித்தது.

''வேலை தராவிட்டால் உன்னை விழுங்கி விடுவேன்'' என்று பூதம் எச்சரிக்க அரசன் மிகவும் கவலை கொண்டான்.

அப்பொழுது அங்கு வந்த அரசி பூதத்திடம் தன் நீண்ட ஒரு கூந்தல் முடியைத் தந்தாள்.

''இந்த முடியை 108 ஆக கிழித்து அவைகளை ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கி அதன் மீது ஏழு கோட்டைகளைக் கட்டு. அரசரும் நானும் அதன் மீது இருக்க வேண்டும்'' என்று கூற, பூதம் அந்தப் பணியைச் செய்ய முயன்று முடியாமல் தோற்று ஓடியே போனது.

மண்டபம் முழுதும் நொறுங்கி விழுந்தது கண்ட மன்னார்சாமி தான் உயிர் பிழைத்த அதிசயத்தை எண்ணி வியப்புற்றான்.

''அம்மா நாகம்மா ! தக்க சமயத்தில் நாகமாக வந்து சீறி என் உயிரைக் காப்பாற்றித் தந்தாய் தாயே!''

அதே நேரம் எமதூதர்களுக்குக் காட்சி தந்த மாரியம்மன் ''இவன் என் பக்தன். இவனால் ஆக வேண்டிய காரியம் இன்னும் அநேகம் இருக்கின்றது. இவனுக்கு நாம் புத்துயிர் வழங்கி இருப்பதாக எமனிடம் போய் தெரிவியுங்கள்'' என்று கூறி, எமதூதர்களை விரட்டி அடித்தாள்.

வீட்டுக்குத் திரும்பிய மன்னார்சாமியை அவனுடைய வழக்கறிஞர் தேடி வந்து அந்த மங்கலகரமான தகவலைத் தெரிவித்தார்.

''மன்னார்சாமி! பூர்வீக சொத்து சம்பந்தமாக நிலுவையிலிருந்து வந்த வழக்கு உமக்குச் சாதகமாக முடிந்துவிட்டது. இன்று முதல் நீங்கள் கோடீஸ்வரர்''

என்று வழக்கறிஞர் கூறக்கேட்டு பூரித்துப் போனான் மன்னார்சாமி.

வசதிவந்தால் கோயில் திருப்பணி செய்வேன் என்று அவன் பிரார்த்தனை செய்து கொண்ட அளவிலேயே அவன் மரணகண்டமும் நீங்கிவிட்டது. அதுவரை தீராத வழக்கு அவனுக்குச் சாதகமாக முடிவுக்கும் வந்து அவனைக் கோடீஸ்வரன் ஆக்கிவிட்டது.

ஆகவேதான் திருக்கோயில் திருப்பணிக்கு ஒரு சிறிய செங்கல் நன்கொடை கொடுத்தாலும், இப்பெரிய நிலவுலகை ஆளும் வரம் பெறுவர் என்று நம் முன்னோர்கள் ''திருக்கோயில் பொருந்த ஓர் செங்கல் இடுவார், உலகாள்வார்'' என்று கூறிச் சென்றுள்ளார்கள்.

மன்னார்சாமி தான் பிரார்த்தித்துக் கொண்டபடியே மாரியம்மன் ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்து கும்பாபிசேகமும் செய்து சகல செல்வங்களும் நிறையப் பெற்று மிகச் சந்தோஷமாக வாழ்ந்து மகிழ்ந்தான்.


**திருக்கோயில்**
**திங்கள் இதழ்**



| | |
|---|---|
| தனி இதழின் விலை | ரூ 10/ |
| ஓராண்டுச் சந்தா | ரூ 120/ |
| பத்து ஆண்டுச் சந்தா | ரூ 1000/ |
| ஆயுட்காலச் சந்தா | ரூ 1500/ |

(ஆயுட்காலம் என்பது அதிகபட்சமாக 15 ஆண்டுகள் மட்டும்)

**''திருக்கோயில்'' இதழில் விளம்பரம் செய்து பயனடைவீர்!**

**திருத்திய விளம்பரக் கட்டண விவரம் :**

| | |
|---|---|
| 1. பின்பக்க அட்டை வெளிப்புறம் (வண்ணத்தில்) | ரூ 15,000/ |
| 2. முன்பக்க அட்டை உள்புறம் (வண்ணத்தில்) | ரூ 10.000/ |
| 3. பின்பக்க அட்டை உள்புறம் (வண்ணத்தில) | ரூ 7,500/ |
| 4. உள்புறம் முழுப்பக்கம் | ரூ 5,000/ |
| 5. உள்புறம் அரைப்பக்கம் | ரூ 3,000/ |

இதற்கான பணவிடை / வங்கி வரைவோலையை ஆணையர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, 119, உத்தமர் காந்தி சாலை சென்னை 600 034 என்ற முகவரிக்கு அனுப்பவும்.

# திருவிளையாடல் புராணம்

இரா. அரங்கசாமி



## உலவாக்கிழி அருளிய படலம்

பெரும் வள்ளலாகத் திகழ்ந்து பெருஞ்சிறப்பு களையும் பெற்று வந்த மன்னன் குலபூடண பாண்டியன், சோமவார விரதம் முதலிய சிவபுண்ணியங்களைக் குறைவின்றிச் செய்து வந்தான். விதிப்பயனால் ஏற்பட்ட இறுமாப்பின் காரணமாக அவன் மறையோர்களை மதிக்காமல் அவமதித்தான். அதுவரை செழிப்புற்று விளங்கி வந்த பாண்டிய நாட்டின் மழைவளம் குன்றி நாட்டில் பயிர்வளர்ச்சி குறைந்தது.

அந்தணரெல்லாம் வறுமையில் உழன்றதால் வேதம் ஓதுவதை மறந்தும், வேள்விகளைச் செய்யாமலும் இருந்ததுடன், சிறுதொழில்களைச் செய்தாவது உயிர்வாழ வேண்டிப் பிற நாடுகளுக்குச் சென்று குடியேறலாயினர். மற்றும் குடிமக்கள் யாவரும் பசியாலும் வறுமையாலும் கடுமையான பஞ்சத்தாலும் பெரிதும் வாடி வருந்தினார்கள்.

மக்களின் வறுமை நிலையக் கண்ட மன்னன் வருந்தினான். ஒரு நாள் சோமவாரத்தன்று பொற்றாமரைத் தீர்த்தத்தில் நீராடி சித்தி விநாயகரையும் அங்கயற்கண்ணி அம்மையுடன் அமர்ந்திருந்த சோமசுந்தரக் கடவுளையும் வழிபட்டு, ''பெருமானே! உலகிலுள்ள உயிரினங் களுக்கெல்லாம் ஆதியாக இருந்து இயக்குபவர் நீங்களல்லவா? அந்த உயிர்களெல்லாம் வாடி வருந்தும் துன்பம் என் நாட்டு மக்களிடையே ஏற்பட்டுள்ளதற்குக் காரணம் என்ன? நான் தேடி வைத்த செல்வங்கள் எல்லாம் சிவகைங்கரியங் களிலேயே செலவாயின. இனிமேல் தாங்கள் தான் திருவருள் புரிந்து துன்பங்களைப் போக்கத் துணை செய்ய வேண்டும்!'' என்று வேண்டினான்.

சிவபெருமான், பாண்டியனது பிழையைத் தமது மனத்தில் கொண்டு அவன் சொற்களைக் கேளாதவர் போல் இருந்தார். பின் பாண்டியன், தன் அரண்மனைக்குச் சென்று சிவபெருமானையே சிந்தித்த வண்ணம் தரையிலேயே படுத்து உறங்கினான்.

அன்றிரவு சிவபெருமான், பாண்டியனது கனவில் ஒரு சித்தரைப் போன்ற உருவத்துடன் தோன்றி, ''பாண்டியா! நம்மிடத்து நீங்காத அன்பு கொண்டவனே ! உன்பால் ஒரு குறையுள்ளது. வேதங்களைத் தழைக்கச் செய்யும் மறையவர்களைப் போற்ற நீமறந்தாய். அதனால் தான் உனது நாட்டில் மழைவளம் குன்றியது. வேதமே நமது ஆசனம், பாதுகை, ஊர்தி, கால்சிலம்பு, கோவணம், திருக்கண், திருவாக்கு, திருமேனி, ஆணை ஆகியவையாகும். மேலும் அதுவே அனைத்தையும் உணர்த்துவது ஆகும். அறிவூட்டி நன்னெறி காட்டி, மும்மலங்களையும் அறுத்து வீடு பேற்றையும் தருகிறது''

''இத்தகைய வேதங்களுக்கு உரியவர்கள் வறுமைத்துன்பம் நீங்கி, வேள்வித் தீயினை வளர்த்து எம்மிடத்தில் சிந்தையைச் செலுத்தும் அந்தணர்கள் ஆயிற்றே ! அவர்கள் செய்யும் வேள்விகளாலேயே மழை பொழிகிறது. நீஅவர்களை இகழ்ந்து விட்டதாலேயே மழை பெய்யவில்லை''

''இனியாவது அந்த மறையவர்களையும் நம்மைப் போலவே கருதுவாயாக! இன்று உனக்கு உலவாக்கிழி ஒன்றை அளிக்கிறோம். அந்தப் பொற்கிழியில் இருந்து எவ்வளவு பொன்னை எடுத்துச் செலவழித்தாலும் நாம் கொடுத்த அளவிலிருந்து சிறிதும் குறையாமல் அப்படியே இருக்கும். அதை வைத்துக் கொண்டு உன் நாட்டில் தோன்றிய வறுமையையும், பஞ்சத்தையும் போக்கிக் கொள்வாயாக !'' என்று திருவாய் மலர்ந்தருளி உலவாக்கிழி என்ற பொற்கிழியைப் பாண்டிய மன்னரின் கையில் கொடுத்தருளி, நெற்றியில் திருவெண்ணீறு பூசி ஆசி கூறினார் சோமசுந்தரப் பெருமான்.

குலபூடண பாண்டியன் கண் விழித்து எழுந்து தான் கண்ட கனவு நனவாகி இருப்பதைக் கண்டு திகைத்தான். அங்கு அவன் கண்ணில் தோன்றிய உலவாக்கிழியை சிரமேல் வைத்துப் போற்றி அமைச்சர்களுக்கும் சேனைத் தலைவர்களுக்கும் அதனைக் காண்பித்து இறைவனின் திருவருளைப் புகழ்ந்து, நெஞ்சமுருகி நின்றான்.

அந்த உலவாக்கிழியிலிருந்து கட்டுக்களை அவிழ்த்து அதிலிருந்த பொன்னை வேள்விகளை நடத்தும் பொருட்டு அந்தணர்களுக்கும் மற்றவர் களுக்கும் வாரி வழங்கினான். அதே போல் நாள் தோறும் வாரி வாரி வழங்கியும் கூட, பெருமான் கனவில் வந்து கூறியபடி அப்பொற்கிழியிலிருந்த செல்வம் சிறிதேனும் குறையாமல் அப்படியே இருந்ததைக் கண்ணுற்று வந்தான். அதன் விளைவாக, முன்பு போல வேள்விகளும், மற்றுமுள்ள சிறப்புப் பூசையும் குறைவின்றி நடத்தி, நாடும், மக்களும் குறைவின்றி வாழ்வதையும் கண்டு ஆனந்தக் கடலில் மூழ்கிப் பல காலம் வாழ்ந்திருந்தான்.

(தொடரும்)

# மகாபாரதம்

முனைவர் த. அமிர்தலிங்கம்

23

கண்ணபெருமான் தேரிலிருந்து இறங்கி, வீடுமரை நோக்கி விடுவிடென்று முன்னேற, அர்ச்சுனன் தேரிலிருந்து தானும் இறங்கிக் குதித்து, கண்ணபெருமானின் தாள்களைப் பணிந்து, தன்னுடைய தவறைப் பொறுக்குமாறு வேண்டுகிறான்.



''ஆழியெடுத்தனன் வீடுமனைப் பொருதாவி அழித்திடுவான்
ஊழிமுகக் கனல் போல் எழும் அப்பொழு தோடியருச்சுனனும்
தாழி தனக்குமுன் வீடு கொடுத்தருள் தாளிணையைப் பிடியா
வாழி உனக்கிவரோ எதிர் வித்தக மாயனெனத் தொழுதான்''

-மூன்றாம் போர்ச்சருக்கம் - 18

''கண்ணா! மணிவண்ணா! எளியேன் செய்த பெரும்பிழையை மன்னித்து விடு, நானே என் காண்டீபத்தால் வீடுமரை எதிர்கொள்கிறேன். எல்லாம் வல்ல உனக்கு இவரா சமமாவார்? அன்றைக்கு ஆயுதம் கையில் எடேன் என்று நீசெய்த உறுதி பொய்க்க நானா காரணமாவது! அந்தப் பழி இந்த அர்ச்சுனன் கொள்ள கண்ணா நீகாரணமாகலாமா? என் மீது கொண்ட கோபத்தை அருள்கூர்ந்து மாற்றிக்கொள்''.

''உன் உள்ளம் அன்பின் பெரு வெள்ளம். பாலகனாய் இருந்த போது, உன் அடியான் ஒருவன் கேட்டுக்கொள்ள அவன் வீட்டுத் தாழிக்கும் அருள்புரிந்த வள்ளலே! நான் உன் அன்புமிக்க மைத்துனன் அல்லவா! எனக்கு நீஅருள் புரிதல் ஆகாதோ?'' என்று அர்ச்சுனன், ஆபத்பாந்தவனாகிய, அனாதை இரட்சகனும், தீனதயாளனுமாகிய கண்ண பெருமானின் திருவடிகளில் வீழ்ந்து அந்த குருச்சேத்திரப் போர்க்களத்தில் திருவடிகளில் வீழ்ந்து அனைவரும் காண வேண்டுகிறான்.

கோகுலத்தில் கண்ணன் செய்த பாலலீலைகளைப் பொறுக்க இயலாத அன்னை யசோதா கண்ணனை விரட்டிவர, ததிபாண்டவன் மனையில் கண்ணன் ஒளிந்து கொண்டான். கண்ணன் ஒளிந்து கொண்டிருப்பதைத் தாயிடம் கூறாதிருக்க வேண்டுமானால், தனக்கும் தனக்குச் சொந்தமான வீட்டிலிருப்பவர்களுக்கும், தன் வீட்டிலிருக்கும் தயிர்பானைக்கும் கூட முத்திதர வேண்டுமென வேண்டினான் ததிபாண்டவன். கண்ணன் அவ்வாறே அருளினார்.

கண்ணனின் இத்தகைய கருணை உள்ளத்தை எடுத்துக் காட்டித் தன் தவறை மன்னிக்குமாறு வேண்டுகிறான் அர்ச்சுனன். கண்ணபெருமான் ஆழி ஏந்தித் தன்னை நோக்கி வருவதைக் கண்ட வீடுமரும் கண்ணபெருமானால் சம்ஹரிக்கத் தக்கபெரும் பாக்கியம் தனக்கு வாய்க்கப் போகிறதே என்று பேரானந்தம் கொள்கிறார். அவரும் தன்னுடைய தேரிலிருந்து இறங்கிக் கண்ணபெருமானை நோக்கி ஓடி வருகிறார். மாயவனைப் போற்றுகிறார்.

''ஆரணகற்பித மாதவ அச்சுத ஆழியிடைத்துயிலும்



## பக்தனின் சாமர்த்தியம்

ஒரு குருடன் தான் வாழ்வில் பட்ட வேதனைகள் தாங்காமல் ஆற்றில் வீழ்ந்து சாவதென முடிவு செய்து ஆற்றில் இறங்கி மூழ்கப் போனான்.

அவன் மேல் இரக்கம் கொண்ட கடவுள் அங்குத் தோன்றி அவன் கையைப் பிடித்துத் தடுத்து ''நான்தான் கடவுள். உன் மேல் இரக்கம் கொண்டு வரம் தர வந்துள்ளேன். ஆனால் நீஒரே ஒரு வரம் மட்டுமே கேட்க வேண்டும்'' என்று கூறினார்.

''எனக்குக் கண் பார்வை வேண்டும். செல்வம் வேண்டும். மனைவி மக்கள் வேண்டும். நீண்ட ஆயுள் வேண்டும். ஆன்ால் கடவுள் ஒரு வரம் மட்டுமே தருவதாகக் கூறுகிறாரே !'' என்று சற்றே சிந்தித்த அக்குருடன் ''இறைவா! என் பேரன் தங்கத் தட்டில் உணவு உண்பதை நான் என் மாளிகையின் மேல் என் மனைவியுடன் நின்று கண்டு மகிழுமாறு வரம் தர வேண்டுகின்றேன்'' என்று ஒரே ஒரு வரம் வேண்டித் தான் வாழ்வில் பெற வேண்டிய அனைத்தையும் பெற்றுக் கொண்டான்.

**காரண சிற்குண ரூபமலர்க்கொடி காதல் மனத்துறையும்**
**நாரண அற்புத வானவருக்கொரு நாயக நிற்பணியும்**
**வாரமுத்தி விசாலதலத்திடை வாழ்வுற வைத்தவனே''**

-மூன்றாம் போர்ச்சருக்கம் -17

**''ஆவி அழித்தனை தூணிலுதித்திடல் ஆடகனைத்தலை நாள்**
**மாவலியைச் சிறு மாணுருவத்துடன் வார்ச்சிறைவைத்தனையால்**
**ஏவிலரக்கனை வீழஅடர்த்தனை யானோரிலக்கெனவே**
**நீவலியிற் சின மூளுமனத்தொடு நேமியெடுத்ததுவே''**

-மூன்றாம் போர்ச்சருக்கம் - 18

**''வானரசிற் புகுதாமல் எனக்குயர் வானுலகைத்தருவான்**
**நீநினைவுற்றது போன பிறப்பிலென் நீடுதவப்பயனே!**
**யானுமினிப் பிறவாமல் அளித்தருள் ஈசன் எனப்பரவா**
**ஞானமனத்தொடு நாகுழறப் பல நாடியுரைத்தனனே''**

-மூன்றாம் போர்ச்சருக்கம் 19

'கண்ணபெருமானே! முன் ஒரு அவதாரத்தில் நரசிங்கமாகத் தோன்றி இரணியனையும், பின் ஒரு அவதாரத்தில் வாமனராகத் தோன்றி மாவலியையும், மற்றுமொரு அவதாரத்தில் இராவணனையும் மாய்த்த பரம்பெருளே! என்னையும் ஒரு இலக்காய்க் கொண்டு அழிக்கக் கருதுவாய் ஆனால், அது நான் முன் பிறப்பில் செய்த தவம் அல்லாமல் வேறில்லை.

''அன்றைக்கு ஆதி மூலமே என்று உனையழைத்த ஆனையைக் காக்க ஆழி எடுத்து முதலையைக் கொன்று முத்தியழித்தாய். எனக்கு இன்று நீமுத்தியளிக்க முன்வந்தாய் என்றால் அதற்கு நான் பெரும் பாக்கியமே செய்திருக்க வேண்டும். ஆழியை விட்டு என் ஆவியை ஏற்றுக் கொள் கண்ணா! பிறவியினி இல்லாத முத்தி நிலையை எனக்கருளிச் செய்'' என முகமும் அகமும் மலர்ந்து வீடுமர் கண்ணபெருமானை வேண்டிக் கொள்கிறார்.

வீடுமர், திருமாலே கண்ணபெருமானாகத் தோன்றியிருக்கும் அவதாரச் சிறப்பை நன்கு உணர்ந்தவர். திருமாலின் பரம பக்தர். அப்படிப் பட்ட பக்தர் தாம் போற்றி வழிபடும் திருமாலால் தாம் இரட்சிக்கப்படுவதை விழையாமல் இருப்பாரா?

உண்மையில் கண்ணபெருமான் தம் கையில் சக்கரத்தை ஏந்தி வீடுமரை நோக்கிப் பாய்ந்ததும் கூட வீடுமரின் வாக்கைக் காப்பதற்கே ஆகும்.

கண்ணபெருமான் பாரதப்போரில் பார்த்தனுக்குத் தான் சாரதியாக மட்டும் பணி செய்வதல்லாமல், 'படைக்கருவிகள் ஏதும் எடுப்பதில்லை'யென, முன்பு துரியோதனன் தன் சகாயம் நாட துவாரகைக்கு வந்த போது, துரியோதனனுக்கு வாக்களித்திருந்தார்.

துவாரகையில் இருந்து அத்தினாபுரிக்கு மீண்ட துரியோதனன், கண்ணபெருமான் தனக்குக் கொடுத்த உறுதியினை அரசவையில் அறிவித்த பொழுது வீடுமர், 'கண்ணபெருமான் ஆயுதம் எடேன் என்றாரா? அவரை ஆயுதம் எடுக்க வைப்பான் இந்த வீடுமன். மிகக் கடுமையாகப் போர் புரிந்து பாண்டவர் படைகளை நாசப்படுத்தி கண்ணபெருமானையும் ஆயுதம் எடுக்கவைப்பேன்' என்று வீடுமர் அன்று உரைத்திருந்த உறுதிமொழியை அறிந்திருந்தார் கண்ணபெருமான்.

தன் வாக்கு பொய்த்தாலும் பொய்க்கலாம். தன் அடியவனின் வாக்கு பொய்க்கலாகாது என்று விழைகிறது கண்ணபெருமானின் திருவுள்ளம். அதனால்தான் இன்றைய மூன்றாம் நாள் போரில் சக்கராயுதத்தை வீடுமர்மேல் தொடுப்பதாகக் கூறி கண்ணபெருமான் ஆழியை எடுத்து இந்தத் திருவிளையாடலையும் புரிந்தார் என்று சொல்ல வேண்டும். ''இன்ன தன்மையன் என்று அறிவொண்ணா எம்மானை, எளிவந்த பிரானை'' என்று இறைவனின் தன்மையைப் பாடுவார் சுந்தரமூர்த்தி நாயனார்.

பக்தர்களின் பக்தி உள்ளத்தை மெச்சி, அவர்கள் விழைந்த வண்ணமாக அருள் புரிவது கடவுளின் கருணை உள்ளமாகும். அத்தகைய கருணை உள்ளத்தால்தான் கண்ணபெருமான் தாம் செய்து தந்திருந்த சத்தியத்தையும் மறந்து வீடுமருக்காகத் தம் சக்கரத்தை எடுத்தார்.

அர்ச்சுனன் தன் தவறைப் பொறுத்தருள வேண்டித் தான் பணிந்து வேண்டிய படியாலும், வீடுமரும் துதித்து கண்ண பெருமானிடம் முத்தி தந்தருள வேண்டிநின்ற படியாலும், தம் சினம்

# சதுரகிரி

கவிஞர் ஈரோடு ஆற்றலரசு

விருதுநகர் மாவட்டத்தில் விண்முட்ட எழுந்து நிற்கும் இந்த சதுரகிரி மலையில்தான் எண்ணற்ற சித்தர்கள் தங்கி வாழ்நதிருக்கிறார்கள்.

போகர், சட்டைமுனி, கோரக்கர், பாம்பாட்டி சித்தர் இப்படி எத்தனையோ சித்தர்கள் இன்னும் இருந்து வருகின்றார்கள். எண்ணற்ற மூலிகைகள் இருக்கின்றன.

தனி மனிதனாக மலையைக் காண செல்வது எளிதான செயலன்று. இன்னும் விழிக்குப் புலப்படாத சித்தர்கள் ஆன்மாக்கள் அங்கு வலம் வந்து கொண்டிருக்கின்றன. ஆடிமாத அமாவாசை அன்றுதான் அம்மலை வளம் காணக் கூட்டமாய் மக்கள் சென்று திரும்புகின்றனர்.

சதுரகிரி மலைக்குச் சென்றால்
சங்கடம் தீர்ந்து போகும்!
சதுரகிரி மலையைக் கண்டால்
சாதாரண வாழ்வே மாறும்!
சதுரகிரி மலைமீ தெங்கும்
சித்தரின் கோயில் காணும்!
சதுரகிரி வனத்துள் சென்றால்
சாகாத ஞானம் தோன்றும்!

சதுரகிரி சுந்தர லிங்கம்
சத்தான வாழ்வைத் தருவார்!
சதுரகிரி மகாலிங் கைய்யா
சிறப்பான அருளைத் தருவார்!
சதுரகிரி மலையில் காணும்
சஞ்சீவி மூலிகை யெல்லாம்
சதுரகிரி தன்னில் நின்றே
சாதனை செய்கு தைய்யா!



விருதுநகர் மாவட் டத்தில்
விண்முட்ட நிற்கு தைய்யா!
அருள்ஞான போகர் பல்லோர்
அட்டமா சித்தி பெற்றார்!
திருவருள் பெற்ற வர்க்கே
தித்திக்கும் வாழ்வைத் தந்தார்!
உருமாறும் வித்தை கற்றே
உலகெலாம் சுற்றி வந்தார்!

எண்ணிலா மூலி கைகள்
எழுந்தது நிற்கு தைய்யா!
கண்ணிலே காண் பதற்கு
கடவுளின் கருணை வேண்டும்!
மண்ணிலே மரண மில்லா
மாபெரு வாழ்வும் கண்டார்!
பண்ணிலே பார்த்த வற்றை
பண்புடன் பாடி வைத்தார்!

சஞ்சீவி மூலி கையின்
சாதனை சொல்ல ற்கரிது!
சஞ்சீவி மலையைப் பெயர்த்து
சரித்திரம் படைத்த அனுமன்!
சிரஞ்சீவி யாக நின்றே
சிறப்பினை நெய்தா னம்மா!
சஞ்சீவி மூலி கைதான்
சாகாத கல்ப மாகும்!

கருநொச் சிகரிய நெல்லி
காலனை ஓட்டும் கொல்லி!
அருமைகல் தாம ரைதான்
அம்மலை மீதே காணும்!
பெருவாழ்வு வாழ வைக்கும்
பெட்பிலா மூலி கைகள்;
அருங்குண மறிந்தோ ரெல்லாம்
அதனையே தேடிச் செல்வார்!

தணியும் கண்ணபெருமான் மறுபடியும் தேரில் ஏறி பார்த்தசாரதியாகவே பூபாரம் தீர்க்கும் தம்முடைய பணியைத் தொடர்ந்து ஆற்ற முற்படுகிறார். அர்ச்சுனனும் ''யாரெதிர் நிற்கினும், யாவர் தடுப்பினும் யானினி இப்பகலே சேர முடுக்குவன்'' என்று உறுதி கூறிமறுபடியும் போரில் வேகம் காட்டுகின்றான்.

கண்ணபெருமானே வேகம் போதாது, என்று கருதும்படியாக மெத்தனமாகத்தான் போர் புரிந்து விட்டதை எண்ணி வெட்கப்படுகிற அர்ச்சுனன், தன்னுடைய வில் திறமையை மேலும் காட்டிப் போர் செய்யத் தொடங்க ஆயிரம் ஆயிரமான அம்புகள் அர்ச்சுனனின் வில்லிருந்து சீறிப் பாய்கின்றன; பகைவர்களின் மணி மகுடங்களைப் பொடியாக்குகின்றன பல அம்புகள்.

துரியோதனன் படை வீரர்களின் தலைகளிலிருந்து மூளைகள் சிதறிப் போர்க்களமே சேறு ஆகும்படியாகப் பாய்ந்து அவர்களைக் கொல்லுகின்றன பல அம்புகள். பகைவர்களின் உடல்கள் தோறும் பாயும் அம்புகளால் அங்கே பலப்பல இரத்த அருவிகள் பீறிட்டுப் பாய்ந்து ஓடுகின்றன.

வீடுமர் ஒருவர் மட்டுமே அர்ச்சுனனின் ஆற்றலுக்கு ஈடுகொடுத்துத் தன்னை காப்பாற்றிக்கொள்ள முடிகிறதே தவிர, மற்றவர்கள் எல்லாம் மேனி புண்பட, இன்னுயிர் இருக்குமோ பறக்குமோ என்பதாக அஞ்சி, மனம் நடுங்கித் துடிக்கிறார்கள். சாது மிரண்டாலே காடு கொள்ளாது என்பார்கள். அர்ச்சுனன் மிரண்டால் குருக்ஷேத்திரம் கொள்ளுமோ?

மலைப் பாம்புகளோ என்று மலைக்கும் படியாக அங்கங்கே யானைகளின் அறுக்கப்பட்ட துதிக்கைகள் கிடக்கின்றன. இறந்து கிடப்பவர்களின் அறுபட்ட தலைகளை கௌவிக் கொண்டு நரிகள் பல ஓடிக்கொண்டிருக்க மனித தலை கொண்ட அதிசய மிருகங்களாக அவைகள் காட்சியளிக்கின்றன.

மாண்டு கிடப்பவர்களின் மகுடங்களைக் கையில் எடுத்துக் கொண்டு, அவற்றைத் தாளமாகத் தட்டிக்கொண்டு மூன்றாம் நாள் போரில் முகுந்தனின் மைத்துனன் அர்ச்சுனன் காட்டிய பராக்கிரமத்தைக் கொண்டாடிப் பேய்களும் நடனமாடிக் களிக்கின்றன. கௌரவர்கள் சிந்திய இரத்தம் ஆதவன் மேலும் பட்டு, அவனுடலைக் கறைபடச் செய்து விட்டதால், கதிரவனும் தன் கறையைப் போக்கிக் கொள்ள மேற்குக் கடலில் மூழ்க, எங்கும் இருள் பரவிக் கொண்டிருக்கிறது.

பாண்டவர் படையினர் அர்ச்சுனன் ஆற்றிய வீரப்போரை ஆரவாரித்துப் போற்றவும், துரியோதனன் படையினர் தம் பக்கத்தில் மாண்டுபட்ட மன்னருக்காக அழுது அரற்றவும் மூன்றாம் நாள் போர் நிறைவுற்றது என்கிறார் வில்லிப்புத்தூரரார்.

**''தருமன்மா பெருஞ்சேனை தன்னுளார்**
**தங்களாதரத் தொடு தனஞ்சயன்**

**பொருவில் ஆண்மையும் வீமன்மானகன்**
**பொருத வீரமும் புகழ்ந்து பாடினார்**

**அரவகேதனன் சேனை தன்னுளார் அழிந்த**
**மன்னருக்கு அழுது அரற்றினார்**

**இருவர் சேனையும் கண்படாதால் அன்றிரவு**
**பட்டதென் னென்று இயம்புவாம்''**

- மூன்றாம் போர்ச்சருக்கம் - 29

(தொடரும்)



# உரிமையான சொந்த வீடு குடிபுக வரம் அருளும் மகிமையான சிறுவாபுரி முருகன்

''திருப்புகழ் அமுதன்''
வலையப்பேட்டை ரா.கிருஷ்ணன்

முருகா ! முருகா ! என்று எப்பொழுதும் ஜபிப்பதையே சிறுவயது முதல் விரதமாகக் கொண்டிருந்த அம்மையார் ஒருவர், திருமணம் ஆன பின்பும் முருகா ! முருகா ! என்ற நாம உச்சரிப்பைத் தவிர வேறு வழி அறிந்திலர் ; தீவிலனைப்பயன் உந்துதலால் முருக நாம ஒலியைக் கேட்கும் போதெல்லாம் எரிச்சலடைந்த அவளது கணவனார் ஒரு நாள் மிகக் கோபம் கொண்டு அவ்வம்மையாரின் கையைத் துண்டித்தார், அந்நிலையிலும் ''முருகா! முருகா ! என்னைக் காத்தருள்'' என்று அம்மையார் புலம்ப, சிறுவாபுரி முருகன் அம்மையார் முன்பு தோன்றி, வெட்டப் பட்ட கையை முன்போலாக்கி அருள் புரிந்தார், சேய்த்தொண்டர் புராணத்துள் போற்றப்படும் ''முருகம்மையார்'' என்ற ஒப்பற்ற அடியார் வாழ்ந்த உயர்ந்ததலம் ''சிறுவாபுரி''. இவ்வரலாற்றை ''சிறுவை நகர்க்குகன் பதிகத்தில்'' திருவாமாத்தூர் தவத்திரு முருகதாசசுவாமிகள் அருளிச் செய்துள்ளார்.



**''முருகா என்றொரு பெயரை மறவா**
**மாதொருத்தி கையை அவள் கணவன்**
**வெட்டும் கொடிய**
**தீந்தமைக் குடனே முன்னிருந்த படி**
**கைதழைக்கும்**
**திருவிளையாட் டினைச் செய்த சிறுவை**
**நகர்க் குகனே.''**

எனவே ''சந்ததமும் அடியார்கள் சிந்தையது குடியான தண்சிறுவை'' என்று முருகம்மையாரின் வரலாற்றை குறிப்பாகக் காட்டி அடியார்களது இதய பீடமே ஆண்டவன் உறையும் இடம்; முருகனடியார்களின் இதய பீடத்தில் சிறுவாபுரி முருகன் விளங்குகிறார் என்று அருணகிரியார் கூறுகிறார் எனில் எத்தகைய அருள் அனுபவம் அவருக்கு கிடைத்திருக்கும், இச்சிறுவாபுரி முருகன் சன்னிதானத்தில் அவர் பாடியுள்ள நான்கு திருப்புகழ் பாடல்களும் தனிச் சிறப்பைக் கொண்டவை.

அடியார்களது சிந்தையிலே எப்போதும் குடி கொண்ட அழகன் வாழும் பதியாகிய சிறுவாபுரி அல்லது சிறுவை, திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி தாலுக்காவில் பொன்னேரிக்கு மேற்கில் 10 கி.மீட்டரில் உள்ளது. சென்னையிலிருந்து கும்மிடிப்பூண்டி செல்லும் ஜி.என்.டி. சாலையில் 35-வது கி.மீட்டரில் உள்ளது. தற்போது இவ்வூர் 'சின்னம்பேடு' என்றும் 'சிறுவரம்பேடு' என்றும் வழங்கப்படுகிறது.

சென்னை கோயம்பேடு பஸ் நிலையத்திலிருந்து 133 என்ற எண் உள்ள பஸ் சிறுவாபுரி (சின்னம்பேடு) முருகன் கோயில் வழியாக ஆரணி, பெரியபாளையம் செல்கிறது. 131, 131-A, 132, 132-A ஆகிய பஸ்களில் சென்றால் அகரம் என்ற இடத்திலிருந்து ஒரு கி.மீட்டர் நடந்து செல்ல வேண்டும். பொன்னேரியிலிருந்து பெரிய பாளையம் செல்லும் டவுன் பஸ் சிறுவாபுரி கோயில் வழியாகச் செல்கிறது.

சிறுவாபுரிக்குப் பெயர் வந்த வரலாறு மிகவும் சுவையானது. ஸ்ரீராமபிரானின் புதல்வர்களான குசன், லவன் ஆகிய இருவரும் நான்கு வகையான சேனைகளோடு (தமது தந்தை என்று அறியாமல்) கோதண்டராமரோடு எதிர்த்துப் போர் செய்து வெற்றி பெற்ற ஊர் சிறுவாபுரி எனப்படும் சிறுவர்புரி. சிறுவர் - குசலவர்கள் ; சிறுவர் + அம்பு+ எடு = சிறுவரம்பெடு என்றாகி தற்போது சின்னம்பெடு என்று மருவியுள்ளது. ஸ்ரீராமபிரானின் புனிதத் திருப்பாதங்கள் பட்ட இடமாகத் தலபுராணம் சொல்லும்.

எனவே மாலுக்கும் மருகனுக்கும் விருப்பமான இத்தலத்தில் வளம் மிகுந்து, வரும் அடியார்களுக்கு வரத்தையும் மிகுதியாக அளிக்கிறான் முருகப்பெருமான். இக்குறிப்பை அருணகிரிநாதர் இத்தலத் திருப்புகழில் ('பிறவியான' என்ற பாடலில்) அழகாகக் காட்டுகிறார்.

**''சிறுவராகி இருவர் அந்த கரிபதாதி**
**கொடு பொருஞ் சொல் சிலை**
**இராமன் உடன் எதிர்த்து சமராடி**
**செய்மதான நகர் அமர்ந்த அளகை போல**
**வளம்மிகுந்த சிறுவை மேவி வரம்**
**மிகுந்த பெருமாளே''**

# விபூதிக் குட்டை



சிவபெருமான் காமனை எரித்த திருத்தலமே திருக்குறுக்கைத்தலமாகும்.

காமனை எரித்த இடம் இன்றும் இங்கு விபூதிக் குட்டை என வழங்குகின்றது. இங்குள்ள மண் வெண்மையாய் விபூதி போல் உள்ளதைக் காணலாம். இதனை அணிய தீராத நோய்களும் தீரும்.

பழநிப் பெருமானின் திருவருள் பெற்று, திருவண்ணாமலை ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகளின் குருவருள் பெற்று வள்ளிமலையில் திருப்புகழ் ஆசிரமம் அமைத்து, 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் திருப்புகழை இசையோடு பரப்பியதில் பெரும் பங்கு கொண்டவர், தவத்திரு வள்ளிமலை சச்சிதானந்த சுவாமிகள். அவர் தொகுத்துள்ள அனுஷ்டான திருப்புகழ் பாராயண முறையில், புதிய (சொந்த) வீடு பெற வேண்டுவோர் பாராயணம் செய்ய வேண்டிய திருப்புகழாக "அண்டர்பதி குடியேற" என்னும் பாடலைக் குறிப்பிட்டுள்ளார். இது சிறுவாபுரிக்கு உரிய திருப்புகழ் என்று அன்பர்கள் அறியும் போது இத்தலத்துக்குத்தான் எத்தனை பெருமை! ஆம்! இன்றும் சொந்த வீடு வேண்டுவோரது பிரார்த்தனைகளையும் கோரிக்கை களையும் சிறுவாபுரி முருகன் நிறைவேற்றி வைக்கிறார்.

'அண்டர்பதி குடியேற' பாடலில் வேறு எந்த திருப்புகழிலும் காணமுடியாத வகையில் சிறப்பாக ''மகிழ்மீற; மகிழ்கூற; ''மகிழ்கூர''; ''மகிழ்வாக''



சிறுவாபுரி ஸ்ரீபாலசுப்ரமணிய ஸ்வாமி

என்று நான்கு விதமாக மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் போது அப்பாடலைத் தவறாமல் பாராயணம் செய்வோர், என்றும் எப்போதும் மகிழ்ச்சியுடன் இருப்பர் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ! மேலும் மகிழ மலர்களைக் கொண்டு சிறுவை அழகனை அர்ச்சித்தால் நமக்கு வாழ்க்கையில் மகிழ்ச்சியும் இன்பமும் பெருகும், அப்பெருமாளை அர்ச்சிப்பதற்கு உதவியாக இத்தல திருப்புகழ்ப் பாடல் ஒன்று ''சீதளவாரிஜ பாதா நமோநம'' என்று அர்ச்சனைப் பாட்டாகவே அமைந்துள்ளது அதிசயமாகும்!


பதினாறாயிரம் திருப்புகழ்ப் பாடல்களை அருணகிரியார் அருளியுள்ளதாகக் கூறுவர். ஆனால் இன்று நமக்கு கிடைத்துள்ளவை 1330 பாடல்கள் மட்டுமே. இதில் ஆறு பாடல்கள் அர்ச்சனைத் திருப்புகழாகும். அவற்றுள் ஒன்று, ''சீதளவாரிஜ பாதா நமோநம'' என்று தொடங்குகிறது. இத்திருப்புகழ் சிறுவாபுரிக்கே உரியது! இதில் ஷண்மத வழிபாட்டிற்குரிய கணபதி, சிவன், சூரியன், அம்பிகை, திருமால் ஆகிய அனைவரும் குறிப்பிடப் பெற்றுள்ளனர். இப்பாடலைப் படிக்கும்போது அல்லது பாடும்போது நம் உள்ளத்தில் முருகப்பெருமானை அர்ச்சித்தபலனும், அறுவகை சமய வழிபாடு செய்த பயனும் கிடைக்கும் என்பதை அவரவர்கள் அநுபவித்து இன்புறலாம்.

புத்தம் புதுப் பொலிவுடன், அழகான கோபுரத்துடன், சீரும் சிறப்பும் பெற்ற சிறுவாபுரி முருகன் கோயிலில், நுழைந்தவுடன் நம் கண்களை விட்டு அகலாதது, அங்குள்ள மயில் மண்டபம். சிற்பி வடித்த அந்த அற்புத மரகத மயில் நம்மோடு பேசுவது போன்று தோன்றும் ! இத்தகைய அழகு மயிலை அனைத்திந்தியாவிலும் வேறெங்கும் காண இயலாது. அங்குள்ள கொடி மரத்தடியில் வீழ்ந்து வணங்கி விட்டுக் கோயிலை வலம் வருவோம். தெற்குப் பிரகாரத்தில் சூரியனுக்கு எதிரில் கிழக்கு நோக்கி நமக்கு முதலில் காட்சி தருபவர் ''குஞ்சரமாமுக விக்னப்ரபு'' - மரகத விநாயகப் பெருமான் அமர்ந்துள்ள எழிலான கோலம் தான் எத்தனை வனப்பு ! அப்பப்பா ! அவரது அழகையும் கம்பீரத்தையும் சொல்லில் வடிக்க முடியாது. பிரகாசமான மரகதப் பச்சைநிறத்தில் நம்மை கொள்ளை கொள்ளுவார்.

அவரிடம் நாம் எதையும் கேட்கலாம் ''உம்பர் தரு, தேனு, மணி'' என்று எல்லாவற்றையும் கொடுப்பார். அவரை வணங்கி தொடர்ந்து கோயிலை வலமாக வரும்போது பைரவர் சன்னதி அழகாக உள்ளது. அவரையும் வழிபட்டு இப்போது நாம் உள்ளே நுழைகிறோம். அங்கே உள் மண்டபம் தாண்டி சென்றதும் சிறுவை மேவி வரம் மிகுந்த பெருமான் அருட்காட்சி அளிப்பார். அவரது மாட்சி



சிறுவாபுரி மரகத விநாயகர்



**மரகத மயில்**

நமது சிந்தையை ஈர்க்கும் காட்சி. அவன் புண்டரிக விழியாளன். அண்டர் மகள் மணவாளன். தண்தரள மணிமார்பன். செம்பொன் எழில் செறிரூபன். தண் தமிழின் மிகுநேயன்.

அவனது வலது திருக்கரம் ஒன்று அடியார்களுக்கு அபயம் அளித்து வேண்டிய வரங்களை அருளவும், பின்வலக்கரம் ஜபமாலையும், முன் இடக்கரம் இடுப்பிலும், பின்கரம் கமண்டலமும் கொண்டு விளங்குகிறது. இக்கோலம் பிரம்ம சாஸ்தா வடிவமாகும்.


பிரணவப் பொருளை அறியாத பிரமனைத் தண்டித்து சிருஷ்டித் தொழிலை மேற் கொண்ட கோலமே பிரம்ம சாஸ்தா வடிவமாகும். முருகப் பெருமானது அருட் கோலங்களில் ஒன்றான இவ்வடிவத்தில் அவனை வணங்குவோர் பிரம்ம வித்தைகள் கைவரப்பெற்று ''புந்தி நிலை அறிவாளனாகத்'' திகழ்வர் என்பதை அருணகிரியார் கூறுகிறார். சிறுவாபுரி அறிவாளனை வணங்கிய பின், முன் மண்டபத்தில் விளங்கும் அருணகிரி நாதரை தரிசிக்கலாம். அவருக்கு அருகில் சிறுவாபுரி திருப்புகழ் பாடல்கள் மற்றும் குமாரஸ்தவம், வேல் வணக்கம் போன்ற கல்வெட்டுக்கள் காட்சி யளிக்கின்றன.

இத்தலத்திற்கு வந்து வழிபடுவோர்களுக்கு, வசதியாக இப்பாடல் கல்வெட்டுக்கள் உதவுகின்றன. இங்குப் பஞ்சலோக (ஐம்பொன்) படிமத்தில் காட்சியளிக்கும் திருவீதி உலா நாதரான (உற்சவ மூர்த்தி) ஆறுமுகப் பெருமானின் வடிவம் மிகவும் அற்புதமானது. அதற்கு எதிரில் அமைந்துள்ள விசாலமான பெரிய உள் மண்டபத்தின் ஒரு புறம் உற்சவ மூர்த்திகள் அறை உள்ளது. அதனை அடுத்து அருணாசலேச்வரர் மரகதப் பச்சைவண்ணத்தில் காட்சியளிப்பார்.

அருணகிரியார் தோன்றி அருளிய தலமான திருவண்ணாமலையில், ''மயிலுமாடி நீஆடி வரவேணும்'' என்ற அவரது வேண்டுகோளின்படி முருகப் பெருமான் தூணில் தோன்றி அருட்காட்சி வழங்கினார். அச்சன்னதி ''கம்பத்து இளையனார்'' சன்னதி என்று இப்போது வழங்கப் பெறுகிறது. அதைப் போன்றே சிறுவாபுரி திருப்புகழில் ''மைந்துமயில் உடன் ஆடி (உடனாடி) வரவேணும்'' என்று வேண்டியபடி இங்கும் அருட் காட்சியளித்துள்ளார். இந்த ஒற்றுமையைப் போலவே இருதலங்களிலும் அண்ணாமலை நாதரும் உண்ணாமுலையம்மையும் காட்சி யளிக்கிறார்கள் என்று சொன்னால் மிகவும் பொருத்தம்தானே! அருணாசலேச்வரரையும் அழகு மிக்க எழில் கோலத்துடன் காட்சியளிக்கும் வள்ளி மணவாளப் பெருமானையும், அபீதகுஜாம்பிகை (உண்ணாமுலையம்பிகை)யையும் வழிபாடு செய்து மீண்டும் வெளிப் பிரகாரம் வலம் வரும்போது சண்டிகேசுவரர், நாகர், பைரவர் ஆகிய சன்னதி களையும் வணங்கிக் கொடிமரத்தடியில் நமஸ்கரித்து வழிபாட்டை நிறைவு செய்து கொள்ளலாம்.

''அண்டர்பதி குடியேற மண்டசுரர் உருமாற
அண்டர்மன மகிழ்மீற அருளாலே
அந்திரியொ(டு) உடனாடு சங்கரனும் மகிழ்கூர
ஐங்கரனும் உமையாளும் மகிழ்வாக
மண்டலமும் முனிவோரும் எண்திசையில் உளபேரும்
மஞ்சினனும் அயனாரும் எதிர்காண
மங்கையுடன் அரிதானும் இன்பமுற மகிழ்கூற
மைந்துமயிலுடனாடி வரவேணும்.
புண்டரிக விழியாள! அண்டர்மகள் மணவாள!
புந்திநிறை அறிவாள! உயர்தோளா!
பொங்கு கடலுடன் நாகம் விண்டுவரை இகல்சாடு
பொன்பரவு கதிர்வீசு வடிவேலா!
தண்தரள மணிமார்ப! செம்பொன் எழில் செறிரூப!
தண்தமிழின் மிகுநேய முருகேசா
சந்ததமும் அடியார்கள் சிந்தையது குடியான
தண் சிறுவை தனில் மேவு பெருமாளே!''

தேவர்களுக்கு உரிமையான அண்டர்பதி குடியேற அருளிய முருகப்பெருமான், அடியார் களுக்கும் தத்தமக்கு உரிமையான சொந்த வீட்டில் குடியேற அருள் புரிந்து மகிழ்ச்சிக் கடலில் திளைக்கச் செய்வான் என்று இத்திருப்புகழ் உணர்த்துகின்றது. வாருங்கள் சிறுவாபுரி முருகனை வழிபட்டுச் சொந்தவீடு பேறு பெற்று சிறப்புடையுங்கள்.



# திருமந்திர உபதேசம்

திருமந்திரச்செல்வர் டி.வி. வெங்கட்ராமன், இ.ஆ.ப. (ஓய்வு)

ஆணவம் என்ற ஒரு மலம் தன்னைக் கட்டுப் படுத்துகிறது என்பதை உயிர், ஒரு அறிவுப் பொருள் ஆயினும் அறிந்து கொள்வதில்லை. முடிவில், உயிர் இந்த அறிவைத் தானாகப் பெறுவதில்லை. தன்னை ஒரு அறிவுப் பொருள் என்று உயிரானது தெரிந்து கொண்ட பிறகு தான், ஆணவம் என்ற மலம் தன்னைக் கட்டுப்படுத்தியது என்று உயிரால் தெரிந்து கொள்ள முடியும். இங்கே தான் அடிப்படையான, ஆழமான அறியாமை நிலை ஒன்று உயிரைக் கட்டுப்படுத்துகிறது.

இறைவனின் திருவருள் துணை இங்கு தான் இன்றியமையாதது. உயிரின் ஆணவ மலத்தை அகற்றுவது திருவருள். திருவருள் பதிதலும், ஆணவத்தின் வலிமை தேய்தலும் ஒரு நிலை அனுபவங்களாகவே காணப்படுகின்றன. உயிரின் அறிவும் தனது உண்மை வடிவம் பெற்றுத் திருவருளைக் கண்டு இன்புறுவதும் இங்கே தான் தொடங்கும். தான் சார்ந்த பொருளின் தன்மையையே பெறும் உயிர், திருவருளைக் கண்டபின், வேறு எதையும் நாடாது.

உயிரின் அறிவு இந்த வகையிலே தூய்மை அடைவதை ஞானம் பதித்தல் என்கிறார் திருமூலர். அதாவது உயிரின் அறிவில் சிவபெருமானின் ஞானசக்தி பதிவதாகும்.

***''அறிவு அறிவென்ற அறிவும் அனாதி***
***அறிவுக் கறிவாம் பதியும் அனாதி***
***அறிவினைக் கட்டிய பாசம் அனாதி***
***அறிவு பதியின் பிறப்பறுத் தானே''***

(திருமந்திரம் 2405)

பிறப்பு அறும் என்றார். உயிரின் பிறவித் தொடர்ச்சி அறுக்கப் பெறும் என்று கொள்ள வேண்டும். அவ்வாறு அறுபெறுவது திருவருளால் என்பதைத் தெளிந்து கொள்ள வேண்டும்.

உயிரின் அறிவைப் பாசம் கட்டுப் படுத்துவதால் உயிருக்குப் பசு என்ற பெயரும் உண்டு. இவ்வுலகில் உடல் எடுத்து மும்மலம் கொண்டவைகளாக இருக்கும் எல்லா உயிர்களும் பசுக்களே சகலர்கள் - கலைகளோடு கூடியவர்கள் - என்றும் சொல்வார்கள்.

ஆன்மாக்கள் எண்ணற்றவை என்பது சைவ சித்தாந்த உண்மை. திருமூலரும் பசுக்கள் கோடிக் கணக்கில் உள்ளன என்பார். பார்க்கப் போனால், பிரமன் முதல் பல தேவர்களும் பசுக்கள்தான் என்கிறார். அதாவது சகலர்கள் ஆணவம், கன்மம், மாயை என்கிற மலம் மூன்றும் பதிந்து இருக்க, அவர்கள் மீண்டும், இப்புவியில் பிறந்து, வினைப் பயன்களைத் தீர்த்துக் கொண்டாக வேண்டும். அவர்கள், பல்வேறு பிறவிகளில் செய்த நற்செயல்கள், புண்ணியங்கள் காரணமாக, பல புவனங்களில், திருவருளால் பதவிகளையும், பொறுப்புகளையும் நிர்ணயிக்கப்பட்ட கால அளவுக்கு வகிக்கலாமே ஒழிய, முடிவான இன்பம் கொடுக்கும் வீட்டுப் பேற்றினைப் பெற்று விட இயலாது.

ஆகவே, பிரமன் உட்பட, பசுக்களைக் கட்டியுள்ள பாசங்களை நீக்குவதற்கு, இறைவனால் தான் இயலும். பசுத்தன்மை நீங்கிய ஆன்மாக்கள், போகம் வேண்டாது, இறைவனுடைய அருளையே நாடி, இறைவனை விடாமல் கொள்ளும் என்கிறார் திருமூலர் பெருமான்.

***''பசுப்பல கோடி பிரமன் முதலாய்***
***பசுக்களைக் கட்டிய பாசம் மூன்றுண்டு***
***பசுத்தன்மை நீங்கி அப்பாசம் அறுத்தால்***
***பசுக்கள் தலைவனைப் பற்றி விடாவே''***

(திருமந்திரம் 2406)

இதைத்தான் திருமூலர் ''பதிஅணுகிற்பசு பாசநில்லாவே'' என்றார்.

பாசங்கள் எவ்வாறு உயிரைப் பாதிக்கின்றன? ஆணவம் உயிரின் வியாபக, உண்மை அறிவை மறைத்து, அணுத்தன்மையை உண்டு பண்ணி விடுகிறது. நான் என்ற முனைப்பை உண்டாக்குகிறது. உயிரானது, உடல்வழியாகப் புலன்களைத் தொடர்ந்து ஆசாபாசங்களை வளர்க்கும் போது மாயையைக் கருவியாக வைத்து செயல்படுகிறது. நான் என்னும் முனைப்பு சேரும் போது வினைகள் உண்டாகின்றன. உயிர் செயல்பாடுகளில் ஈடுபடுகிறது. அவ்வாறு செய்யும் போது, நான் செய்கிறேன் என்று கருதியே செய்வதால், அதன் பலனை உயிர் அனுபவிக்க விரும்புகிறது என்பது தெளிவு.

ஒரு உயிர் ஒன்றைச் செய்யும் போது அதற்கான பலனை அந்த உயிரே அனுபவிக்க வேண்டும்.

இவ்வாறு பலன்கள் அனுபவிக்கச் செய்பவன் இறைவன். உயிர்கள் பால் இறைவன் வைத்துள்ள கருணையால், இவ்வாறு செய்கிறான். உயிருக்கு வினைப்பயனை ஊட்டிக் கழிக்க வைப்பது என்பது உயிரின் மேம்பாட்டுக்கே ஆகும். அதன்வழி இறைவனுடைய திருவடிகளை அடைவதற்கு அவன் செய்யும் உபாயமுமாகும் என்கிறார் திருமூலர் பெருமான்.

**''நண்ணிய பாசத்தில் நாள் எனல் ஆணவம்**
**பண்ணிய மாயையில் ஊட்டல் பரிந்தனன்**
**கண்ணிய சேதனன் கண் வந்த பேரருள்**
**அண்ணலடி சேர் உபாயமதாகுமே''**

(திருமந்திரம் 2421)

உயிர் பாசநிலையில் கிடப்பது அறியாமை என்றாலும் அதிலே ஒரு பயன் காணப்படுகிறது என்கிறார் திருமூலர். உண்மையில் பயன் ஒன்றல்ல, மூன்று என்கிறார். அறம், பொருள், இன்பம் என்பவை தான் அவை. அறம், பொருள், இன்பம் ஆகியவற்றின் குறிக்கோளைச் சான்றோர் உபதேசத்தின் வழியாகக் கேட்டு தெளிந்து கொள்ள வேண்டும். இவை முடிவான பயனாகாது என்பதையும் இவையெல்லாம் வீடுபேறு பெறுவதற்கான சாதனங்கள் என்பதையும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

சாதனங்கள் சுட்டிக் காண்பிப்பது இறை ஞானத்தை. இந்த ஞானம் ஒன்றையே விரும்பி, உலகப் பற்றுக்களையெல்லாம் களைந்து கொண்டு இறைவனையே நாள் தோறும் வழிபடுங்கள் என்கிறார் திருமூலர். அப்போது இறை அருளும், ஞானமும் கிட்டும். அது எப்படி இருக்கும்? இது காறும் இறைவன் குடத்தில் வைத்த விளக்கு போல் மறைந்திருந்தான். இப்போது குன்றில் இட்ட விளக்கு போல் வெளிப்பட்டு விளங்குவான். விளக்கு ஒன்றே. நமது மனநிலை அதை வெவ்வேறாகக் கண்டு கொள்கிறது.

**''கிடக்கின்றவாறே கிளர்பயன் மூன்றும்**
**நடக்கின்ற ஞானத்தை நாள் தோறும் நோக்கித்**
**தொடக்கொன்று மின்றித் தொழுமின் தொழுதால்**
**குடக்குன்றில் இட்ட விளக்கது வாமே''**

(திருமந்திரம் 2407)

தொழுதல் என்பது சைவ அருளாளர்கள் எடுத்துத் தந்த நால்வகை நெறிகள் ஆகும். சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பவை அவை.

இதுவரை தெரிந்து கொண்டதில் பதிக்கும் பசுவுக்கும் இடையே உள்ளது பாசம் என்பது தெளிவாகிறது. பாசத்தை நீக்குபவன் இறைவன் என்பதும் தெளிவு. அறியாமையால் இறப்பு - பிறப்பு எனப்படும் சூழலில் அகப்பட்டுத் தவித்துக் கொண்டிருக்கும் ஆன்மாவை தாங்கிக் கொள்பவன் இறைவன்.

## பங்குனி மாதத்தில் நாயன்மார் நட்சத்திரங்கள்



**நேசர் - ரோகிணி**
**கணநாதர் - திருவாதிரை**
**முனையடுவார் - பூசம்**
**காரைக்கால் அம்மையார் - சுவாதி**
**தண்டியடிகள் - உதயம்**

''தன் கடன் அடியேனைத் தாங்குதல்'' என்றார் அப்பர்.

முன்னொரு காலம் சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர் என்ற நான்கு முனிவர்கள் கல்வி, கேள்விகளில் மிக்க தேர்ச்சி பெற்றவர்களாக இருந்தார்கள். வேதங்களின் உட்பொருளை நன்கு தெரிந்து கொண்டிருந்தார்கள். பல துறைகள் வல்லவர்களாக விளங்கினார்கள். பரவலாகக் கற்றறிந்தும் அவர்கள் தெளிவடையவில்லை. உள்ளத்திலே ஐயப்பாடுகள் தோன்றிக் கொண்டே இருந்தன. அந்த ஐயப்பாடுகளை அவர்கள் எவ்வளவு முயன்றும் போக்கிக் கொள்ள இயலவில்லை.

அந்த நால்வரும் தென்முகக் கடவுளான தக்ஷிணமூர்த்தியை அணுகினார்கள். தங்களுடைய ஐயப்பாடுகளைச் சொல்லி ஐயம் தீர்க்க வேண்டிக் கொண்டார்கள். வேதாகமங்களின் உட்பொருள் (அத்தம்) அவர்களுக்குத் தெளிவாகவில்லை. வேதாகமங்களின் முடிந்த (உத்தரம்) பொருள் இறைவன். அவன் நீண்டதொரு சொற்பொழிவைச் செய்து ஐயங்களைத் தீர்க்கவில்லை. மாறாக, மோன சமாதியில் அமர்ந்திருந்தான். வலக்கையைக் காண்பித்தான். பெருவிரலும், சிறு விரலும் சேர்ந்திருந்தன. இடையே இருந்த மூன்று விரல்கள் தனிப்பட்டன. அதுவல்லவா பொருள்!

ஆணவம், கன்மம், மாயை தனித்திருக்க, அவற்றிலிருந்து விடுபட்ட சீவன் சிவத்தைச் சேர்ந்து விடும் அல்லவா! இது தான் புகழ் பெற்ற சின்முத்திரையின் விளக்கமாகும். முனிவர்களும் அமைந்த அந்த கைக்குறிப்பினாலேயே தம்மை உள்ளவாறு உணர்ந்து கொண்டார்கள். திருமூலர் பெருமான் இந்தப் புராண நிகழ்ச்சியை அற்புதமாகப் படம் பிடிக்கின்றார்.

**''அத்தத்தில் உத்தரம்கேட்ட அருந்தவர்**
**அத்தத்தில் உத்தரமாகும் திருமேனி**
**அத்தத்தினாலேயே அணையப் பிடித்தலும்**
**அத்தத்தில் தம்மை அடைந்து நின்றாரே''**

(திருமந்திரம் 2424)

(தொடரும்)



# முழுமுதல் தமிழ்த் தெய்வம் முருகன்

டாக்டர் பு.ஏ. இராமையா,இ.ஆ.ப.,
அரசுச் செயலாளர்,
தமிழ் வளர்ச்சி, பண்பாடு மற்றும் அறநிலையத் துறை,
தலைமைச் செயலகம்

தமிழ்நாட்டில் பல பெருங் கடவுள்களும் சிறு தெய்வங்களும் தொன்று தொட்டு வணங்கப்பட்டு வந்தாலும் அன்றுதொடங்கி இன்று வரை தமிழ் மக்கள் அனைவராலும் விரும்பப்படும தெய்வம் முருகனே என்று கூற சில அடிப்படைகள் உண்டு.

ஒவ்வொரு மொழிக்குள்ளும் அதைப் பயன் படுத்தி வந்த மக்களினத்தின் வரலாறு, நாகரிகம், கலை, பண்பாடுகள் பொதிந்துள்ளன. மொழி என்பது அதைப் பயன்படுத்தி வரும் மக்களின் சொத்து என்றாலும் மொழிக்கும் உரிமையான சொத்துக்களும் பல உண்டு. அவற்றில் ஒன்றுதான் அம்மொழிகள் கொண்டிருக்கும் இலக்கண இலக்கியங்கள்.

நாம் பயன்படுத்திக் கொண்டிருக்கும் பழந்தமிழில் நமக்குக் கிடைக்கின்ற பழைய முதல் இலக்கண நூல் தொல்காப்பியம். அந்நூலில் அதுவரை நிலவிவந்த தமிழ் மக்களின் நில வகைப் பாடுகள் கூறப்பட்டுள்ளன.

நானில வகைப்பாடுகளான குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தலுக்கு உரித்தான கருப் பொருள்கள் குறிக்கப்பட்டுள்ளன.

**''தெய்வம் உணாவே மாமரம் புட்பறை**
**செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ**
**அவ்வகை பிறவும் கருவென மொழிப''**

(தொல். அகத்)

இதனால் ஒவ்வொரு நிலத்திற்கும் தெய்வம் பிரிக்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது.


**''மாயோன் மேய காடுறை உலகமும்**
**சேயோன் மேய மைவரை உலகமும்**
**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**
**வருணன் மேய பெருமணல் உலகமும்**
**முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலென**
**சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே''**

(தொல். அகத்)

இதில் மலையும் மலையைச் சார்ந்த இடமான குறிஞ்சி நிலத்திற்கு சேயோன் எனப்படும் முருகவேள் தெய்வமாகக் கூறப்பட்டுள்ளார்.

முருகு என்பதற்கு அழகு என்றும், வேள் என்பதற்கு விருபபமானவன் என்றும் பொருள்.

பழங்கால நிலப்பாகுபாடுகள் இன்றைக்கு இல்லை. ஒவ்வொரு நிலத்திற்குரிய கருப்பொருள் தம் எல்லைகளை உடைத்துக் கொண்டு அந்நிலத்தைத் தாண்டியும் பரவிவிட்டது. அதே போல் குறிஞ்சி நிலத்திற்கு மட்டுமே இருந்த முருக வணக்கம் தமிழ்நாடு முழுவதும் பரவிவிட்டது.



தமிழர்கள் பிற பெருங்கடவுள்களை வணங்கினாலும் அவை பிறமொழியினராலும் வணங்கப்படுகின்றன. சிவந்தவன் 'சிவன்' என்பது தமிழ்ப்பொருள் என்றாலும் இந்தியாவின் பிற சில இனத்தவர்கள் சிவனை தங்கள் கடவுளாகவே எடுத்துக் கொண்டு வணங்குகின்றனர். திருமாலும் அவ்வாறே பிறமொழியினரும் வணங்கப்படும் தெய்வமாகி உள்ளார்.

**''முருகனே சிவனுக்கு ஓங்காரப் பொருளை உணர்த்தினான்**
**என்று சிவனியரும் ஒப்புக்கொள்ளும் செய்திக்**
**கருத்து முருகனின் முதன்மையை நாட்டுகிறது''**

-என்கிறார் மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர்.

தமிழர்களுக்கு மட்டும் பொருந்திய ஒரு தெய்வம் தமிழர்களுக்குத் தேவையாக இருந்தது. தமிழர்கள் மட்டும் வணங்குவதான தெயவம் முருகன் மட்டுமே.

தமிழ்நாட்டில் தங்களைப் பிற மொழி, இன, மத, பண்பாட்டு வல்லாளுமைகளிலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் ஓர் அரணாக முருக வழிபாடு விளங்கியது.

எனவே குறிஞ்சி நிலத்திற்கு மட்டுமே உரித்தானதாக இருந்த தெய்வம், தமிழ்த் தெய்வமானார். இது பரவலான ஒரு செல்லக் கடவுள் ஆனது என்பதற்கு, மற்ற தெய்வங்களை விட அதற்குச் சூட்டப்பட்ட பெயர்களின் எண்ணிக்கையே சான்று.

முருகன், அழகன், கந்தன், கடம்பன், வேலன், வடிவேலன், சேயோன், முருகவேள் போன்ற பல தமிழ்ப் பெயர்கள் மட்டுமன்றி வடமொழிப் பெயர்களான ஸுப்ரமண்யம், ஷண்முகம், சரவணன் போன்ற பெயர்களும் இத்தெய்வத்திற்கு உண்டு. பக்தி இலக்கியங்களான திருமுருகாற்றுப் படை, திருப்புகழ், கந்தபுராணம் போன்ற தமிழ் இலக்கியங்கள் முருகன் பெயரால் தோன்றின. தமிழில் பக்தி இலக்கியங்களுள் முருகக் கடவுளுக்கே அதிக பாடல்கள் எனப் புள்ளி விவரங்கள் கூறுகின்றன.

பிற்காலத்தில் உருவாகி வானொலிகளில், கோயில்களில் ஒலி நாடாக்களில் ஒலிக்கும் காப்புப் பாடல்களான கந்தர் சஷ்டிக் கவசம், சண்முகக் கவசம் போன்றவை முருகனுக்கு அதிகம்.

அதுமட்டுமல்லாது தன்னை வருத்திக் கொண்டு வழிபாடு செய்யும் முறைகள் முருக வழிபாட்டில்தான் அதிகம். தமிழர் வழிபாட்டு வரலாறு மிகவும் பழைமையானது. தீ மிதித்தல், காவு கொடுத்தல் என்ற முறைகள் இருந்து வந்தாலும் தன்னை வருத்திக் கொள்ளும் முறை முருக வழிபாட்டில் இன்றும் அனைத்து மக்களும் தாமாக ஏற்றுக் கடைபிடிக்கும் வழக்கமாக இருக்கிறது.

திருவாவினன்குடி என்ற பழனிமலை மிகப் பழைய மலைகளுள் ஒன்று. முடியிறக்கி மொட்டை யடித்தல் என்பது பழனியில்தான் முதலில் தோன்றியது என்கின்றனர். இதுவருத்திக் கொள்ளலில் மிகவும் குறைவானது எனலாம்.

இதற்குப் பின் காவடி தூக்கிக் கொண்டு, கோயிலில் வலம் வர நேர்ந்து கொள்வது ; அலகு குத்திக் கொள்ளுதல் இதைவிட மிகவும் கடுமையானது. நாக்கை நீட்டி வேலை நாக்கில் ஒரு புறம் குத்தி மறுகன்னத்தில் வரவழைத்து இருப்பது, உடம்பில் பல இடங்களில் கொக்கியிட்டு எலுமிச்சம் பழங்களைத் தொங்க விடுவது, முதுகுத் தோலில் கொக்கிமாட்டி அதில் ஒரு சிறு தேரை இணைத்து இழுத்துச் செல்வது போன்ற வருத்திக் கொள்ளும் செயலைப் பொது மக்களில் யாரும் செய்து கொள்ள நேர்ந்து கொண்டு செய்து வழிபடுவது போன்ற முருக வழிபாடு மிகவும் கடுமையான வழிபாடு ஆகும்.

தமிழர்களுக்கே உரிய முருக வழிபாட்டை, தமிழ் நாட்டில் மட்டுமல்லாமல் தமிழர்கள் சென்று வாழ்ந்து வரும் வெளிநாடுகளான இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், இலண்டன் போன்ற நாடுகளுக்கும் எடுத்துச் சென்றுள்ளனர்.

இலங்கையில் கதிர்காமம், மலேசியாவில் பத்துமலை இவற்றில் முருகன் திருவிழா மிகவும் சிறப்பாக நடைபெறும். மலேசியாவின் பத்து மலையில் முருகன் திருவிழாக்களில் சீனமக்களும் மலேசிய மக்களும், அலகு குத்திக் கொள்வது தேர் இழுப்பதுமான கடினமான வழிபாடுகளில் கலந்து கொள்கின்றனர்.

## திருஆவினன்குடி



திரு என்ற இலக்குமியும்
ஆ என்ற காமதேனுவும்
இனன் என்ற சூரியனும்
கு என்ற பூமாதேவியும்
டி என்ற அக்கினிதேவனும்
ஆகிய இந்த ஐவர் பூஜித்தபடியால் பழநிக்குத் திருஆவினன்குடி என்பது பெயர் ஆகும்.

தமிழ் நாட்டிலிருந்து ஐயப்பன் கோயிலுக்குச் சபரி மலை செல்வது போல். கேரளாவிலிருந்து மலையாளிகள் பழனிமலைக்கு வந்து வழி படுவதைப் பேறாகக் கருதுகின்றனர். பெரும் பாலான இறைப்பற்றுள்ள தமிழர் வீடுகளில் முருகன் படம் இடம் பெற்றிருக்கும். நாடாப் பதிவுள்ளவர்களிடம் கந்தர் சஷ்டி, சண்முகக் கவசப் பாடல் நாடாக்கள் இருக்கும். இது தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல் உலக முழுவதும் வாழும் தமிழர்களின் வழக்கமாக உள்ளது.

பக்தித் திரைப்படங்கள் வந்த காலத்திலும் முருகன் படம் அதிகமாக வந்தது. பக்திப் பாடல்களின் ஒலி நாடாக்களின் வரிசைகளில் முருகன் பாடல்கள் மிகுதியாக இடம்பெற்றுள்ளது.

சாலைக் கோயில்களில் ஒலிப்பரப்பப்படும் முருகன் பாடல்களில் கூட

**''உள்ளம் உருகுதைய்யா முருகா**
**உன்னடி காண்கையிலே''**

**''கற்பனை என்றாலும் கற்சிலை என்றாலும்**
**கந்தனே உனை மறவேன் !''**

**''மண்ணானாலும் திருச்செந்தூரில் மண்ணாவேன்''**

போன்ற பாடல்கள் கேட்கும் போது வழிபோக்கர் களின் உள்ளத்தை ஈர்க்கும் வண்ணம் பக்தி யுருக்கமான பாடல்களாக இருப்பதை நாம் அறிவோம்.

சற்றுத் தள்ளி வட நாட்டுப் பக்கம் போவோ மானால் முருகன் என்ற பேச்சேஇல்லை. மீண்டும் தமிழ்நாடு வந்தவுடன் முருகனின் தெய்வ மணம் வீசும். நமக்குக் கிடைத்துள்ள முதல் நூலிலும் இடம் பெற்று, அதன் பின் தமிழர்கள் வாழும் பகுதியில் பரவலாக வணங்கப் பெற்று, தமிழ்த் தெய்வம் என்ற பெயரைப் பெறும் ஒரே தெய்வமாக விளங்கி, தமிழர்கள் பரவும் உலகெங்கணும் கொண்டுசென்று ஆங்காங்கு கோயில் கட்டி வணங்கப் பெறும் தெய்வமாகத் திகழ்ந்து பிற இனத்தவரும் தாமாக முன் வந்து வருத்திக் கொண்டு வணங்கும் வண்ணம் நம்பிக்கை பெற்று எளிய மக்களும் ஏற்றுக் கொள்ளும் தெய்வமாக இருக்கும் முருகவேளே முழுமுதல் தமிழ்த் தெய்வம் என்றால் அது மிகையாகாது.



# தமிழ்நாட்டுச் சித்தர் பரம்பரை - கருவூரார்

''செந்தமிழ் வாரிதி'' முனைவர் இரா. செல்வக்கணபதி

சைவத்திருமுறைகளுள் ஒன்பதாவது, திருவிசைப்பா. திருப்பல்லாண்டுகளின் தொகுப்பாகும்.


திருவிசைப்பா அருளிய அருளாளர்கள் ஒன்பதின்மர். அவர்களுள் மூன்றாமவர் கருவூர்த்தேவர். சித்த நெறியினர்.

இவரைக் கருவூரார் என்றே குறிக்கின்றனர். தமிழ் நாட்டுச் சித்தர் பரம்பரையில், பதினெண் சித்தர்களில் ஒருவராகக் கருவூரார் இடம் பெற்றுள்ளார்.





ஒன்பதாம் திருமுறையுள் கருவூர்த்தேவர், கோயில் எனப்படும் தில்லை, திருக்களந்தை ஆதித்தேச்சரம், திருக்கீழ்க் கோட்டூர் மணியம்பலம், திருமுகத்தலை, திரைலோக்கிய சுந்தரம், கங்கை கொண்ட சோழபுரம், திருப்பூவணம், திருச்சாட்டியக்குடி, தஞ்சை, திருவிடைமருதூர் என்ற பத்துத் திருத்தலங்களுக்குத் திருவிசைப்பாப் பதிகங்கள் அருளிச்செய்துள்ளார்.



தேவாரப் பனுவல்கள் பலவும் பண்ணொடு பயின்ற இசைப்பாக்களே. பிற்காலச் சோழர்கள் கட்டிய தஞ்சை, கங்கை கொண்ட சோழபுரம் முதலியவற்றிற்கும் சிறப்புச் சேர்க்கத் திருவிசைப்பா பயன் கொள்ளப்பட்டது.

கருவூர்த்தேவர் கொங்கு நாட்டிலுள்ள கருவூரில் பிறந்தவர். கரூர் தேவாரப் பாடல் பெற்ற சிவத்தலங்களுள் ஒன்று. பெரிய புராண நாயன்மார்கள் புகழ்ச் சோழர், எறிபத்தர் ஆகியோர் வாழ்ந்திருந்த புனித மண்.

இவர் இயற் பெயர் தெரிய வரவில்லை. அந்தணர் மரபினர். வேத ஆகமங்களில் பெரும் புலமை பெற்றவர். யோகத்தில் தலை நின்ற சித்தமூர்த்தி. போகரின் மாணாக்கர். சிவயோகத்தில் முதிர்ந்து காயகல்பம் உண்டு, பல்லாண்டுகள் வாழ்ந்திருந்தவர்.

இவர் அருள்வாழ்வில் நிகழ்ந்த அருள் அற்புதங்கள் எண்ணற்றவை. யோகம் கைவரப் பெற்ற இவர் உலக வாழ்வில் ஒட்டுறவு இல்லாது வாழ்ந்தார். இவர் செயல்கள் பல உலகவர்க்கு நகை விளைத்தன. தென்பாண்டி நாட்டுத் திருப்புடையூர் சிவன், கருவூராருக்குத் திருவடி தீட்சைவழங்கினான். நெல்லை சென்று சிவன் சந்நிதியில் நின்று ஒரு முறை இவர் 'நெல்லையப்பா' எனக் கூவி அழைத்தார். பதில் கிடைக்கப் பெறாமையால் சினந்து, இங்குச் ''சிவன் இல்லை போலும்'' என்று கூறி அகன்றார். ஆலயம் புதர்கள் மண்டிப் பாழானது. நெல்லையப்பர், கருவூராரை மீண்டும் தருவித்துக் காட்சி நல்கினார். ஆலயம் மீண்டும் புதுப் பொலிவு பெற்றது.

தஞ்சையை ஆண்டிருந்த முதலாம் இராசராசசோழன் (985-1014) தான் கட்டிய கோயில் சிவலிங்கத்துக்கு அஷ்ட பந்தன மருந்து சாத்த முனைந்தான். பலமுறை முயன்றும் மருந்து இளகிப் பந்தனம் கூடி வரவில்லை. மன்னன் கவலையுற்றான். அங்கு வந்த போகமுனிவர், பொதிய மலையிலிருந்த கருவூராரைத் தஞ்சைக்குத் தருவித்தார். கருவூரார் அருளால் அஷ்டபந்தனம் பொருந்துவதாயிற்று. சோழன் சிறப்புக்கள் பல செய்தான். தஞ்சைப் பெரிய கோயிலிலும், கரூர் சிவாலயத்திலும் கருவூர்த் தேவருக்குத் திருமேனிகள் உள்ளன.

கருவூரார் தஞ்சைவிட்டுத் திருவரங்கம் சென்று பல அற்புதங்கள் நிகழ்த்தினார். மீண்டும் கரூர்த் திரும்பிய போது, வைதீகப் பிராமணர்கள் இவரை வைதீக ஒழுக்கம் தவறியவர் என்றும், வாம பூசைக்காரர் என்றும் பழித்துரைத்தனர். அவர்களுக்கு அஞ்சியவர் போல் போக்குக் காட்டிய இச்சித்தர் பெருமகன், கருவூர்ச் சிவன் கருவறை புகுந்து சிவனைத் தழுவினார். பின் அவரை எவரும் கண்டிலர். முதலாம் இராசராசன் காலத்தவர் என்பதால், கருவூர்த்தேவர் 10ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி முதல் பல்லாண்டுகள் வாழ்ந்திருந்தவர் என்பது புலனாகிறது.

# புலிப்பாணி சித்தர்

போகசித்தரின் சீடர் புலிப்பாணி. இவர் தினந்தோறும் சண்முக நதியில் நீராடிக் குடம் இல்லாமலே தண்ணீரை திரட்டி எடுத்துக் கொண்டு புலி மீது ஆரோகணித்து வந்து தண்டபாணியை வழிபட்ட பெருமைக்கு உரியவர் ஆவார். புலிப்பாணியார் திருமடம் பழநிமலை அடிவாரத்தில் இன்றும் உள்ளது.



ஒன்பதாம் திருமுறைப் பதிகங்கள் அல்லாது சித்தர் பாடல் தொகுப்பிலும் கருவூரார் பாடல்கள் பல காணப்படுகின்றன. பூசைவிதிமுறைகளை எடுத்துரைத்து இவர் பாடிய ''பூசாவிதி'' என்ற பாடல் தொகுப்பில் 62 பாடல்கள் இடம் பெற்றுள்ளன. பராசக்தியை வாலைப் பெண்ணாக முன்னிறுத்தி இப்பாடல்கள் அமைந்துள்ளன.

அம்மையின் மாயையும், பல ரூபங்கள் கொண்டவளாகவும், சிறுபிள்ளை போல் தோற்றம் தரும் கன்னியாகவும், சித்தர்களுள் மனத்திண்மையைச் சோதிக்கும் சிவகாமி வடிவினளாகவும், விளையாட்டுச் செய்யும் குறும்புடைச் சிறுமகளாகவும் சித்தரித்து அவளைப் பூசிக்கும் நெறிமுறைகளை இப்பகுதியில் கருவூரார் விளக்கியுள்ளார்.

பூசாவிதியின் முதலிரண்டு பாடல்கள் அம்மையை வாலைப் பெண்ணாக முன்னிறுத்திக் காத்தருள வேண்டும் என்று போற்றும் காப்புச் செய்யுள்களாக அமைந்துள்ளன. அவற்றுள் ஒன்று,

> **''ஒளிவுதனில் ஒளிவுதரும் உறுதி சொல்வார்**
> **உற்பனத்தில் உற்பனமாய் உறுதி தோணும்**
> **வெளியதனில் வெளியாகி நாதத்து உள்ளே**
> **விளங்கி நின்ற வாலைப்பெண் ஆதி காப்பே''**

என அமைந்துள்ளது.

அம்மையைக் கருவூரார்,

> **''துரைப் பெண்ணாத்தாள்''**
>
> **''பத்து வயதாகும் இந்த வாமி''**
>
> **''சிறு பிள்ளை கன்னி கன்னி''**
>
> **''நல்லவர்க்கு நடுவில் விளையாடும் வல்லி''**

என்றெல்லாம் இளமகளாகப் பலபடப் போற்றித் துதிக்கிறார். உலகவர்க்கு ஞானம் இது என்று சுட்டிக் சொல்ல இந்நூல் ஒன்றே போதும் என்று கருதும் 'சித்தர்' மொழிவதற்கு இந்நூலை விட வேறொன்றில்லை என உறுதிபடப் பேசி நூலை நிறைவிக்கிறார்.

வேறு பல அரிய குறிப்புகளும் கருவூராரின் இந்தப் பூசாவிதியுள் காணப்படுகின்றன. பதினெண் சித்தர்கள் என்போர் சிவலிங்கத்தை முன் நிறுத்தி தேவி பூசைசெய்தவர்களே என்பது இவர் கூற்றால் உறுதியாகிறது.

> **''திட்டமதாய்ப் பாணம் வைத்துத் தேவி பூசை**
> **சீர்பெற்றார் பதினெட்டுச்சித்தர் தாமே''**

உமையை வாலையாக அறிந்தவர்களே சித்தர்கள் என்பதை, ''ஆம் இவளை அறிந்தவர்கள் சித்தர், சித்தர்'' என உறுதி செய்கிறார். தேன் போன்ற மொழி படைத்த பத்துவயது சிறு பெண்ணாக இவ்வம்மை சித்தர் பூசைஏற்றருள்பவள் என்பதை

> **''தேன் என்ற மொழிச்சி இவள் சித்தர்க்கு எல்லாம்**
> **சிறுபிள்ளை பத்துவயது உள்ள தேவி''**

என்று அடையாளப்படுத்துகிறார். வாம நெறி கைவந்தவர்களுக்கு அம்மை சிறு பிள்ளையாக நின்று பூசைஏற்று அருளுவாள் என்பதை,

> **''வாமம் வைத்துப் பூசைபண்ண இந்த மார்க்கம்**
> **வந்தவர்களுக்குச் சத்தி சிறுபிள்ளை வாலை''**

எனக் குறித்து வியப்பூட்டுகிறார்.

வாம பூசைசெய்வார் சிறிதும் நெறி திறம்பாது அப்பூசையை மேற்கொள்ளுதல் வேண்டும் (25). பிறப்பின் இரகசித்தை ஞான குருவாக நின்று வாலைத்தாய் உண்மையான சாதகனுக்கு வெளிப்படுத்துவாள் (30). துறவு நெறி மேற் கொண்டும், பெண்ணாசைவிடாத காமுகர்க்கு வாலை அருள் கிட்டாது (34). அம்மை அருட் பெருமைகளை மனத்தில் பத்தியில்லாதவர்களுக்கு உரைத்தால், உரைத்தவன் வாழ்வு பாழாகும் (48).

## சித்தன் வாழ்வு




பழநிக்கு ஒரு பெயர் ''சித்தன் வாழ்வு'' என்பதாகும். சித்தனாகிய முருகப் பெருமான் உறைவதால் இப்பெயர்அமைந்தது.

போகராகிய சித்தர் வாழ்ந்த தலம் என்பதும் இதற்குப் பொருள் கொள்ளலாம்.

# அரங்கனாருக்கு மாமனார் ஆகும் பேறு பெற்ற குலசேகர ஆழ்வார்

திருமதி இந்திரா ஆராஅமுதன், திருவரங்கம்



சிறப்பும் மேன்மையும் மிக்க சேர நாட்டிற்கு ஔவையார் ''வேழமுடைத்து மலைநாடு'' என்ற புகழாரத்தைச் சூட்டினார். அப்படிப்பட்ட பெருமை உடைய நாட்டை, வீரம், கொடைத் தன்மை, பெருமாள் பக்தி ஆகிய சீரிய குணங்கள் நிறைந்த திடவிரதன் என்னும் அரசன் ஆண்டு வந்தான். கொல்லி நகரம் அதன் தலைநகரமாகும்.

கி.பி. 8ஆம் நூற்றாண்டில் பராபவ வருடம், மாசி மாதம், புனர்வசு கூடிய சிறந்த நாளில் கௌஸ்துப ரத்ன்த்தின் அம்சமாக திருவஞ்சிக்களம் என்னும் இடத்தில் அந்த அரசனின் திருக்குமாரராக குலசேகர ஆழ்வார் அவதாரம் செய்தார்.

குலசேகரர் இளவயதிலேயே தென், வட மொழிகளைக் கற்றுத் தேர்ந்தார். யானை ஏற்றம், குதிரை ஏற்றம், வில், வாள் முதலிய பயிற்சிகளிலும் இவருக்கு ஒப்பாகும் மிக்காரும் யாரும் இல்லை என்று எல்லோரும் போற்றும்படி விளங்கியதைக் கண்ட அரசன் இவரை இளவரசராக ஆக்கினார்.

இவரது வளர்ச்சியில் பொறாமை கொண்டு சோழனும், பாண்டியனும் ஒன்று சேர்ந்து இவர் மீது போர் தொடுத்தனர். இவர் அவர்களை வென்று அவர்களின் நாடுகளையும் தன் வசப்படுத்திக் கொண்டு, சேர, சோழ, பாண்டிய ஆகிய மூன்று நாடுகளுக்கும் அதிபதியானார். இதனால் ''கொல்லி காவலன், கூடல் நாயகன், கோழிக்கோன், குலசேகரன்'' என்ற விருதுகளைப் பெற்றார். மகிழ்ந்த அரசன் இவருக்குப் பட்டாபிஷேகம் செய்து வைத்தார்.

பாண்டிய மன்னனின் மகளை மணம் புரிந்த குலசேகரர், தந்தையின் பெயர் கொண்ட திடவிரதன் என்ற மகனையும், இளை என்கிற சேரகுலவல்லி என்ற மகளையும் பெற்றார்.

இறைவனின் கதைகளைக் கேட்பதில் மிகுந்த ஆர்வம் காட்டிய இவர் தினமும் ஒரு பெரியவரிடம் காலஷேபம் கேட்டு வரலானார். ராமாயணக் கதையை அவர் கூற ஆரம்பித்தார்.


ஒரு நாள் ஆரண்ய காண்டத்தை அவர் விவரிக்கும் போது, கரன் என்ற அரக்கன் பல்லாயிரக் கணக்கான அரக்கர்களுடன் படை எடுத்து வந்தான், ராமன் அவர்களுடன் தனியாகவே போரிட்டான் என்று அவர் கூறியவுடன், குலசேகரர் உணர்ச்சி வசப்பட்டு தன்னை மறந்த நிலையில் படைத்தலைவனை அழைத்து படைகளைத் திரட்டும்படியும், தானும் ராமருக்கு உதவ வருவதாகவும் சொல்லித் தேரை நோக்கிச் செல்ல ஆரம்பித்தார்.

இவரது மன நிலையை அறிந்த அமைச்சர் பெரியவரிடம் ஏதோ சொல்ல, அவரும் அரசனின் முன் ஓடிச் சென்று பணிவுடன் கரன் முதலிய அத்தனை அரக்கர் களையும் ராமர் கொன்று விட்டு, இப்போது பர்ண சாலையில் சீதை, இலக்குவனுடன் மகிழ்ச்சியாக இருப்பதாகத் தெரிவித்தார்.

அரசனும் முன்பு நடந்த கதை என்று நினைத்துக் கொள்ளாமல் இப்போது நடப்பதாக நினைத்து உணர்ச்சி வசப்பட்டு படைத் தலைவனுக்கு ஆணை இட்டதாகவும், தற்போது சுயநினைவுக்கு வந்ததை உணர்ந்து படைவீரர்களை அவரவர் இடங்களுக்குச் செல்லுமாறும் உத்திரவிட்டுவிட்டு தாமும் அரண்மனையை நோக்கிச் சென்றார். இதன் பிறகு உபன்யாசகரும் சமயோசிதமாக கதையைச் சொல்ல ஆரம்பித்தார்.

குலசேகரருக்கு அரசபோகங்களில் பற்றுக் குறைந்து பகவத் ஆராதனையிலும் பாகவத சேவையிலுமே அதிகம் செலவிட்டார். விளைவு, வைணவ பக்தர்கள் அரண்மனை, ஆலோசனை மண்டபம் என்றும் அந்தரங்கமான இடங் களுக்கும் கூட சுதந்திரமாக செல்ல ஆரம்பித்தனர். பொறாமை கொண்ட மந்திரிகள் அவர்களைத் தடுக்க ஆலோசனை செய்தனர்.

இவ்வாறு இருக்கையில் ஸ்ரீராமநவமி உத்ஸவம் வந்தது. பெருமாளுக்குத் திருமஞ்சனம் செய்வதற்காகக் களைந்து வைத்திருந்த



திருவாபரணங்களில் ஒரு விலையுயர்ந்த முத்துமாலையை எடுத்து ஒரு மந்திரி ஒளித்து வைத்தார்.

நகையைக் காணாது அர்ச்சகர் அரசனிடம் புகார் சொன்னார். அரசனும் நகையைத் தேடும்படி அமைச்சருக்கு உத்திரவிட்டார். இதுதான் தக்க சமயம் என்று நினத்த அந்த கெட்ட மந்திரி அரசனிடம் எந்தவிதக் கட்டுப்பாடும் இன்றி இந்த அரண்மனைக்குள் உள்ள எல்லா இடங்களுக்கும் சென்று வரும் வைணவர்களில் ஒருவர் தான் எடுத்திருக்க வேண்டும் என்றும் அவர்களைப் பரிசோதித்தால் உண்மை தெரியும் என்றும் கோள் மூட்டினார்.

அரசன் மந்திரியை கடிந்து கொண்டு, ''எம்பெருமானின் அடியார்கள் ஒரு நாளும் இத்தகைய அடாத செயலைச் செய்திருக்க மாட்டார்கள். அப்படிச் செய்திருந்தால் பாம்புக் குடத்திற்குள் நான் கையை விடுகிறேன். பாம்பு என்னைத் தீண்டிக் கொல்லட்டும்'' என்று சொல்லியவாறு பாம்புக் குடத்தை கொண்டு வரப் பணித்தார். பாம்பு அவரை வணங்கிப் படம் எடுத்து ஆடியது, அரசனைத் தீண்டாமல். இதைக் கண்டு தவறை உணர்ந்த மந்திரி மன்னிப்பு கேட்டார்.

இந்தச் சம்பவத்தை மணக்கால் நம்பிகள் அருளிய தனியன் மூலம் பார்ப்போம்.

**''ஆரம் கெடப் பரனன்பர் கொள்ளாரென்று, அவர்களுக்கே**
**வாரம் கொடு குடப்பாம்பில் கையிட்டவன், மாற்றலரை**
**வீரங்கெடுத்த செங்கோல் கொல்லிக் காவலன் வில்லவர்கோன்**
**சேரன் குலசேகரன் முடிவேந்தர் சிகாமணியே''**

அவ்வப்போது ராமர் ஆராதித்த பெரிய பெருமாளைச் சென்று சேவிக்கவேண்டும் என்ற பேரவாவில் ஸ்ரீரங்கம் செல்ல நாள் குறிப்பார். இவரது அதீத பக்தியைக் கண்டு பயந்த விசுவாசமுள்ள மந்திரிகள் ''பெருமாளைச் சேவிக்கச் சென்ற பிறகு இவர் மனம்லயித்து அங்கேயே தங்கி விடுவாரே, திரும்பி வரமாட்டாரே, என்ன செய்வது?'' என்று அஞ்சி அவர் பிரயாணத்தை தடுக்க வழிதேடினர்.

அதன் படி அவர் கிளம்புகிற தினம் காலை, நிறைய வைஷ்ணவர்களை அழைத்து வந்து அவர் முன்னே நிறுத்திவிடுவார்கள். குலசேகரரும் பிரயாணத்தை இன்னொரு நாள் வைத்துக் கொள்வோம் என்று ஒத்திவைத்து விட்டு, பெருமாள் சேவையை விட பாகவத சேவையே மேலானதாக நினைத்து அவர்களை உபசரிக்க ஆரம்பித்து விடுவார்.

இவ்வாறு பல தடவைகள் ராமனின் குலதெய்வத்தை சேவிக்கும் வாய்ப்பை இழந்தார். இப்போது குடம் பாம்பு நிகழ்ச்சி அவரது ஸ்ரீரங்க பயணத்தை நிச்சயம் உறுதியாக்க வேண்டும் என்ற உறுதியை - வைராக்கியத்தைதந்தது.

**''திருவரங்கப் பெரு நகருள் தெண்ணீர்ப் பொன்னி**
**திரைக் கையால் அடி வருடப் பள்ளி கொள்ளும்**
**கருமணியைக் கோமளத்தைக் கண்டு கொண்டு, என்**
**கண்ணிணைகள் என்று கொலோ களிக்கும் நாளே!''**

என்று மனம் கனிந்து உருகினார். உலகப் பற்றைக்

## ஆறுதிருமுகங்கள் உணர்த்தும் ஆறுகுணங்கள்



1. முற்றறிவு
2. அளவில் இன்பம்
3. வரம்பில் ஆற்றலுடைமை
4. தன்வயமுடைமை
5. பேரருள் உடைமை
6. இயற்கை அறிவு

இந்த ஆறுகுணங்களைக் குறிப்பனவே முருகப் பெருமானின் ஆறுமுகங்கள்.



# இராமபக்த அனுமன்

இராமநாமம் எங்கே ஒலிக்கிறதோ அங்கே அஞ்சலி அஸ்தராய் ஆஞ்சநேயர் எழுந்தருளி அருள்பாலிப்பார்.

குறைத்தார். தன் மகன் திடவிரதனுக்கு முடி சூட்டிவிட்டு, தன் மகள் சேரகுலவல்லியுடன் கிளம்பி திருவரங்கம் வந்து பல வருடங்கள் தங்கியிருந்து பெருமானைக் கண்டு மகிழ்ந்து மெய்ம் மறந்து வாழ்ந்து வந்தார்.

தன் மகள் விருப்பப்படியே அரங்கனுக்கு அவளை மணம் செய்து கொடுத்து, சமுத்திரராஜன், பெரியாழ்வார் போன்று அரங்கனின் மாமனார் என்ற பதவியைப் பெற்றார், அத்துடன் சப்தப்ரகாரம் கொண்ட ஸ்ரீரங்கத்தில் ''குலசேகரன் வீதி'' என்று அழைக்கப்படுகிற மூன்றாவது பிரகாரத்தை அரங்கனுக்கு அரணாகக் கட்டித் தந்தார். தனது செல்வங்கள் அனைத்தையும் ''ஸ்த்ரீதனம்'' என்று அரங்கனுக்கே சமர்ப்பித்து விட்டார்.

சேரகுலவல்லி நாச்சியாரின் தனிச் சன்னிதி அர்ஜுன மண்டபத்தில் இருக்கிறது. நம்பெருமாள் கௌசிக ஏகாதசி அன்றும், வைகுண்ட ஏகாதசி பகல் பத்து உத்ஸவத்தின் போதும் அந்த மண்டபத்திற்கு எழுந்தருளுவார். இந்த நாட்களில் தாயாரை அவர் சன்னிதியின் கதவு இடுக்கு வழியாகத் தான் தரிசிக்க இயலும்.

அவர் ஒரே ஒரு நாள் மட்டும் சன்னிதி யிலிருந்து கிளம்பி வெளியே வருவார். அது எந்த நாள் என்று கேட்டால், ராமபிரானின் ஸ்ரீராம நவமி உத்ஸவத்தன்று மட்டும் தான். அரங்கனுடன் திருமஞ்சனம் கண்டருளி பக்தர்களுக்கு சேத்தி சேவையில் காட்சி தருவது அந்த ஒரு நாளில் மட்டும் தான். ஆக இந்த மூன்று நிகழ்ச்சிகளில் மட்டும் தான் அரங்கனும் அர்ஜுன மண்டபத்தில் எழுந்தருளிக் காட்சி கொடுப்பார்.

நிற்க. இனி குலசேகரர் மற்ற திவ்ய தேசயாத்திரைக்குச் செல்ல நினைத்து திருவேங்கடம் வந்தார்.

''செடியாய வல்வினைகள் தீர்க்கும்
திருமாலே!
நெடியானே வேங்கடவா நின் கோயிலின் வாசல்
அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும்
படியாய்க் கிடந்து உன் பவளவாய் காண்பேனே!''

என்று பாடிய அவரது ஆசையை நிறைவேற்று வதற்காகவே எல்லா பெருமாளின் திரு முன்பு உள்ள வாசற்படியை ''குலசேகரன்படி'' என்று இன்றளவும் அழைக்கப்படுகிறது. ''படியாய்க் கிடந்து உன் பவள வாய் காண்பேனே'' என்கிற அவரது ஆசையையும் பகவான் நிறைவேற்றினார் அல்லவா?

அடுத்து திருக்கண்ணபுரம் சௌரிராஜப் பெருமாளை ஸ்ரீராமராகவே பாவித்து அவர்மேல் ''மன்னு புகழ் கோசலை தன்மணி வயிறு வாய்த்தவனே!'' என்று 10 தாலாட்டுப் பாசுரங்களைப் பாடினார்.


பின் அயோத்தி சென்றார். தசரதன் புலம்புவதாகக் காட்டும் ''வன்தாளினிணை'' என்கிற 10 பாட்டுகள் கல் நெஞ்சம் உடையவர்களைக் கூட உருகவைத்துவிடும் தன்மை யுடையது. அதில், ''அரும்பாவிசொல் கேட்டு என் மகனை இழந்திட்டேனே! நான் செல்லவேண்டிய வனத்திற்கு அவன் செல்கிறானே! பஞ்சணைமேல் இது நாள் வரை தூங்கியவன் இனி எவ்வாறு கல்லணை மேல் துயில்வான்? வேதப் புதல்வனையும் தம்பியையும் பூவைப் போன்ற மெல்லியவாளான் என் மருகியையும் (சீதாதேவி) வனத்தில் போக விட்டு என்ன பெற்றாய் கைகேயி?'' என்று தன் சீற்றத்தை வெளிப்படுத்திக் காட்டுகிறார்.

அடுத்துச் சித்தரகூடம், திருமாலிருஞ்சோலை, வித்துவக்கோடு ஆகிய தலங்களுக்கெல்லாம் சென்று சேவித்த அனுபவங்களை 105 பாசுரங்கள் கொண்ட ''பெருமாள் திருமொழி'' என்ற பிரபந்தமாக நமக்குத் தந்திருக்கிறார். தவிர 40 சுலோகங்கள் கொண்ட முகுந்த மாலையும் அவர் அருளியதுதான்.

பன்னிரு ஆழ்வார்களில் நான்கு ஆழ்வார்களை மட்டும் ''கிளி'' என்கிற அடைமொழி வந்து தொற்றிக் கொண்டு பெருமை பெற்றது. அதன்படி நம்மாழ்வாரை முதுகிளி என்றும், குலசேகர ஆழ்வாரை இடைக்கிளி அல்லது நடுக்கிளி என்றும், திருமங்கை ஆழ்வாரை இளங்கிளி என்றும், ஆண்டாள் நாச்சியாரை சோலைக்கிளி என்றும் பெரியோர் வர்ணிப்பர்.

நம்மாழ்வாரைத் தொழுவதற்காக திருக்குருகூர் சென்ற குலசேகர ஆழ்வார் பின் அவ்வூருக்கு அருகில் உள்ள பிரம்மதேசம் என்கிற மன்னார் கோவிலை அடைந்து அங்கு கோயில் கொண்ட ஸ்ரீ ராஜகோபாலனுக்கு தொண்டு புரிந்து கொண்டே தமது 67வது வயதில் பரமபத ப்ராப்தியைப் பெற்றார்.

அவருடைய திருநக்ஷத்திரம் 10-3-06 அன்று வருகிறது. அவரை அடிபணிந்து எல்லா நலன்களையும் பெற்று உய்வோமாக! ராம பிரானிடம் பேரன்பு கொண்டவர் ஆதலால் இவரை குலசேகரப் பெருமாள் என்றே வைணவப் பெரியோர்கள் அழைக்கும் பேறு பெற்றார்.



# மன்னார்கோவில் மாண்பு



சண்முகதெய்வநாயகம், செயல் அலுவலர்

மன்னார்கோவில் என்ற ஊர் நெல்லை மாவட்டம் அம்பாசமுத்திரத்திற்கு வடக்கே சுமார் 4 கிலோமீட்டர் தூரத்திலுள்ள ஒரு வைணவத் தலம்.

இங்குள்ள கோயில் இருமாடிகளுடன் அமைந்தது. கீழும் மேலும் மூல மூர்த்திகள் எழுந்தருளி இருக்கின்றனர். கீழேயுள்ள மூர்த்தம் வேதநாராயணர். பரமபதநாதனைப் போல் ஸேவை ஸாதிக்கிறார். இவர் எழுந்தருளியுள்ள கருவறையைச் சுற்றி வலம் வர ஒரு மரகாரம் உள்ளது. இதனை யானை முடுக்கு என்று அழைக்கிறார்கள். மேலேயுள்ள மூர்த்தம் கீழுள்ள மூர்த்தமே. திருவரங்கத்தே போன்று பள்ளிகொண்ட கோலத்திலே ஸேவை ஸாதிக்கிறார். இவர் எழுந்தருளியுள்ள கருவறையைச் சுற்றியும் ஒரு பிரகாரமுள்ளது. இதைப் பூனைமுடுக்கு என்று அழைக்கின்றனர்.

இரண்டு மூர்த்தங்களுக்கும் வலப்புறம் பிரம்மாவும், இடப்புறம் சிவபெருமானும் காட்சி தருகின்றனர். ''தானும் சிவனும் பிரம்மனும் ஆகிப் பணைத்த தனி முதல்'' என்று நம்மாழ்வாரும் ''மூன்று கவடாய் முளைத்தெழுந்த மூலம்'' என்று கம்பநாட்டாழ்வாரும் அருளியுள்ளது காண்கிறாம்.

''ஒன்றும் தேவும் உலகும் உயிரும் மற்றும் யாதுமில்லா அன்று உலகைப் படைப்பேன்'' என்று சங்கல்பித்து சிருஷ்டியைத் தொடங்கிய காலத்தே மூலவிருட்சமாகத் தானும், பிரம்மாவும், சிவனும் தன் கிளைகளாகவும் உள்ள நிலையையே தான் இக்கோயிலில் உள்ள வேத நாராயணன் காட்டியருளுகின்றான் எனக் கொள்வதே பொருத்தமாகும்.

இவர்கள் தவிர வலப்புறத்தே கருடாழ்வாரும் விபீஷணனும், வியத்தகு முறையில் மாலியவானும் காட்சியளிக்கின்றனர்.

பிருகு முனிவரின் மனைவியைப் பகவான் சக்கரத்தால் அவர் செய்த பெருந்தவறுக்காகச் சேதித்தான் என்றும், அதனால் சினம் கொண்ட முனிவர், பகவானுக்கு, நீஉன் அவதார காலத்தே மனைவியைப் பிரிந்து துயருறுவாய் என்று சாபமிட்டுவிட்டுப் பின் கழிவிரக்கம் கொண்டு பகவானை நாம் சபித்தோமே என்று நொந்து தன் தவறைக் குறித்து மன்னிப்பு வேண்டி இவ்விடத்தே வந்து தவம் செய்ததாகவும், பரமன் வேதநாராயணனாக காட்சியளித்து அவரை மன்னித்ததாகவும் அம்முனிவரால் சமைக்கப் பெற்றது இத்திருக்கோயில் எனவும் தலவரலாறு கூறுகின்றது. வேதநாராயணனைப் பிரதிஷ்டை செய்தமை தோற்ற பிருகுவின் சிலை இங்குள்ளது.

தேவியரான வேதவல்லித் தாயாருக்கும், புவனவல்லித் தாயாருக்கும் தனிக்கோயில்கள் உள்ளன. தெற்குப் பிரகார மண்டபத்தில் தசாவதார மூர்த்திகளின் கல்சிலா விசித்திரங்கள் உள்ளன.

குலசேகராழ்வாருக்குத் தனிக்கோயில் உள்ளது. கொடிமரம் முதலியவற்றுடன் மூலவ உற்சவ மூர்த்தங்களுடன் சந்நிதி விளங்குகிறது. இவருக்கு இவர் திருநட்சத்திரத்தையொட்டித் திருத்தேர் திருவிழா நடந்து வந்ததாக கோயிலில் உள்ள கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன.

குலசேகர ஆழ்வார் கோயிலுக்கு வெளியே தனியாக உடையவருக்கு ஒரு சன்னிதியுள்ளது. இச்சன்னிதி நாயக்கர் மன்னர்கள் காலத்தே எழுப்பப் பெற்றது என்பதற்குச் சான்றாக அம்மன்னர் சிலைகள் காட்சி தருகின்றன. சன்னதித் தூண்களில் சக்கரவர்த்தித் திருமகன், ஸீதாபிராட்டி, இளையபெருமாள், ஆஞ்சனேயர் சிற்பங்களுடன் ஒரு வேடன் சிற்பமும் உள்ளது.

இதற்கு வெளியில் தமிழாரணமான திவ்யப் பிரபந்தங்கள் ஆற்றில் கரைத்த புளி போலாய் விடாமல் காத்து நமக்கருளிய கருணை மூர்த்தியாகிய மணவாள மாமுனியின் சன்னிதியுள்ளது.

கொடி மண்டபக் கோடியில் ஐந்தடுக்குகள் கொண்ட கோபுரம் மிளிர்கிறது. உள்ளே சன்னதிக் கருடன் எழுந்தருளியுள்ளார்.

இம்மண்டபத்துக்கு வெளியே பந்தல் மண்டபம் உள்ளது. இதன் தூண் முகட்டில் உள்ள மீன் வடிவங்கள் இது பாண்டிய மன்னர்கள் திருப்பணி என்பதைப் பறை சாற்றுகின்றன. இதில் முத்துகிருஷ்ணப்ப நாயக்கர் சிலையும் தளவாய் ராமப்பையன் சிலையும் காண்பதால், மண்டபம் நாயக்கர் காலத்தது என்பது விளங்கும். மண்டபத்தின் தென்புறத்தில வானமாமலை மடம் உள்ளது.

சன்னிதித் தெருவின் கீழ்க் கோடியில் வலப்புறம் தெப்பக்குளம் ஒன்றுள்ளது. இதில் பெத்து நாயக்கன் காலத்தே தெப்போற்சவங்கள் நடந்து வந்தமை கல்வெட்டுக்களால் தெரியப் படுகிறது.

பெருமாள் பக்தியிலேயே மூழ்கி நின்ற குலசேகரருக்கு, இனியும் இவ்வரசவாழ்வு தனக்கு ஒவ்வாது என்று தெளிந்தவராய், தனது குமாரரான திருடவிரதன் என்பானுககுப் பட்டாபிஷேகம் செய்து அரசைஅவனிடம் ஒப்புவித்து, ஒரு பரமபாகவதராக வெளிப் போந்து, திருவரங்கம் நோக்கி சென்றார். முன் அவர் உள்ளத்தே கிடந்த ஏக்கம் ''இருள் இரியச் சுடர் மணிகள் இமைக்கும் நெற்றி'' என்று தொடங்கும் பதிகமாக வெளியிடப்பட்டது.

பின்னாளில் தல யாத்திரையாகத் திருவரங்கத்தை விட்டுப் புறப்பட்டவர் இந்தத் தலம் வந்தார். எம்பெருமானைச் ஸேவித்துக் கொண்டு தம்மாலான கைங்கர்யங்களையும் செய்து வந்தார். அவர் திருமேனி நாளுக்கு நாள் இளைத்து வந்தது. பெருமான் அவரைத் தம்மருகே அழைத்துக் கொள்ளத் திருவுள்ளமானார். ஆழ்வாரும் இந்தப் பூதவுடலை நீத்து எதன் அம்சமாக அவதரித்தாரோ அதே கௌஸ்துபத்தோடு ஒன்றிப் பெருமாள் திருமார்பை அலங்கரித்தார். இவர் இப்பூவுலகில் அருளிய பாசுரங்கள் நூற்றைந்தும் பெருமாள் திருமொழி என்று நிலவுகின்றன.

# வக்கிரங்கள் தீர்க்கும் வக்கிரகாளி அம்மன்

*திருப்புகழ்மாமணி மு.அருணகிரி*



தமிழ் நாட்டில் பெரும்பாலும் ஆலயங்கள் புகழோடு விளங்குவதற்கு காரணம், சித்தர்கள் அங்கங்கு ஜீவ சமாதி கண்டருளியதே காரணமாகும்.

திருவக்கரை எனும் தலம் மயிலத்துக்கு அருகில் சங்கராபரணி ஆற்றின் வடகரையில் அமைந்துள்ளது.

இத்தலம், தொண்டை நாட்டிலுள்ள 32 சிவஸ்தலங்களுள் 30-வது தலமாகும். இத்தலத்துக்குச் செல்ல, விழுப்புரத்திலிருந்தும், திண்டிவனத்தில் இருந்தும் பேருந்துகள் உள்ளன.

இங்குள்ள கருவறைக்குத் தென் திசையில் குண்டலினி மாமுனிவர் எனும் ஞானி ஜீவசமாதி கூடியுள்ளார். முனிவர் ஜீவசமாதி அடைந்ததும், சிவலிங்கம் அமைக்கப்பெற்று, தனிக் கோயிலாகியது.

இத்தலத்தைக் குறித்து, ஞான சம்பந்தர், நாவுக்கரசர், அருணகிரியார், சேக்கிழார், வள்ளலார் பாடியுள்ளார்கள்.

ஏனைய ஆலயங்களில் காணப்படாத விதத்தில் இவ்வாலய அமைப்பைக் காண முடிகிறது. ஆதித்த சோழனால் சுமார் 1200 ஆண்டுகளுக்கு முன் நிறுவப்பட்டதாகும். பின்னர் 10-ஆம் நூற்றாண்டில் கண்டராதித்தன் எனும் சோழனால் திருக்கோபுரம் நிறுவப்பட்டது. அதனால் கண்டர் சூரியன் திருக்கோபுரம் எனச் சைவ சமய வரலாறு அறிவிக்கிறது.

இங்கு வீற்றிருக்கும் இறைவன் பெயர் ஸ்ரீ சந்திரமௌலீஸ்வரர் என அழைக்கப்படுகிறார். கோபுரத்தை அடுத்து ஆலயத்தின் உட்பகுதியில் இடப்பக்கமாக அருள்மிகு வக்கிரகாளி அம்மன் சந்நிதியுள்ளது.

பொதுவாக, காளிக்கோவில் ஊரின் எல்லையில் தான் இருக்கும், மாறாக இங்குக் கோபுர வாயிலுக்கு இடப்பக்கமாகவே அமைந்துள்ளது.

வக்கிரசூரன் தனது தவவலிமையால், சிவனிடம் சாகா வரம் பெற்றான். தேவர் முதலானவர்களைத் துன்புறுத்தலானான். தேவர்களின் இன்னல்களை நீக்க சிவன், திருமாலின் மூலம் வக்ராசூரன் வதம் செய்யப்பட்டான்.

அடுத்துச் சூரனின் தங்கை துன்முகியும் தேவர்களுக்கு துன்பம் தரலானாள். இவளது கர்வத்தை அடக்க பார்வதி மூலம் சம்ஹாரம் செய்ய இறைவன் பணித்தான். காளிஉருவம் எடுத்து வதம் செய்ய சென்ற சமயம், துன்முகி கருவுற்று இருந்ததால், அவளது வயிற்றைக் கிழித்துச் சிசுவை குண்டலமாக தனது வலது காதில் அணிந்து, துன்முகியை வதம் செய்தாள்.

பின்னர் வக்ரகாளியாகவே இத்தலத்தில் அமர்ந்து விட்டாள். இவளது தோற்றப்பொலிவு கண்டு ரசிக்கத்தக்கது.

9 கிரகங்களுக்கும் தனித்தனியே அதி தேவதை உண்டு. ராகு கேது இரண்டிற்கும் அதிதேவதையாக அமர்ந்தவள் தான் வக்கிரகாளி என அறியப்படுகிறது. அதனால் இங்கு வலம் வருபவர்கள், வலப்பக்கமாக 5 முறையும், இடப் பக்கமாக 4 முறையும் வலம் வருதல் வேண்டும் என்பது ஐதீகம்.

காளிக்கோயிலின் எதிரில் மேற்கு நோக்கி, ஆத்மலிங்கக் கோயில் உள்ளதைக் காணலாம். இந்த லிங்கத்தையே வக்கிரசூரன் பூஜித்து வந்ததால், ஆத்மலிங்கத்திற்கு வக்கிரலிங்கம் எனும் திருநாமம் வழங்கப்பட்டது.

இந்த ஆத்மலிங்கம்தான் மும்முகலிங்கமாக நமக்குக் காட்சியளிக்கிறது. மும்முகலிங்கத்திற்கு-கிழக்கே தற்புருடமுகமும், வடக்கே வாமதேவ முகமும், தெற்கே அகோர முகமும் அமையப் பெற்றுள்ளது.

அதிகாலையில் தற்புருட முகத்திற்கு மஞ்சள் பூசியும், உச்சிகாலத்தில் வாமதேவ முகத்தில் சந்தனம் சாத்தியும், மாலை வேளையில் அகோர முகத்தை குங்குமம் இட்டும் பூஜை செய்து வருவது மிகவும் விசேடம்.

பொதுவாக எல்லா ஆலயங்களிலும் அடியார்கள் கோபுர வாயிலிருந்தே துவஜ ஸ்தம்பத்தின் மூலம் மூலவரை தரிசிக்கும் வகையில் அமைத்துள்ளனர்.

இவ்வாலயத்தில் ராஜகோபுரம், துவஜ ஸ்தம்பம், நந்தி, மூலவர் முதலியன நேர் கோட்டில் அமையாது ஒன்றுக்கொன்று விலகி, வக்கிர நிலையில் இருப்பதைக் காண முடிகிறது.

நந்தியை அடுத்து கிளிக்கோபுரம் உள்ளது. இதனைக் கருங்கல்லாலும், சுவர்களைச் செங்கற் களாலும் கட்டியுள்ளனர். இதுவே ஆதியில் ராஜகோபுரமாக இருந்திருக்க வேண்டும் என நினைக்கத் தோன்றுகிறது.

கிளிக்கோபுரத்தைத் தாண்டி, பெரிய மண்டபத்தில் கருவறை உள்ளது. மூலவராக மகேஸ்வரன் மும்முகலிங்கமாக காட்சி அளிப்பது, வேறெங்கும் காண முடியாத அற்புதக் காட்சியாகும்.

# சீர்மிகு பூசைசெய்த சிலந்தியார்

டாக்டர். டி. செல்வராஜ்



ஒரு சிலந்தி ஞான, அன்புடையது. இது லிங்கத்தின் மேல் மாசுக்கள் படியாதபடி ஒரு கோயிலைப் போலவே பந்தலைக் கட்டி இறைவனை வழிபட்டது.

திருநாவுக்கரசர்:

**"சிலந்தியும் ஆனைக் காவில்**
**திருநிழற் பந்தர் செய்து**
**உலந்தவண் இறந்த போதே**
**கோச்செங்க ணானும் ஆகக்**
**கலந்தநீர்க் காவிரி சூழ் சோ**
**ணாட்டுச்சோழர் தங்கள்**
**குலத்தினில் பிறப்பித் திட்டார்**
**குறுக்கை வீரட்ட னாரே"**
(திருக்குறுக்கை வீரட்டானப்பதிகம் 4)

சிலந்தி கோச்செங்கணானாகப் பிறந்த வரலாற்றைச் சுவாமிகள் வரைந்தார்.

திருஞானசம்பந்தர்:

திருஞான சம்பந்தர் திரு அரிசிற்கரைப் புத்தூரை,

**"சிலந்தி செங்கண் சோழனாகச் செய்தானூர்"** (பதிகம் 199-7) என்று சுட்டுகிறார்.

திருவைகன் மாடக் கோயிலும் (பதிகம் 276), திருஅம்பர்ப் பெருந்திருக்கோயிலும் (பதிகம் 277) கோச்செங்கணான் கட்டிய மாடக் கோயில்களாம் என்பது புலனாகிறது.

சுந்தரமூர்த்தி சுவாமிகள்:

திருஞான சம்பந்தர் முதலிய எட்டு அடியார்கள் குற்றங்கள் பலவற்றைப் புரிந்தனர். அவற்றைக் குணங்களாக மாற்றி அருளினார் இறைவன்.

சிலந்தி கோப்பெருஞ்சோழனாகப் பிறவி உயர்வு பெற்றது. பூ என்ற பெயர் தாமரையைக் குறிப்பதைப் போலச் "சிலந்தி" என்ற பெயர் சிறப்பாக கோப்பெருஞ்சோழனை மட்டும் குறிப்பிடும் பெயராக மேன்மையடைந்தது.

கோப்பெருஞ்சோழனைச் "சிலந்தி" என்று சுட்டிச் சுவாமிகள் அருளிய பாடல் இதோ:-

**"நற்ற மிழ்வல்ல ஞானசம் பந்தன்,**
**நாவி னுக்கரையன், நாளைப்போ வானும்,**
**கற்ற சூதன், நற் சாக்கியன், சிலந்தி,**
**கண்ணப் பன், கணம் புல்லனென் றிவர்கள்**
**குற்றம் செய்யினும் குணமெனக் கருதும்**
**கொள்கை கண்டுநின் குரைகழல் அடைந்தேன்**
**பொற்றி ரள்மணிக் கமலங்கள் மலரும்**
**பொய்கை சூழ்திருப் புன்கூர் உளானே"**
(திருப்புன்கூர்ப்பதிகம் 4)

சூதன் = மூர்க்க நாயனார், சிலந்தியே குற்றம் செய்தது என்பதைப் புலப்படுத்தச் சிலந்தி என்ற பெயரைக் குறித்தார்.

திருமங்கையாழ்வார்:

நாலாயிர திவ்ய பிரபந்தத்தில் நாச்சியார் கோயில் என வழங்கும் திருநறையூர் தலப் பாசுரத்தில், திருமங்கையாழ்வார்

**"இருக்கிலங்கு திருமொழிவாய்**
**எண்டோள் ஈசற்கு**
**எழில்மாடம் எழுபது**
**செய்து உலகம் ஆண்டான்"**

என்று கோச்செங்கணானையும், சிவனுக்காக இவர் கட்டிய எழுபது மாடக் கோயில்களையும் போற்றினார்.

நாலாயிர திவ்ய பிரபந்தம் கோச்செங்கணான் என்ற சிவனடியாரை (நாயனாரை)த் தவிர வேறு எந்தச் சிவனடியாரையும் குறிப்பிடவில்லை என்பது ஒரு தனிச்சிறப்பாகக் குறிக்கத்தக்கது.



**கோச்செங்கணானின் பிறவி வரலாறு**

மாலியவான்:

திருக்கயிலையில் சிவகணத்தவருள் மாலியான், புட்ப தந்தன் என்ற இருவர் இருந்தனர். சிவத் தொண்டுகள் செய்வதில் இவர்கள் இருவரும் மாறுபட்டனர். அதனால் ஒருவரையொருவர் சபித்துக் கொண்டனர்.

மாலியவான் புட்பதந்தனை யானையாகுமாறு சபித்தான்.

எதிராகப் புட்பதந்தன் மாலியவானைச் சிலந்தியாகுமாறு சபித்தான். சாபங்கள் பலித்தன.



# திருமுறை முற்றோதல் விழா

சென்னை நுங்கம்பாக்கம் அருள்மிகு அகத்தீசுவரர் பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் திருக்கோயிலில் 19.2.2006 அன்று திருமுறை முற்றோதல் விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. நம் இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையாளர் **திருமிகு த.பிச்சாண்டி இ.ஆ.ப** அவர்கள் இவ்விழாவில் பங்கேற்றுச் சிறப்பித்தார்கள். திருக்கோயில் செயல் அலுவலர் தெ.ப.ஏகாம்பரம் எம்.ஏ. அவர்கள் விழா ஏற்பாடுகளைச் சிறப்புறச் செய்திருந்தார்கள்.

இறைவனின் ஆணைப்படி இருவரும் யானையாகவும், சிலந்தியாகவும் மறுபிறவி எடுத்தனர். ஒரு திருத்தலத்தில் பிறந்தனர். யானை பிறந்து வழிபட்ட அத்திருத்தலத்திற்கு ''ஆனைக்கா'' என்ற பெயர் உண்டானது.

பழம் பிறப்பின் காரணமாக இப்பிறப்பிலும் ''அவர்கள்'' தொடர்ந்து சிவத்தொண்டுகளைச் செய்தனர். வழக்கம் போல அடிக்கடி முரண்பட்டுக் கொண்டனர்.

### பெரிய புராணம்

சிலந்தி:

திரு ஆனைக்காவில் (ஜம்புகேசுவரம்) ஜம்பு மகரிஷி ஜம்பு (நாவல்) மரமாகித் தவம் புரிந்தார். அதில் அச்சிலந்தி வாழ்ந்தது. மரத்தின் கீழே சிவன் எழுந்தருளினார்.

சிலந்தி சிவலிங்கத்தின் மேல் இலைகள், சருகுகள் முதலியன விழாதபடி தன்வாய் நூலினால் ஒரு விதானப்பந்தலைக் கட்டி அன்புடன் வழிபட்டது.

சிலந்தி வேய்ந்த பந்தலை அறுத்துத் தூய்மைப்படுத்திய யானை லிங்கத்திற்கு அபிடேகமும் செய்து பூசித்தது.

சிலந்தி பந்தலை ஆக்கியும், அதை யானை அழித்தும் இவ்வாறே அவை மாறி மாறிச் செய்த வழிபாடுகள் சில நாள்கள் நடைபெற்றன. இந்தப் பக்திப் போட்டியில் சிலந்தி அதிகமாகப் பாதிக்கப் பட்டது.

ஒருநாள் ஆத்திரமடைந்த சிலந்தி யானையின் தும்பிக்கையில் புகுந்து, மண்டையில் நுழைந்தது; எட்டுக்கால்களால் குடைந்தது. வலியைப் பொறுக்க முடியாத யானை தரையில் மண்டையை மோதிச் சிலந்தியைக் கொன்றது; தானும் மாண்டது. இரு பிறவிகளில் சிவத் தொண்டுகளைத் தொடர்ந்து செய்த யானை வீடுபேறடைந்தது.

இரட்டைக் கொலைகள் நிகழ்வதற்குச் சிலந்தி முதற்காரணமாக அமைந்தது. ஆகவே அது மீண்டும் ஒரு முறை பிறக்க வேண்டிய நெருக்கடி ஏற்பட்டது. அந்த மறுபிறவியும் உயர்வானதாம்.

கோச்செங்கணான்:

சுபதேவன் என்ற சோழன் கமலவதி என்ற மனைவியுடன் சோழ நாட்டை அரசாண்டான். அவர்களுக்கு மகப் பேறில்லை. இருவரும் தில்லையம்பதிக்குச் சென்று மகப்பேறு அருளுமாறு இறைவனை வழிபட்டனர். இறைவனருள் முன்னிற்கச் சிலந்தி, அவர்களுக்கு மகன் கோச்செங்கணானாகப் பிறந்தது. கமலவதி மாண்டாள்.

சுபதேவன் அறநெறிப்படி அரசாண்டு கோச்செங்கணானிடம் அரசாட்சியை ஒப்படைத்துத் தவநெறியைச் சார்ந்து வீடு பேறடைந்தான். தொடர்ந்து கோச்செங்கணான் சிறப்புற அரசாண்டான்.

வெற்றிச் சிறப்புகள் : திருமங்கையாழ்வார் அருளிய திருநறையூர் மாடக்கோயில் பாசுரங்களால் (திவ்ய பிரபந்தம் 1498 - 1507) கோச்செங்கணானின் வெற்றிப் பெருமைகளை அறிய முடிகிறது. அவன் உலகமாண்ட தென்னாடன்; வடபுலக்கோன்; தென் தமிழன் வடபுலக்கோன் (தொண்டை நாட்டை வென்றவன்); கழல் மன்னர் மணி முடிமேல் காகமேறத் தெய்வ வாள் வலங்கொண்ட சோழன்; படை மன்னர் உடல்கள் துண்டுபடத் தேரோட்டிய கோச்சோழன். (பாசுரங்கள் 3-6; 8;9)

''தென்னவனாய் உலகாண்ட செங்கணான்'' என்று சுந்தரமூர்த்தி சுவாமிகளும் இவனைப் பாராட்டினார்.

சிவத்தொண்டுகள்:

கோச்செங்கணான் திருவானைக்காவில் சிவனுக்கோர் ஆலயம் எழுப்பினான்.

தில்லைக் கோயிலைச் சிறப்புற மேம்படுத்திக் கட்டினான். இவனுக்குப் பிறகு தில்லைப் பெருங்கோயில் மிக்க புகழைப் பெற்றது.

தில்லை வாழ் அந்தணர்களுக்கு மாளிகைகள் பலவற்றைப் புதுப்பித்தும், கட்டியும் அளித்தான்.

சோழன் சிவனுக்காக எழுபது மாடக் கோயில்களைச் சோழ நாட்டில் எழுப்பித்தான் என்பதைத் திருமங்கை யாழ்வாரின் பாசுரத்தால் அறிய முடிகிறது. (திருநறையூர் மாடக்கோயில், பாசுரம் 5) அவன் கட்டிய விஷ்ணு மாடக் கோயில்கள் மூன்று என்பர்.

முற்பிறவியில் யானை தனக்குச் செய்த இடையூறுகளைக் கருத்திற் கொண்டு யானை கோயிலுக்குள் நுழைய முடியாதபடி மாடக் கோயில்களை நிறுவினான்.

மாடக்கோயில் அல்லது பெருங்கோயில் கட்டுமலையின் மேல் சற்று உயரமாக அமைந்திருக்கும்; யானை மேலே ஏறமுடியாதபடி சிறுபடிகளையும், உள்ளே நுழைய முடியாதபடி சிறுவாயில்களையும் கொண்டிருப்பதைக் காணலாம்.

காலம் : கோச்செங்கணானின் காலம் கி.பி. 5ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியாம்.



## நட்சத்திர மரங்கள் நடும்விழா

சென்னை திருவல்லிக்கேணி அருள்மிகு திருவேட்டீஸ்வரர் ஆலயத்தில் உள்ள நந்தவனத்தில் ''நட்சத்திர மரங்கள்'' நடும்விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் **திருமிகு பி.சி.ராமசாமி** அவர்களும், நம் அறநிலையத் துறை ஆணையாளர் **திருமிகு த.பிச்சாண்டி** இ.ஆ.ப. அவர்களும் இவ்விழாவில் பங்கேற்றுச்சிறப்பித்தார்கள்.

# நட்சத்திர மரங்கள்

மரங்களுக்கும் மனித வாழ்க்கைக்கும் பல தொடர்புகள் உள்ளன. ஒவ்வொரு நட்சத்திரத்திற்கும் ஒரு மரம் உள்ளது.

ஒவ்வொரு நட்சத்திரத்திற்கும் உரிய மரங்கள் 'நட்சத்திர மரங்கள்' என்று அழைக்கப்படுகின்றன.

பெரியவர்கள் குழந்தைகள் அனைவரும் அவர்கள் நட்சத்திரங்களுக்கு உரிய மரங்களை நடுவது அவர்களுக்கு அனைத்து நன்மைகளையும் தரும்.

மேலும் இந்த நட்சத்திர மரங்கள் இயற்கை சூழ்நிலையைப் பாதுகாப்பதில் பெறும் பங்கு ஆற்றுகின்றன. உதாரணமாக வேம்பு மரம் (வேப்ப மரம்) சுத்தமான காற்றை வெளிப்படுத்துகிறது. இதனைச் சுவாசிப்பதால் உடலில் உள்ள வியாதிகள் குணமாகின்றன. எனவே நம் முன்னோர்கள் கோயில்களில் வேப்ப மரத்தையும் அரசமரத்தையும் சேர்த்து வளர்த்தார்கள்.

ஆகவே ஒவ்வொருவரும் அவரவருக்கு உரிய நட்சத்திர மரங்களை அவரவரது பிறந்த நாளிலோ/திருமணநாளிலோநட்டால் நம்சுற்றுப்புற சூழ்நிலையைப் பாதுகாப்பதில் நம் பங்கை செலுத்த முடியும்.

நட்சத்திர மரங்களை வளருங்கள்.

இயற்கைக்கு நம்மால் ஆன உதவியை செய்வோம். பசுமையான சூழ்நிலையை உருவாக்குவோம்.

**பசுமையான சூழ்நிலை - வளமான வாழ்வு**

உங்கள் நட்சத்திர மரங்களை வாங்க -
வளர்க்க விரும்புவோர்
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
**"STAR TREE"** - எஸ். கிருஷ்ணமூர்த்தி
போன் : 24611643, செல் : 98401 51053

| வ.எண் | நட்சத்திரம் | மரங்கள் |
|---|---|---|
| 1. | அசுவினி | எட்டி |
| 2. | பரணி | பெருநெல்லி |
| 3. | கிருத்திகை | அத்தி |
| 4. | ரோகிணி | நாவல் |
| 5. | மிருகசீர்ஷம் | கருங்காலி |
| 6. | திருவாதிரை | திப்பிலி |
| 7. | புனர்பூசம் | மூங்கில் |
| 8. | பூசம் | அரசமரம் |
| 9. | ஆயில்யம் | புன்னை |
| 10. | மகம் | ஆலமரம் |
| 11. | பூரம் | பலாசு |
| 12. | உத்திரம் | அரளி |
| 13. | ஹஸ்தம் | காட்டுமா |
| 14. | சித்திரை | வில்வம் |
| 15. | சுவாதி | மருதம் |
| 16. | விசாகம் | விளா |
| 17. | அனுஷம் | மகிழம் |
| 18. | கேட்டை | குட்டிபலா |
| 19. | மூலம் | ஆச்சா |
| 20. | பூராடம் | வஞ்சிக்கொடி |
| 21. | உத்திராடம் | பலா |
| 22. | திருவோணம் | எருக்கு |
| 23. | அவிட்டம் | வன்னி |
| 24. | சதயம் | கடம்பு |
| 25. | பூரட்டாதி | மாமரம் |
| 26. | உத்திரட்டாதி | வேம்பு |
| 27. | ரேவதி | இலுப்பை |



## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிக்கை : திருவொற்றியூர் அருள்மிகு வடிவுடையம்மன் கோவிலுக்கு ரூ.30 லட்சம் செலவில் புதிய தேர்

சென்னைக்கு அருகில், திருவள்ளூர் மாவட்டத்தில் மேலூர், திருவொற்றியூர், திருமுல்லைவாயில் ஆகிய இடங்களில் அமைந்துள்ள 3 கோவில்கள் ஒவ்வொரு வகையில் சிறப்பு பெற்று விளங்குகிறது.

இங்குள்ள தனிக்கோவில் அம்மன்கள், மூவகை சக்தியான இச்சா சக்தி, ஞான சக்தி மற்றும் கிரியா சக்தி ரூபமாக, நின்ற கோலத்தில் காட்சி தருகின்றன.

மேலூர் திருவுடைநாயகி அம்மன் இச்சா சக்தியாகவும், திருவொற்றியூர் வடிவுடைநாயகி அம்மன் ஞானசக்தியாகவும், திருமுல்லைவாயில் கொடியிடை நாயகி அம்மன் கிரியா சக்தியாகவும் விளங்கி, பக்தர்களுக்கு அருள் பாலித்து வருகின்றனர்.

பவுணர்மி தினத்தில் காலை வேளையில் திருவுடைநாயகி அம்மனையும், உச்சிப் பொழுதில் வடிவுடைநாயகி அம்மனையும் மாலை வேளையில் கொடியிடை நாயகி அம்மனையும் தரிசித்து வழிபடுவதால், தங்களது கவலைகளும், அச்சமும் நீங்கி, ஞானமும் செல்வமும் பெருகும் என்ற நம்பிக்கையுடன், பக்தர்கள் இத்திருத்தலங்களை ஒரே நாளில் வழிபடுவதை வழக்கமாக கொண்டு அம்மனுடைய அருளை பெறுகின்றனர்.

பொன்னேரி வட்டம், மேலூரில் அமைந்துள்ள திருவுடையம்மன் உடனுறை திருமணங்கீஸ்வரர் திருக்கோவிலுக்குக் கொடி மரம், புதிய மடப்பள்ளி, பிரகாரத்தலம் ஆகியன அமைக்க வேண்டுமெனவும், மற்றும் திருவுடையம்மன் மூலவர் பீடத்திற்கு வெள்ளிக் கவசம் அமைக்க வேண்டுமெனவும் என்னிடம் பக்தர்கள் கோரிக்கைகள் விடுத்தனர்.

பக்தர்களின் இந்தக் கோரிக்கைகளை ஏற்று, மேற்கண்ட பணிகளுக்கு ஆகும் மொத்த செலவுத்தொகையான 7லட்சம் ரூபாயை திருக்கோவில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதியிலிருந்து வழங்க நான் ஆணையிட்டுள்ளேன்.

திருவொற்றியூரில் அமைந்துள்ள வடிவுடையம்மன் உடனுறை தியாகராஜ சுவாமி திருக்கோவிலில், பல ஆண்டுகளாக மரத் தேர் சிதிலமடைந்து தேரோட்டம் தடைப்பட்டுள்ளது எனவும், இத்திருக்கோவிலுக்குத் திருத்தேரோட்டம் செய்ய புதிய மரத்தேர் ஒன்று தேவை எனவும் பக்தர்கள் என்னிடம் கோரிக்கை வைத்தனர். பக்தர்களின் இந்தக் கோரிக்கையினை ஏற்று, 30 லட்சம் ரூபாய் செலவில் புதிதாக மரத்தேர் ஒன்றினை செய்திட நான் ஆணையிட்டுள்ளேன்.

திருமுல்லைவாயிலில் அமைந்துள்ள கொடியிடையம்மன் உடனுறை மாசிலாமணீஸ்வரர் திருக்கோவிலில் அமைந்துள்ள வசந்த மண்டபத்தைப் பழுது பார்த்து, புதுப்பிக்க வேண்டும் என என்னிடம் பக்தர்கள் வேண்டுகோள் விடுத்தனர். பக்தர்களின் இந்த வேண்டுகோளினை ஏற்று வசந்த மண்டபத்தைப் பழுது பார்த்துப் புதுப்பிக்க ஆகும் செலவுத் தொகையான 2 லட்சம் ரூபாயை இந்து சமய அறநிலையத் துறையின் பொது நல நிதியிலிருந்து வழங்கிட நான் ஆணையிட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

### அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில்தங்கரதம் வெள்ளோட்டம் மற்றும் சுற்றுப்பிரகார மண்டபம் திறப்பு விழா



மங்களகரமான பார்த்திப ஆண்டு மாசித்திங்கள் 18 ஆம் நாள் (02.03.2006) வியாழக்கிழமை மாலை 6.30 மணிக்குப் புதிதாகச் செய்யப்பட்டுள்ள தங்கரதம் வெள்ளோட்டமும், தங்கரத சுற்றுப் பிரகார மண்டபம் திறப்பு விழாவும் சிறப்புற நடைபெறவுள்ளது.

சிறப்பாசிரியர் மற்றும் வெளியிடுவோர் : திருமிகு **த. பிச்சாண்டி,** இ.ஆ.ப., ஆணையர்.
: தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை - 600 034. தொலைபேசி : 28334811/12/13
ஆசிரியர் : கவிஞர் டாக்டர். த. அமிர்தலிங்கம், எம்.ஏ., பி.எச்.டி.,
அச்சிடுவோர் : குணசுந்தரி மாடர்ன் ஆர்ட் பிரிண்டர்ஸ், சென்னை -21. தொலைபேசி : 25967929



# அருள்மிகு திருக்குற்றாலநாதசுவாமி திருக்கோயில், குற்றாலம்

**தென்காசி வட்டம் : திருநெல்வேலி மாவட்டம். போன் : 627802**

சுவாமி : அருள்மிகு திருக்குற்றாலநாதர்

அம்பாள் : அருள்தரும் குழல்வாய்மொழி ஸ்ரீ பராசக்தி

தலவிருட்சம் : குறும்பலா

திருத்தல மகிமை : இறைவன் குறும்பலா ஈசனாக காட்சியளிக்கிறார்.

அகத்திய முனிவருக்கு அருங்காட்சி தந்து அருளியது.

இறைவன் திருநடனமாடிய சித்ரசபை பெருமைமிக்கது.

(திருஞான சம்பந்தர்) பாடல் பெற்ற பாண்டிய நாட்டு திருத்தலங்கள் 14-ல் இதுவும் ஒன்று. 27 நட்சத்திரங்களுக்கும், 27 மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளது.

தினசரிப் பூஜைகள் : மகுடா ஆகமப்படி எட்டுக் காலங்கள்.

திருவிழாக்கள் : சித்திரை விசு, ஐப்பசி விசு, மார்கழி திருவாதிரைத் திருநாள்.

கட்டண விவரங்கள் :

| | |
|---|---|
| தேங்காய் உடைப்பு | : ரூ. 1.00 |
| அர்ச்சனை | : ரூ. 2.00 |
| பன்னீர் | : ரூ. 2.00 |
| அபிஷேகக் கட்டணம் | : ரூ. 25.00 |

அன்னதானம் : 23.03.2002 முதல் முதலமைச்சரின் அன்னதானத் திட்டம் சிறப்பாக நடைபெற்று வருகிறது. நாள் ஒன்றுக்கு 100 நபர்களுக்கு அன்னதானம் வழங்க ரூ.1200/-ம் வருடத்தில் ஒரு நாள் அன்னதானம் வழங்கக் கட்டளை முதலீடு ரூ. 15,000/-

திருப்பணிகள் : சித்ரசபையின் புராதன மூலிகை ஓவியங்கள் புதுப்பிக்கும் திருப்பணி நடைபெறவுள்ளது.

இணையதளம் : www.courtrallamtemple.org.

மின்அஞ்சல் : courtrallanathar@sancharnet.in

தொலைபேசி : 04633 - 283 138.

**திரு. சி. ஜெகதீசப் பெருமாள்,** எம்,ஏ,பி,எல்.,
செயல் அலுவலர்(கூ.பொ.)

**திரு.பி.கோ.பிச்சையா பிள்ளை**
தலைவர், அறங்காவலர் குழு

**அறங்காவலர்கள்**

திரு. பி. முத்துசாமி, திரு. எஸ். லாட சன்னியாசி
திரு. எஸ். பாண்டியன், திருமதி எஸ். ஜெயந்தி

பதிவு எண் : TN / PMG / (CCR) / 707 / 06-08 / WPP No. 451/06-08



# அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி



## பங்குனி உத்திரத் திருவிழா அழைப்பிதழ்

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவிலில் 2006 ஆம் ஆண்டு பங்குனி உத்திரத் திருவிழா வருகிற 05-04-2006 ஆம் நாள் தொடங்கி 14-04-2006 ஆம் நாள் முடிய நடைபெற உள்ளது.

### முக்கிய திருநாட்கள் விவரம்

05-04-2006 கொடியேற்றம் - காலை 9.30 மணி முதல் 10.30 மணிக்குள்.
10-04-2006 திருக்கல்யாணம் - மாலை 6.00 மணிக்கு மேல் 7.00 மணிக்குள்.
வெள்ளி ரதம் புறப்பாடு இரவு 9.00 மணிக்கு.
11-04-2006 பங்குனி உத்திரத் திருத்தேர் மாலை 4.30 மணிக்கு.
14-04-2006 இரவு தங்கக்குதிரை வாகனத்தில் திருவுலா - திருவிழா நிறைவடைதல்.

### தரிசன வழி விபரங்கள்

| | | |
|---|---|---|
| 1. பொது தரிசனம் வழி | - | கட்டணம் இல்லை |
| 2. சிறப்பு அனுமதி வழி | - | ரூ.20/- திருவிழா நாட்களில் மட்டும் |
| 3. தனிவழி சிறப்புக் கட்டணம் | - | ரூ.200/- திருவிழா நாட்களில் மட்டும் |

### பஞ்சாமிர்தம்

இத்திருக்கோயிலில் விசேசபிரசாதமான அபிசேகப் பஞ்சாமிர்தம், மலை வாழைப்பழம், முதல்தர[illegible] கரும்புச் சர்க்கரை, பேரீச்சை, நெய், கல்கண்டு, தேன், ஏலக்காய் முதலிய பொருட்களைத் தரமான முறையில் இயந்திரம் மூலமாகச் சுத்தமாகத் தயாரிக்கப்பட்டு சுகாதாரமான டப்பாக்களில் அடைக்கப்பட்டு 500-கிராம் எடை உள்ளது ரூ.25/- மற்றும் 30/- வீதம் திருக்கோயில் பஞ்சாமிர்த விற்பனை நிலையங்களான 1. மலைக்கோயில் தெற்கு வெளிப்பிரகாரம் 2. மலைக்கோயில் வடக்கு வெளிப்பிரகாரம், 3. வின்ச் நிலையம் அருகில் - மேற்கு கிரிவீதியில், 4. மங்கம்மாள் மண்டபம் அருகில், மற்றும் 5. பாதவிநாயகர் கோயில் ஆகிய ஐந்து விற்பனை நிலையங்களில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இறையன்பர்கள் பஞ்சாமிர்தப் பிரசாதத்தைப் பெற்று இறையருள் பெற அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

### அன்னதானம்.

இத்திருக்கோயிலில் அன்னதானத்திட்டம் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. பக்தர்கள் ரூ.2500/- செலுத்தினால் ஒரு நாளைக்கு மட்டும் 200 நபர்களுக்கும், ரூ.1500/- செலுத்தினால் ஒரு நாளைக்கு மட்டும் 100 நபர்களுக்கும் உபயதாரர்கள் பெயரில் மலைக்கோயிலில் அன்னதானம் பக்தர்களுக்கு வழங்கப்படும். மேலும் ரூ.25,000/- டெபாசிட் செலுத்தி 200 நபர்களுக்கு அல்லது ரூ.15,000/ டெபாசிட் செலுத்தி 100 நபர்களுக்குக் குறிப்பிட்ட ஒரு நாளைக்கு மட்டும் அன்னதானம் வழங்க அன்னதானக் கட்டளையில் பங்கு பெறலாம்.

### பக்தர்களுக்குச் சிறப்பான ஏற்பாடுகள்

1. பழனி நகராட்சிப்பள்ளியில் தற்காலிகப் பேருந்து நிலையம் - கிழக்கு கிரிவீதியில் திருக்கோயில் தற்காலிகப் பேருந்து நிலையம் - சிறப்புப் பேருந்து வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.
2. பாதயாத்திரை வழித்தடங்களில் நிழற்பந்தல், குடிநீர் வசதி, மின்வசதி, குளியல் அறை மற்றும் கழிப்பறை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
3. ரெட்டியார் சத்திரம். ஒட்டன் சத்திரம். சத்திரப்பட்டி, ஆயக்குடி ஆகிய இடங்களில் உள்ள காவடி மண்டபங்கள், புதுதாராபுரம் - தாச்சநாயக்கன்பட்டி தங்கும் மண்டபம் ஆகிய இடங்களில் குளியல், கழிப்பறை வசதிகளுடன் பாதயாத்திரை பக்தர்கள் தங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சாலையோரங்களில் நிழற்பந்தல் வசதிகள் செய்யப்பட்டுள்ளது.
4. பாதயாத்திரை வழித்தடங்களில் நடமாடும் மருத்துவ வசதிகள் முதலுதவி வசதியுடன் - அனைத்து இடங்களில் பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
5. மலைக்கோயில், குடமுழுக்கு நினைவரங்கம் மற்றும் பல இடங்களில் அன்னதான வசதி செய்யப்பட்டுள்ளது.
6. வடக்குக் கிரிவீதியிலுள்ள குடமுழுக்கு நினைவரங்கில் பக்தர்களுக்கு 5.4.2006ம் தேதி முதல் 14.4.2006 தேதி முடிய மாலை 5.30 மணி முதல் இரவு 11.00மணி முடிய கலை நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.
7. நவீன வசதிகளுடன் கூடிய தங்கும் அறைகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன.
8. பக்தர்கள் வசதிக்காகக் கம்பிவட ஊர்தி மற்றும் வின்ச் இயக்கப்படுகிறது. மலைக்கோயில் செல்லும் பக்தர்களுக்கு உதவிடும் பொருட்டு யானைப்பாதை வழியாகச் சென்று, படிவழியாக இறங்கும் முறையில் ஒருவழிப்பாதை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
9. பக்தர்களுக்கு சரியான தகவல்கள் கிடைக்கப் பெறுவதற்கு ஆங்காங்கே ஒலிபெருக்கி அறிவிப்புகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எஸ்.வி.பாலசுப்பிரமணியம்,
அறங்காவலர் குழுத் தலைவர்

த.சுந்தரம், பி.ஏ.பி.எல்
இணை ஆணையர்/நிர்வாக அதிகாரி

அறங்காவலர்கள் :

கே.எஸ்.என்.வேணுகோபாலு, வி.ஜெயபால், ஆர்.பி.பரமசிவம், சி.கௌரியம்மாள்